# சோஷலிஸம்

## தத்துவமும் நடைமுறையும்



★ சர்வாம்சப் பந்தோபஸ்து அனைவருக்கும் சமமானது

★ சோஷலிஸக் கருத்துக்களின் செல்வாக்கு

★ முதலாளித்துவ நாடுகளில் பெண் தொழிலாளர்கள்

1988
4

1988 (148) 4

# சோஷலிஸம்

## தத்துவமும் நடைமுறையும்

சோவியத் சித்தாந்த அரசியல் பத்திரிகைகளின் மாதாந்த மஞ்சரி

நொவஸ்தி செய்தி ஸ்தாபனத் தயாரிப்பு

27, சேர் ஏர்னஸ்ட் டி சில்வா மாவத்தை, கொழும்பு 7 லுள்ள சோவியத் சோஷலிஸக் குடியரசுகள் ஒன்றிய தூதரகத் தகவல் பிரிவின் தலைவர் ஏ ஓ. வொல்கோவ் அவர்களால் கொழும்பு-10, 93, மாளிகாகந்த ரோட், மருதானையிலுள்ள பிரகதி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## உள்ளடக்கம்


**இன்றைய விவகாரங்கள்**

புரட்சிகர பெரொஸ்த்ரொய்காவுக்குச் சித்தாந்த மறுசீரமைப்பை வழங்கல் — 03

**மார்க்ஸியம்-லெனினியமும் எமது காலமும்**

ஆர். உல்யானேவ்ஸ்கி
லெனினும் கிழக்குலகும் — 14

சோஷலிஸக் கருத்துக்களின் செல்வாக்கு — 18

**சமாதானம், படைக் குறைப்புக்கான வாய்ப்புக்கள்**

அபிவிருத்திக்காகப் படைக்குறைப்பு — 22

பியதோர் விளாதிமிர்ஸ்கி
சர்வாம்சப் பந்தோபஸ்து அனைவருக்கும் சமமானது — 26

**வரலாறும் அனுபவமும்**

விக்தர் டெனிலோவ்
கூட்டுறவுமயமாக்கத்தின் ஊற்றுக்கண்களும் அதன் படிப்பினைகளும் — 31

**சோவியத் சமுதாயம்: வாழ்வும் பிரச்னைகளும்**

சோவியத் யூனியனில் மறுசீரமைப்பு: இதுவரை சாதிக்கப்பட்டிருப்பது என்ன? — 35

சோவியத் யூனியன் வேலையில்லாப் பிரச்னைக்கு முகங்கொடுக்கிறதா? — 40

**சோஷலிஸமும் இன்றைய உலகும்**

புறவெளியைக் கண்டறிவதற்கான வாய்ப்புகள் — 44

**இளைஞர் உலகம்**

இளைஞர் பற்றி லெனின் — 48

மேற்குலகில் அரசியல் அதிதீவிரவாதமும் இளம் மக்களும் — 52

**வளரும் நாடுகளின் இன்றைய பிரச்னைகள்**

யூரி சம்பத்யான்
இன்றைய தேசிய-ஜனநாயகப் புரட்சிகள் — 56

**அரசியல் கல்வி**

சோஷலிஸத்துக்கு மாறிச்செல்வதற்கான மார்க்கங்கள் — 60




# புரட்சிகர பெரொஸ்த்ரொய்காவுக்குச் சித்தாந்த மறுசீரமைப்பை வழங்கல்

**சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டியின் பொதுச் செயலாளர் மிகையில் கொர்பச்சேவ், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டியின் முழு நிறைவுக் கூட்டத்தில் 1988 பெப்ரவரி 18ஆந் திகதி உரையாற்றினர். அவர் ஆற்றிய உரையின் சர்வதேச அம்சங்கள் பற்றிய பகுதியைக் கீழே தருகிறேம்.**

கடந்த காலத்தின் அனுபவத்தையும் படிப்பினைகளையும் எமது மனங்கள், ஆன்மாக்களுக்குள் உணர்வு பூர்வமாக ஊடுருவச் செய்துள்ள நாம், நாம் வாழுகின்ற சமுதாயம் சம்பந்தமான விஷயங்களைப் புரிந்து கொள்ளவும் ஆராயவும் வகைப்படுத்தவுமான கடமையை வரித்துக் கொண்டுள்ளோம். இதே விதத்தில்தான், மிகத் துல்லிதமாய் சர்வதேச அடிப்படையிலும் கூட நாம் பிரச்னையை முன்வைத்தோம். எமது நாடு வாழ்ந்துவரும் உலகைச் சுற்றியுள்ள விஷயங்களைப் புரிந்துகொள்வது, விஷயங்களை வகைப்படுத்துவது, ஆராய்வது என்பதே இப்பிரச்னை. ஸ்தூலமான பகுப்பாய்வின் காரணமாக, பெரோஸ்த்ரோய்க்காவுக்கும் புதிய அரசியல் சிந்தனைக்குமான அவசியத்துக்கு நாம் வந்துள்ளோம். இவ்விதம், இன்றைய எதார்த்தங்களை விஞ்ஞான ரீதியில் அங்கீகரிப்பதற்

கான ஓர் முன்னேற்றம் காணப்பட்டிருக்கிறது; இதை ஓர் புதுமைப் புனைவான, இயக்காற்றல்மிக்க கொள்கையாக உருமாற்றமுடியும்.

மனிதகுலத்தின் உயிர்வாழ்வுக்குத் தவிர்க்க முடியாத நிபந்தனை என்ற வகையில், நியூக்லியர் ஆயுதங்கள் இல்லாமல் சமாதானத்தை நோக்கி முன்னேறுவதற்கான ஓர் வேலைத்திட்டத்தை 1986 ஜனவரி 15-ம் திகதி விடுத்த அறிக்கையில், கட்சிக் காங்கிரசுக்கு முன்னமேயே, நாம் பிரகடனம் செய்தோம். சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 27-வது காங்கிரஸ், இரண்டு நூற்றாண்டுகளின் திரும்பு முனையில சமாதான சகவாழ்வுத் தத்துவத்தைப் பற்றி விரிவான விளக்கத்தைக் கொடுத்தது, சர்வாம்சம் தழுவிய சர்வதேசப் பந்தோபஸ்து அமைப்பு பற்றிய கருத்தமைப்பை ஸ்தாபித்தது.

படைக்குறைப்புத் துறையில் நாம் மேற்கொண்டுள்ள முன்முயற்சிகளும், சர்வதேச அரங்கில் எம்முடைய ஏனைய திட்டவட்டமான நடவடிக்கைகளும் திடீரென உருவாக்கப்பட்டவை அல்ல, கடந்த காலத்தில் நிகழ்ந்தவை போன்று, பல்வேறு நடவடிக்கைகளுக்கும் அல்லது ஏனைய அரசியல் முயற்சிகளுக்கும் மேற்குலகின் நடவடிக்கைகளுக்கும் ஓர் சாதாரண பதில் நிகழ்வாக இருக்கவில்லை. அவை, ஓர் உறுதி வாய்ந்த, நிலையான விஞ்ஞான அடிப்படையில் வைக்கப்பட்டிருக்கின்றன.

இவ்விதம். ஜெனீவாவுக்கும் பின்னர் ரெய்க்ஜாவிக்கிற்கும் இறுதியாக, நியூக்லியர் ஆயுதங்களில் குறைப்புக்களைச் செய்யும் முதலாவது ஒப்பந்தத்தை-நடுத்தர வீச்சு மற்றும் குறுகிய வீச்சு ஏவுகணைகள் பற்றிய உடன்படிக்கையை- உயர் மட்டத்தில் அமெரிக்காவுடன் கைச்சாத்திடுவதற்காக வாஷிங்டனுக்கும் பாதை அமைக்கப்பட்டது. அதன் முக்கியத்துவத்தை மதிப்பீடு செய்கையில், 1985-ம் ஆண்டின் ஏப்ரல் முழு நிறைவுக் கூட்டத்தினல் துவக்கி வைக்கப்பட்டு, 27-வது காங்கிரஸில் தத்துவார்த்த ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் ஆதாரப்படுத்தப்பட்ட கொள்கையின் பிழையற்ற தன்மையை அது நடைமுறையில் நிரூபணம் செய்யும் என்பதை நாம் அனைவரும் ஒப்புக்கொள்வோம் என நான் நம்புகிறேன் வாஷிங்டனில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை மெய்யான படைக்குறைப்பின் துவக்கம் என நாம் கூறுகிறோம். அது அவ்வாறே இருக்க வேண்டுமென நாம் விரும்புகிறோம். அதற்கு ஓர் தொடர்ச்சி இருக்கக்கூடிய வகையில் நாம் பாடுபடுவோம்.

ஆனல், இது நியூக்லியர் அச்சுறுத்தலுக்கு எதிரான போராட்டத்தில் சோஷலிஸ நாடுகளும் ஏனைய முற்போக்கு மற்றும் அமைதிபூர்வ நாடுகளும், வெகுஜன இயக்கங்களும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனமும் அணிசேரா இயக்கமும் மேற்கொண்ட முயற்சிகளின் ஓர் பலாபலன், ஓர் வெளிப்பாடு ஆகும்; புகழ்பூத்த விஞ்ஞானிகள், கலாசாரத் தொழிலாளர்கள், திருச்சபையினரின் வீறூர்ந்த முயற்சியின் பெறுபேறு ஆகும் அரசியல்வாதிகள் பலர், வாணிப உலகினதும் மற்றும் இராணுவ வட்டாரங்களினதும் விவேகமுள்ள செயலூக்கமான நிலைப்பாட்டின் பின் விளைவாகும்.

சமாதானத்தின் உள்ளாற்றல் அமைந்துள்ள மட்டத்தின் ஒருவித குறியிலக்கே இந்த உடன்படிக்கை. புதிய சிந்தனை மனங்களைக் கவ்விப்பிடித்திருப்பதோடு மாத்திரமன்றி, உலக அரசியலிலும் செல்வாக்கு செலுத்தத் தொடங்கியிருக்கிறது என்பதற்கு இது சான்று. உடன்படிக்கையை வகுப்பது கூட, திரட்டப்பட்டுள்ள அனுபவம் சம்பந்தமாய் போதனை தருவது சிரமம் மிக்கவையாக இருந்தாலும் கூட, சமத்துவமுள்ள பேச்சுக்களின் பயனுள்ள தன்மை நிரூபிக்கப்பட்டிருக்கிறது; இதில் பாஸ்பர நலன்களும் அக்கறைகளும் வழுவாமல் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

ஆனல், உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டமை மன நிறைவுக்கான காரணமல்ல. சித்தாந்தவியல் போராட்டம் உள்ளிட, படைக்குறைப்புக்கும் சமாதானத்துக்குமான போராட்டத்தில் ஒரு புதிய கட்டத்தை அது திறந்து வைத்திருக்கிறது என்று கூறமுடியும். இருப்பினும், மனநிறைவின் ஆரம்ப நாட்கள் முடிந்த உடனேயே, சோவியத் யூனியனுடன் உறவுகளை மாமூலாக்குவதை எதிர்ப்பவர்கள் வெறிக் கூச்சலைக் கிளப்பத் தொடங்கினர், உடன்படிக்கையை அங்கீகரிப்பதற்கு எதிரான போராட்டத்தில் தமது சக்திகளை அணிதிரட்டினர். அமெரிக்க நிர்வாகம் தனது சொல்லுக்கு ஏற்ப உடன்படிக்கையை உயர்த்திப் பிடித்துவருகிறது. இருந்தபோதிலும், அது ஒரே சமயத்தில் அதிதீவிர வலதுசாரிகளின் சோவியத்—விரோத, கம்யூனிஸ விரோதக் கூச்சலை எதிரொலிப்புச் செய்கிறது. சொற்களில் மாத்திரமல்ல. ''சோவியத் அச்சுறுத்தலின் அதிகரிப்பு'' என்ற அதேமுகாந்திரத்தின் கீழ் இராணுவவாதப் பாணியிலும் சில நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. எமது எல்லைகளில் ஆத்திரமூட்டல்களை நாம் மீண்டும் காண்ணுற்றோம். அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்டபோது உருவாகிய சூழ்நிலைக்கு எதிராக இது இருக்கிறது.

நேட்டோவின் ஐரோப்பியப் பகுதியில் இராணுவ வாத நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்க அளவு பெருகியுள்ளன. உடன்படிக்கையின் கீழ் அழிக்கப்படவுள்ள ஏவுகணைகளுக்கு ஓர் ''ஈடுகட்டுதலை'' ஒழுங்கு செய்வதில் அவர்கள் அவசரம் அவசரமாகச் செயல்படுகின்றனர். குறிப்பாக, கடலிலும் ஆகாயத்திலும் உள்ள இதர நியூக்லியர் ஆயுதங்களின் ''ஏனைய'' வகைகளை நவீனமாக்கவும் அதிகரிக்கவும் அவர்கள் திட்டமிடுகின்றனர்; இவை உடன்படிக்கையில் உள்ளடங்கவில்லை என்று வெறித்தனமாகக் கோருகின்றனர், வருங்காலத்திலும் கூட நியூக்லியர் ஆயுதங்களைக் கைவிடுவதற்கான மறுப்பை லண்டனிலிருந்தும் பாரிசிலிருந்தும் பிரசல்ஸிலுள்ள நேட்டோ தலைமையகத்திலிருந்தும் நாம் மீண்டும் கேட்கிறோம்.

உடன்படிக்கையின் அங்கீகாரம் மற்றும் கேந்திர ஆயுதங்களில் குறைப்புக்கள் செய்வது பற்றிய பேச்சுக்கள் குறித்த

அறிக்கைகள். பிரிட்டனும் பிரான்சும் நியூக்லியர் ஆயுதங்களின் பெருக்கத்தைப் பெருவீதத்திலும் முடிவுக்குக் கொண்டுவர எண்ணியிருக்கவில்லை என்ற அறிக்கைகளுடன் இணைந்து வருகின்றன. இது முற்றிலும் மாறுபட்டது. குறிப்பாக, உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதன் பின்னர், நேட்டோ நாடுகள் இருதரப்பு மற்றும் பலதரப்பு இராணுவ ஒருங்கிணைப்புத் துறையில் தமது செயல்பாட்டை அதிகரித்துள்ளன.

எம்முடைய பெரோஸ்த்ரோய்கா பற்றி உயர்மட்டப் பிரமுகர்கள் விடுத்துள்ள ஸ்தூலமான அறிவித்தல்கள், மீண்டும் ''கம்யூனிஸ்ட் விஸ்தரிப்பு'' பற்றிய பேச்சுக்களை மாற்றாகக் கொண்டிருக்கின்றன; ''யாரோடு செயலாற்றுவது'' என்பதை மறந்துவிடக் கூடாது என்றும், இன்றைய சோவியத் தலைமை தனது அமைப்பையும் அதன் ''புன்னகை இராஜதந்திரத்தையும்'' மாற்றப் போவதில்லை என்பது ஐயத்தை ஏற்படுத்துகிறது என்றும் எச்சரிக்கை செய்யப்படுகிறது.

சோவியத் யூனியனுடன் எந்தவிதமான பேச்சுக்களையும் நடத்துவதில் அர்த்தமில்லை என்று அவர்கள் மீண்டும் வலியுறுத்துகின்றனர்; அது நம்பிக்கைக்கு அருகதையற்றது என்று கோருகின்றனர் பிற்போக்கான கடைக்கோடி நிலையிலுள்ள சோவியத்-விரோத சக்திகள் வலுப்படுத்தப்பட்டு வருகின்றன. நானாவிதமான ''ஆய்வாளர்களும்'' கிரெம்ளினியலாளர்களும் கிலியூட்டும் பரிந்துரைகளைத் தமது அரசாங்கங்களுக்குச் செய்கின்றனர்; பொது மக்களைக் குழப்பமடையச் செய்கின்றனர்; படைகுறைப்புப் போக்கு தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டால் மேற்கிற்கு ஏற்படக் கூடிய ''அழிவுகரமான பின்விளைவுகள்'' பற்றி அச்சுறுத்துகின்றனர்.

பெரோஸ்த்ரோய்கா மற்றும் படைக்குறைப்புப் பிரச்னைகள் மீதான சித்தாந்தப் போராட்டத்தை எமதுபிரதேசத்துக்குள், எமக்கு மத்தியில் கொண்டு வருவதற்கான முஸ்தீபுகள் தீவிரமாக்கப்படுகின்றன.

சோவியத் சமுதாயத்திலும் சோவியத் தலைமையிலும் போராட்டம் வளர்ந்து வருவது பற்றியும், பெரோஸ்த்ரோய்காவுக்கும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் அயல்துறைக் கொள்கைக்கும் ஏற்கனவே ''எதிர்ப்பு'' தோன்றி, வளர்ந்து வருவது பற்றியும் ஆத்திரமூட்டக் கூடிய கண்டுபிடிப்புகளை ''வானொலிக் குரல்கள்'' பரப்பி வருகின்றன.

கட்சி வரித்துக்கொண்டுள்ள குறிக்கோள்களைச் சாதிக்கும் வாய்ப்பில் ஸ்திரமின்மையையும் அவநம்பிக்கையையும் விதைப்பதற்கு அவை விரும்புகின்றன. இந்த சோஷலிஸ விரோத ஆத்திரமூட்டல் கேந்திரங்கள் சோவியத் யூனியனின் பால் மாத்திரம் அத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கவில்லை — நாம் இதை நன்றாகக் காண்கிறோம்.

சோஷலிஸத்தை மேலும் முழுநிறைவாக்கும் இயக்காற்றல்மிக்க போக்குகள் நடைபெற்றுவரும் ஏனைய சோஷலிஸ நாடுகளுக்கு எதிராகவும் அவை புதிய கவிழ்ப்பு நடவடிக்கைகளின் முறைகளை அவசரம் அவசரமாக உருவாக்கி வருகின்றன. தேசியத் தனித்துவங்களைத் தக்க முறையில் கணக்கில் எடுத்துச் செயல்படக்கூடியதாக அவை ஒவ்வொன்றைப் பற்றியும் திட்டவட்டமான முறைகளைக் காண விழைகின்றன.



அவை கவலை கொள்ளத் தொடங்கியிருப்பது ஏன் என்பதை நாமறிவோம். இராணுவத் தொழில் தொகுப்பின் இலாபங்களுக்கும், அதன்மூலம் சிறப்பான வாழ்க்கை வாழுகின்றவர்களின் இலாபங்களுக்கும் படைக்குறைப்பு ஓர் அச்சுறுத்தலாக இருப்பது மாத்திரம் அதற்குக் காரணமல்ல; அவை சோஷலிஸக் கருத்துக்களின் வளர்ச்சி ஆற்றலினது புத்தெழுச்சியை இட்டும், உழைக்கும் மக்களின் சமுதாயம் என்ற வகையில் சோஷலிஸத்தின் கௌரவம் அதிகரித்து வருவதையிட்டும் அஞ்சுகின்றன. எமது நாட்டின்பாலான சிறப்பான உணர்வுகள் மீண்டும் வளர்ந்து வருவதனாலும் சோவியத் யூனியன் பற்றிய ஒரு புதிய ''கண்டுபிடிப்பு'' இடம்பெற்று வருவதனாலும் அவை கிலி கொண்டுள்ளன.

இவை யாவும், ''எதிரித் தோற்றத்துக்குக்'' குழிபறிக்கின்றன; சோவியத்-விரோத மற்றும் ஏகாதிபத்தியக் கொள்கையின் சித்தாந்தவியல் அடிப்படைகள் இவைதான். கடந்த தஸாப்தங்களின்போது பிற்போக்குவாதிகளுக்குச் சிறப்பாகப் பணிபுரிந்த யாவும் இப்போது சிதறி வருகின்றன. அதன் காரணமாகவே ''வலதுசாரிகள்'' சோவியத் யூனியனின் முன்முயற்சி மற்றும் சமாதானக் கொள்கையையிட்டு மகிழ்ச்சி இல்லாமல் இருக்கின்றனர். எனவேதான், வேகத்தைப் பெற்றுவரும் படைக்குறைப்புப் புகைவண்டியை நிறுத்துவற்கு அவர்கள் விரும்புகின்றனர்.

எமது சித்தாந்தப் பணியிலும் பிரச்சாரத்திலும் அவற்றைக் கண்டு பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

தோழர்களே, சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டியின் முன்னைய முழுநிறைவுக் கூட்டத்தின் பின்னரான காலகட்டத்தின்போது, ஐஎன்எப் உடன்படிக்கையுடன் சேர்ந்து மற்றுமொரு குறிப்பிடத்தக்க சர்வதேச சம்பவமும் நடந்தது: ஆப்கானிஸ்தான் பிரச்னைக்குத் தீர்வு காணும் மார்க்கத்திலான நடவடிக்கைகளே அவை. அது சோவியத் மக்களிடம் நீண்டகாலமாகவே அக்கறையை ஏற்படுத்தியது, ஆழமான தாக்கத்தைக் கொண்டிருந்தது.

1985-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்ற சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டியின் முழுநிறைவுக் கூட்டத்துக்குப் பின்னர், இந்நிலைமை பற்றி ஓர் துல்லிதமான, நேர்மையான ஆய்வை அரசியல் குழு மேற்கொண்டு, அதிலிருந்து ஒரு வழியைக் காணவும் துவங்கியது. ஆனால் எல்லாப் பிரச்னைகளையும் நடைமுறையில் தீர்வு காண்பதும், அப்பிராந்திய மோதலின் முக்கிய முடிச்சுக்கள் அனைத்தையும் அவிழ்ப்பதும் சாதாரண விஷயமல்ல என்பது

நிரூபிக்கப்பட்டிக்கிறது. அதற்கான வாய்ப்புகள், 1985-ம் ஆண்டின் பிற்பகுதியில் நஜிபுல்லாவின் தலைமையிலான மெய்யான தேசிய சக்திகள் ஆப்கானிஸ்தானின் அரசியல் மேடையில் தோன்றியதன் பின்னரே உருவாகின. ஆப்கானிஸ்தான் ஓர் அமைதியான, நடுநிலையான, அணிசேரா ராஜ்யமாக இருக்கும் விதத்தில் மோதல்களுக்குத் தீர்வுகாணும் வெளிப்புற முன்தேவைகளும் தோன்றின. இது ஆப்கான் மக்களின் நலன்களுக்கும் இசைவுபடுகிறது. இது எமது ராஜ்ய நலன்களுக்கும் கூட இசைவுபடுகிறது.

பத்து நாட்களுக்கு முன்னர் விடுக்கப்பட்ட அறிக்கையை நீங்கள் நன்கறிவீர்கள். சரியாகச் சொன்னால், நாம் எவ்வாறு செயல்படவிருக்கிறோம், நாம் எதில் நம்பிக்கை கொண்டுள்ளோம் என்பது பற்றி சகலதையும் அது கூறுகிறது. அது எமது மக்களதும் எமது நேச அணிகள், நண்பர்களதும் புரிந்துணர்வையும் அங்கீகாரத்தையும் பெற்றிருக்கிறது. ஆப்கான் பிரச்னையைத் தமது சுயநல நோக்கங்களுக்காக மேலும் பயன்படுத்துவதற்கு எண்ணியுள்ளவர்களை, புதிய எதார்த்தங்களுடன் அது எதிரிடுகிறது. மேலும் அவர்கள் இந்த எதார்த்தங்களுக்கு இசைவுபட வேண்டியிருக்கும். ஆப்கானிஸ்தானைச் சுற்றிய நிலைமைக்கு அரசியல் தீர்வுகாண்பதில் பங்குகொள்ளும் அனைவரதும் மெய்யான நிலைப்பாட்டை, முன்னுள்ள மாதங்கள் காட்டும். நிச்சயமாக, தோழர்களே, ஆப்கானிஸ்தான் மோதலில் எமது பங்கேற்பு மிகவும் சிக்கலான பிரச்னை; பெரோஸ்த்ரோய்காவின் போக்கில் நாம் வெற்றிகொள்வது, புதிய சிந்தனையை நடைமுறைக் கொள்கையாக முரணின்றி அமல் செய்வது பற்றிய பல்வேறு அம்சங்களை அது சம்பந்தப்படுத்துகிறது. இருந்தபோதிலும், அரசியல் குழு சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 27 வது காங்கிரசினது கோட்பாட்டு ரீதியான போக்கிற்குக் கண்டிப்பாக இசைவுபடும் வகையில் இப் பிரச்னையில் செயல்பட்டு வருகிறது என்பதே இப்போதுள்ள முக்கிய மான விஷயம்.

புதிய சிந்தனை சம்பந்தமான பிரச்னைகளை விஞ்ஞான ரீதியில் வகுத்துரைப்பதும், அவற்றின் சித்தாந்தவியல் ஆதாரப்படுத்துதலும் ஆரம்பக் கட்டத்திலேயே உள்ளன என்பதை பொதுவாகக் கூறவேண்டும்.

கிளாஸ்நொஸ்ற்றின் விரிவுபடுத்தல் நிலைமைகளில் இந்த பெரும் பணி ஆற்ற வேண்டியிருக்கும், அனைத்தையும் தாமாகவே கவனித்துக் கொள்வதும், நிகழ்வுகள் பற்றி சிறப்பான புரிந்துணர்வைப் பெறுவதும், சர்வதேச உறவுகளில் யுத்த அச்சுறுத்தலுக்குத் தேசந்தழுவிய இயக்கத்தில் தேர்ச்சித் திறனுடன் பங்கேற்பதும் சோவியத் மக்களின் இயல்பான விருப்பமாகும்.

வெளிநாட்டுக் கொள்கைப் பிரச்சாரம், விளக்கம் மற்றும் சர்வதேசப் பிரச்னைகளை ஆராய்வது ஆகியவற்றில் தகவல் மற்றும் அறிவுத்துறை மட்டத்தை உயர்த்தும் பொருட்டு தேவையான எல்லா நிலைமைகளும் உருவாக்கப்பட்டு வருவது இதற்காகத்தான்.



எமது சித்தாந்தவியல் செயற்பாட்டின் மிகவும் முக்கியமான பகுதி இது எமது கருத்துக்கள் மற்றும் உள்நாட்டு ஒழுங்கிலான மாற்றங்கள் சம்பந்தமாக இருப்பதுபோலவே, புதிய சிந்தனையின் சாராம்சம் சம்பந்தமாகவும் சில பேரின் மனங்களில் குழப்பநிலை உள்ளது.

இது ஆச்சர்யமானதல்ல. பிரச்னைகள் மிகவும் கணிசமானவை, முனைப்பாகக் கூடியவை; அவற்றைச் சுற்றி போராட்டமும் துவங்கப்பட்டிருக்கிறது.

பிரமாண்டமான புலப்பாட்டை, உலக வரலாற்றின் மகத்தான இயக்கவியல்களால் உருவாக்கப்பட்டுள்ள ஒருவித முரண்நகையை நாம் கண்ணுற்று வருகிறோம், அதில் பங்கெடுத்தும் வருகிறோம்.

உலக மட்டத்தில் பல்வேறு போக்குகளது உள்ளியல்பான சர்வதேசியமயமாக்கம், நாடுகள் மற்றும் மக்களின் தேசிய, பிராந்திய வளர்ச்சிக்கான தேர்வுகளின் எண்ணிக்கை மற்றும் பன்முகத் தன்மையின் பெருக்கத்துடன் இணைந்து வருகிறது, இவை இரண்டுமே உலகின் ஒருமைப்பாட்டை வலுப்படுத்துவதற்குப் பங்களிக்கின்றன.

அத்தகைய விஷயங்கள் தத்துவார்த்த ரீதியில் இன்னமும் கருத்தாழமுடன் ஆராயப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டியுள்ளன. இது தத்துவார்த்த ரீதியிலும் பல பக்க விளைவுகளைக் கொண்ட கடமையாகவுள்ளது.

நாம், ‘‘நலன்களின் சமநிலை’’யின் கருத்தமைப்பையும் பரஸ்பர சமத்துவமுள்ள பந்தோபஸ்தையும் அதிகார அரசியல் அடிப்படையாகக் கொண்டிருக்கும் இராணுவக் கருத்தமைப்புக்குச் சமநிலைப்படுத்துகிறோம்.

எம்முடைய ராஜ்ய நலன்கள், தேசங்களதும் வேறெந்த சமுதாயத்தின் உழைக்கும் மக்களதும் நலன்களுக்கு முரண்படவில்லை, சமாதானத்தைப் பேணிக் காக்காமல், முன்னேற்றமே இருக்காது; இக்கடமைக்குத் தீர்வு காணும் முகாந்திரத்துக்கு வெளியே எவரொருவரின் நலன்கள் பற்றி பேசுவதும் விவேகமற்றது.

சர்வதேச அரசியலிலிருந்து யுத்தத்தை விலக்கும் போராட்டம், இலட்சோப லட்சம் உயிர்களை யாவற்றுக்கும் மேலாக உழைக்கும் மக்களைப் பாதுகாப்பதற்கான போராட்டமாகும்; ஏனெனில் உழைக்கும் மக்களே எந்தவொரு போர்களிலும் முதலாவதாகவும் கடுமையாகவும் பாதிக்கப்படுகின்றனர்.

எதிரெதிரான அமைப்புகளைக் கொண்ட நாடுகளுடன் மாமூலான வணிக உறவுகளை ஸ்தாபிப்பது ஏனைய விஷயங்களுக்கு மேலாய், சோவியத்—விரோதத்தையும் ஆட்டங்காணச் செய்கிறது: இவ்விதம் ஜனநாயக ஆதாயங்கள் மற்றும் அபிலாஷைகள் மீதான—பிற்போக்கின் நிர்ப்பந்தத்தைப் பலஹீனப்படுத்துகிறது.

இராணுவவாதத்தைத் துடைத்தழிப்பது - நாம்கூர்மை

யாக எழுப்பி, காரியார்த்தபூர்வமாக, எதார்த்தமான விகத்தில் நாம் அணுகுகின்ற பிரச்னை, இது ஆகவும் பிற்போக்கான சக்திகளைக் கட்டுப்படுத்துவதற்கு உதவுவதோடு மாத்திரமன்றி, எல்லா இடங்களிலும் கூடுதல் தொழில்களையும் உறுதி செய்கிறது.

உழைக்கும் மக்களுக்கான நேரடிப் பயன்களுக்கு மேலதிகமாக, உழைக்கும் வெகுஜனத்தினரின் பொருளாதார ரீதியிலும் சமூக ரீதியிலும் செயலூக்கமுள்ள பகுதியின் வியாபிதத்திலும் இது முடிவடையும்; அதுவே ஜனநாயகம் மற்றும் முன்னேற்றத்தின் சமூக ஆதாரத்தளமாகும்.

புதிய உலகப் பொருளாதார நியதியை நிர்மாணிக்கவும் மூன்றாம் உலகில் கடுமையாகவுள்ள நெருக்கடிப் புலப்பாட்டை வெற்றி கொள்ளவுமான முயற்சி, அனைத்துக் கண்டங்களையும் சேர்ந்த இலட்சோப லட்சம் மக்களுக்கு மானிட உயிருக்குப் பெறுமதி வாய்ந்த நிலைமைகளை உருவாக்குவதையும் வரலாற்றை உருவாக்குவதில் அவர்களின் ஈடுபாட்டையும் இறுதியில் பொருள்படுத்துகிறது இது உலக முன்னேற்றம், சுயாதீனமான வளர்ச்சி மற்றும் புரட்சிகர மாற்றத்தின் பாரிய காரணியுமாகும்.

உலகப் போக்குகளின் சிக்கலான தன்மையும் உலக அரசியலின் ''முயற்சிகள், திருப்பங்கள்'' முன்னுணர்ந்து கூற முடியாமையும், பெரும் சர்வதேச வரவேற்பைத் தூண்டிவிட்டுள்ள எம்முடைய சமாதானத் தாக்குதலின் வீச்சும் அதிவிசேட இயல்பும், சமாதான சகவாழ்வில் ஆர்வமில்லாத ஸ்தூலமான வெல்லற்கரிய சக்திகளின் எதிர்ப்பும், இறுதியாக, இவை யாவற்றையும் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டியதன் அவசியமும்—எமது அரசியல் பொறுப்புணர்வை மாத்திரமன்றி, தத்துவார்த்தப் பொறுப்புணர்வையும் கூட உணர்த்துகின்றன.

மார்க்ஸிஸ்ட்டுகளும் அவர்களின் எதிர்ப்பாளர்களும் இப்போது முகங்கொடுக்கும் ஜீவாதாரமான தத்துவார்த்தப் பிரச்னை, மெய்யான உலக வளர்ச்சியின், அதைத் தொடர்ந்து அரசியலின் வர்க்க மற்றும் சர்வவியாபக மானுடக் கோட்பாடுகளை இரண்டறக் கலப்பதாகும்.

அக்டோபர் புரட்சியின் 70-ம் ஆண்டு விழா பற்றிய அறிக்கை, இதுசம்பந்தமான கோட்பாட்டு ரீதியான நிலைபாடுகளை வகுத்துரைத்தது

ஓர் அடிப்படைப் பிரச்னை முன்வைக்கப்பட்டிருக்கிறது; 20-ம் நூற்றுண்டின் திருப்பத்தில் உலகில அடைந்துள்ள இடைச் சார்பு மற்றும் ஒருமைப்பாட்டு மட்டத்துடன், இன்றைய கட்டத்தில், ஏகாதிபத்தியத்தின் ஆகவும் அபாயகரமான வெளிப்பாடுகளைத் தடுக்கும் பொருட்டு அதனது இயல்பு மீது செல்வாக்கு செலுத்துவது சாத்தியமானதா?

புதிய சகாப்தத்தின் தனித்தன்மைகளையும் முக்கியமான அம்சங்களையும் பகுப்பாய்வு செய்ய ஆரம்பிக்கையில் சமூக விஞ்ஞானம் சம்பந்தமான எமது சிந்தனை உறுதியானதாக மாறியிருக்கிறது. உலக மக்களின் பரந்த பகுதியினர் எமது பெரோஸ்த்ரோய்காவை மனிதகுலம் முழுவதற்கும் பயன்தருவதாகக் கருதுகின்றனர், நாம் தொடங்கியுள்ள உருமாற்றத்தையும் எம்முடைய அயல்துறைக் கொள்கையையும் பயனுள்ளதென நோக்குகின்றனர், அதைப் பலர் பகிரங்கமாகவும் ஊக்கத்துடனும் ஆதரிக்கின்றனர்.

நாம் உலகம் முழுவதிலும் வருங்காலத்திற்கான நம்பிக்கைக்குப் புத்தெழுச்சியூட்டியுள்ளோம். இது பெரும் தார்மீகச் சொத்து.

நாம் அதைப் பேணிக்காக்கவும் நாம் எல்லா இடங்களிலும் உணர்கின்ற நம்பிக்கையை நியாயப்படுத்தவும் வேண்டும்.

மானிடக் காரணியுடன் நேரடியாக இணைந்துள்ள விஷயத்தின் ஒரு அம்சம் இது; இதன் ஆணிவேர்கள் எமது காலத்தின் ஸ்தூலமான போக்குகளுக்குள் ஊடுருவச் செய்கின்றன.

ஏகபோக மூலதனத்திலும், அது ஆதிக்கம் செலுத்தும் சமுதாயத்திலும் நிகழ்ந்துள்ள அடிப்படை மாற்றம் மற்றுமொரு அம்சம்.

தவிரவும், இன்றைய உலக வளர்ச்சிக்குத் தீர்க்கமான முக்கியத்துவத்தைப் பெற்றுள்ள முற்றிலும் புதிய காரணிகள் தோன்றியுள்ளன. நியூக்லியர் யுத்த அச்சுறுத்தல், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பவியல் புரட்சியின் பிரமாண்டமான சமூக மற்றும் சர்வதேச பின்விளைவுகள், சர்வ வியாபகமான புவியமைவில் அச்சுறுத்தல், தகவல் துறையிலும் நாளுபித மான தொலைத் தொடர்புகளிலும் அடிப்படையிலேயே புதியதான நிலவரம் ஆகியனவே இவை.

பாஸிஸம் மற்றும் இரண்டாம் உலகப்போரின் கொடிய அனுபவத்தினது பின்விளைவுகள் பல நாடுகளது மக்கள் மீதும் நிலையான மனோவியல் தாக்கத்தைக் கொண்டிருக்கின்றன.

இவையாவும் ''யுத்தத் தரப்புக்கும்', ஏகபோக முதலாளித்துவத்தின் கட்டமைப்புக்குள் ''சமாதானத் தரப்புக்கும்'' இடையேயான பரஸ்பர உறவு, லெனினின் சொற்களில் கூறுவதானால் ''குரூரமான முதலாளித்துவம், ஆக்கிரமிப்புத்தன்மை வாய்ந்த முதலாளித்துவம், பிற்போக்கான முதலாளித்துவத்துக்கும் மேற்குலகில் ஆதிக்கம் செலுத்தும் வர்க்கத்தின் ''போர் எதிர்ப்பு முகாம்களும்கும்'' இடையேயான பரஸ்பர உறவை மாற்றுகிறது.

சுருக்கமாகச் சொன்னால், எமது புரட்சியின் ஒரு பெரும் கட்டத்தை நாம் துவங்கியிருக்கும் சர்வதேச நிலைமைகள், அதன் முன்னைய கட்டங்களின் போது இருந்தவற்றைவிட அடிப்படையிலேயே மாறுபடுகின்றன.

புதிய சிந்தனை என்பது, பொருள் முதல்வாத இயக்கவியல முறையைப் பயன்படுத்தி ஆராய்வதற்கு உட்படும் புதிய எதார்த்தங்கள் பற்றிய சரியான புரிந்துணர்வாகும். அத்தகைய ஆய்விலிருந்து பெறப்படும் முடிவுகளையும், புரட்சிகர லெனினிய அனுபவம் மற்றும் மார்க்

ஸியம்—லெனினிபத்தின் அடிப்படைக் கோட்பாடுகளின் பின்னணியில் சோதிக்கப்பட்ட முடிவுகளையும் பொருள்படுத்தும்.

புதிய சிந்தனை, ஏகாதிபத்தியம் பற்றிய லெனினியத் தத்துவத்தின் மீது, ஏகாதிபத்தியத்தின் இயல்பு பற்றிய லெனினின் ஆய்வு மீது சார்ந்திருக்கிறது. இப்பிரச்னையில் அது ஒருபோதும் ''சிறப்பானதாக'' மாறாது; இதில் எமக்கு எந்தவிதமான கற்பனைகளும் இல்லை.

புதிய சிந்தனையின் நடுநாயகமாக விளங்குவது சர்வதேச ரீதியில் பகிர்ந்து கொள்ளப்பட்ட புதிய பாத்திரமாகும். அவற்றின் முக்கியத்துவத்தை கார்ல் மார்க்ஸும் விளாதிமீர் லெனினும் வலியுறுத்தினர். அவை அவர்களது போதனைகளின் மனிதநேய இயல்பிலிருந்து முகிழும் பொது கணிப்பீடுகள் அல்ல. உலகில் சர்வதேசியமயமாக்கத்தின் போக்குகளது முக்கியத்துவத்தை வலியுறுத்துகையில், எமது மாபெரும் போதகர்கள் சர்வதேசிய ரீதியில் பகிர்ந்து கொள்ளப்பட்ட ஸ்தூலமான அடிப்படையை வெளிப்படுத்தினர். அவற்றை சமூக-வர்க்கப் பெறுமானங்களுடன் இயக்கவியல் ரீதியில் இரண்டறக் கலந்தனர். இவை யாவும் இப்போது நடைமுறைக் கொள்கையில் முனைப்பாக மாறிவருகின்றன.

கொள்கையின்பாலான இத்தேவை, காலத்தின் எதிர்மறையான மற்றும் உடன்பாடான போக்குகளினால் நிர்ணயிக்கப்படுகிறது; ஒரு புறத்தில், மானிட இனத்தின் ஜீவியத்துக்கு ஏற்படும் பிரம்மாண்டமான ஆபத்துக்கள் முனைப்பாகி வருவது மூலமும், உள்நாட்டு மற்றும் உலக அரசியலில் வெகுஜனங்களதும் பொதுவான ஜனநாயகக் காரணியினதும் அதிகரித்துவரும் பாத்திரத்தின் மூலமும் நிர்ணயிக்கப்படுகிறது.

இது அடிப்படையிலேயே, வித்தியாசமான சர்வதேச உறவுகளையும் அவசியப்படுத்துகிறது.

துல்லிதமாக எந்தவிதமான உறவுகள்? அடிநாதமாய், தவிர்க்க முடியாததாய் விளங்க வேண்டிய கோட்பாடு எது?

நாம் அதைக் கூறிவிட்டோம். அமெரிக்க ஜனாதிபதி முதல் தேசிய சுதந்திரத்துக்காகவும் சோஷலிஸத்துக்காகவும் போராடுகின்ற எமது நண்பர்கள் வரை—ஒவ்வொருவருக்கும் கேட்கத் தக்கதாக நாம் பிரகடனம் செய்து, திரும்பத் திரும்பக் கூறியிருக்கிறோம்.

ஒவ்வொரு மக்களுக்கும் ஒவ்வொரு நாட்டுக்கும் சமூக, அரசியல் தெரிவுக்கான சுதந்திரம் உண்டு என்பதை அங்கீகரிக்கும் கோட்பாடு இது.

இதில் சிறிதளவு கற்பனாவாதமும் கிடையாது இந்தக் கோட்பாட்டை அங்கீகரிக்கும் அவசியத்தை, ராஜதந்திர இணக்கங்கள் மூலம், பிரச்சாரத்தின் மூலம மேற்கை திருப்தியுறச் செய்ய முடியாது என்பதை நாம் நன்றாக அறிவோம்.

எமது நல்லெண்ணத்தின் முக்கியத்துவத்தையும் எமது சர்வதேச செயற்பாடுகளின் புதிய பாணியையும், எதிரெதி



ரான சமூக அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கிடையே சாத்தியமாகக் கூடிய குறைந்தபட்ச நம்பிக்கையைச் சாதிக்கும் பெயரால் தெளிவான, பயனுள்ள சம்பாஷணைக்கான எமது அபிலாஷையையும் அரசுகளுக்கிடையிலான உறவுகளைச் சித்தாந்தமயமாக்குவதை நாம் மெய்யாகவே கைவிடுவதையும், எவரொருவரின் பந்தோபஸ்தையும் பாதிக்காமல் சமத்துவத்தின் அடிப்படையில் விட்டுக் கொடுக்கின்ற தயார் நிலையையும் சுருக்கமாகச் சொன்னால், பெரோஸ்த்ரோய்க்கா வேளையில் சோவியத் அயல்துறைக் கொள்கைக்குக் குணாம்சமாகவுள்ள அனைத்தையும் சிறுமைப்படுத்துவது இருக்கக்கூடாது.

வெளியார் தலையீடு இல்லாமல் தேசங்கள் தாம் தேர்ந்தெடுத்துக் கொண்ட விதத்தில் வாழுவதற்கான உரிமையை அங்கீகரிப்பதுதான், மேலே கூறப்பட்ட புதிய சிந்தனையில் பிரதிபலித்துள்ள நவீன உலகின் எதார்த்தங்களாகும்.

தற்செயலாக, எமக்கு மாத்திரமன்றி, உலகின் எஞ்சிய பகுதிக்கும் பயனுள்ளதாக நாம் நினைக்கும் உலகின் சரியான பிரதிபலிப்புமாகும்.

இந்த எதார்த்தங்கள் அவற்றுக்கு இசைவுபடுமாறு விதிவிலக்கின்றி எல்லோரையும் நிர்ப்பந்திக்கிறது: ஏனெனில், இறுதிக் குறிக்கோள் மனிதகுலத்தின் உயிர்வாழ்வும் நாகரிகத்தின் உயிர்வாழ்வும் ஆகும். அவை, ஏகாதிபத்தியத்துக்கும் கூட ஒரு சில வரன்முறையை விதிக்கின்றன.

ஆக்கிரமிப்பு மற்றும் தலையீட்டுச் சக்திகளுக்கு வெல்லற்கரிய தடையாக இக்கட்டமைப்பை ஆக்குவதற்கு இசைவாகவுள்ள புதிய எதார்த்தங்களைக் கட்டிப் பெருக்குவதில், வலுப்படுத்துவதில் உருவாக்குவதில்தான் சோஷலிஸம், ஜனநாயகம் மற்றும் முன்னேற்றச் சக்திகளின் மிக முக்கியமான, வரலாற்றுப் பணி துல்லிதமாக உள்ளடங்கியுள்ளது என்று நான் கூறுவேன்.

சோவியத் யூனியனிலுள்ள நாம், எமது பெரோஸ்த்ரோய்கா மூலம் இந்த எதார்த்தங்களை உருவாக்கி வலுப்படுத்துகிறோம். எமது அயல்துறைக் கொள்கைச் சாதனைகள் அனைத்தும், சமாதானத்தைப் பேணிக் காக்கும் குறிக்கோளும் பெரோஸ்த்ரோய்காவின் வெற்றியில், எமது பணியில் வேரூன்றியுள்ளன தோழர்களே.

புதிய சிந்தனையை அடிப்படையாகக் கொண்ட ஓர் அயல்துறைக் கொள்கை இல்லாமல் ஓர் வெற்றிகரமான பெரோஸ்த்ரோய்கா சாத்தியமில்லை என்பதை எமது மக்கள் அனைவரும் நன்றாக உணர்வது முக்கியமானது.

# மார்க்ஸியம்-லெனினியமும் எமது காலமும்

**வி. இ. லெனினின் 118வது ஜனன தினம்**

பேராசிரியர்
ஆர். உல்யானேவ்ஸ்கி

# லெனினும் கிழக்குலகும்

---

**மாபெரும் தத்துவவியலாளரும் சோஷலிஸப் புரட்சியின் ஒழுங்கமைப்பாளரும் ஓர் புதிய வகையான கட்சி, உலகின் முதலாவது தொழிலாளர், விவசாயிகளின் ராஜ்யம் ஆகியவற்றின் பிதாமகருமான லெனின், ஏகாதிபத்தியத்தினதும் சோஷலிஸப் புரட்சிகளதும் யுகத்தில் வர்க்கப் போராட்டத்தின் அனுபவத்தைச் செழுமைப்படுத்தினார். சோஷலிஸம் பற்றிய கார்ல் மார்க்ஸ், ஏங்கல்சின் போதனைகளை மேலும் விருத்தி செய்தார். தேசிய-கலோனியல் பிரச்னை சம்பந்தமாகப் பாரிய தத்துவவியல் ஆதாரங்களை அவர் விருத்தி செய்தார். தேசிய சுதந்திரம், ஜனநாயகம் மற்றும் சோஷலிஸ மார்க்கத்தில், சமூக, முன்னேற்றப் பாதையில் கிழக்குலக மக்களின் முன்னேற்றம் பற்றிய கருத்துக்களின் அமைப்பை முன்வைத்தார்.**

---



## இன்றைய பெரும் புரட்சிகர சக்தி

முதலாளித்துவத்தின் கலோனியல் விஸ்தரிப்பு ஆரம்பமானது முதல் ஏகாதிபத்திய வல்லரசுகளின் ஆளும் வர்க்கத்தினருக்கும் ஒடுக்கப்பட்ட தேசங்களுக்கும் இடையே அடிப்படையான வடிவத்தில் நிலவிவந்த பகைமைசார் முரண்பாடு, ஏகாதிபத்தியத்தின் சகாப்தத்தில் ஓர் உண்மையான சர்வதேசப் பிரச்னையாக மாறியது. இதில்தான் உலகப் புரட்சிகரப் போக்கின் பாரிய முடிச்சுக்களில் ஒன்றை லெனின் கண்டறிந்தார். கலோனியல் நாடுகளை முதலாளித்துவ அமைப்பு முழுவதினதும் புரட்சிகர எழுச்சிகளின் ஊற்றுக்கண்ணாகவும் புரட்சிகரப் போர்த்தந்திரவியலின் பாரிய காரணியாகவும் விளக்கிக் கூறிய மார்க்ஸிஸ்ட்டுகளின் முதலாமவர் அவரே.

முதலாவது ருஷ்யப் புரட்சியின் (1905—1907) தாக்கத்தின் கீழும் குறிப்பாக, ருஷ்யாவில் 1917-ம் ஆண்டு நடைபெற்ற மகத்தான அக்டோபர் சோஷலிஸப் புரட்சியின் பின்னர் ''ஆசியாவின் எழுச்சி'' யுகத்தின் முன்னேற்றம் கண்டுவந்த தேசிய, ஏகாதிபத்திய விரோத இயக்கங்களிலே கிழக்குலகின் எல்லைகளைக் கடந்து செல்வதும் உலகளாவிய முக்கியத்துவத்தைப் பெறுவதுமான ஓர் புரட்சிகர உள்ளாற்றலை லெனின் இனங் கண்டார். கிழக்குலகின் மக்கள் முதலாளித்துவத்தின் செல்வாக்கிற்குட்பட்ட ஓர் மந்தமான சக்தி என்ற நிலையிலிருந்து மாறிவிட்டனர் என்றும் உலகம் முழுவதினதும் கதிப்போக்கின் மீது அதிகரித்த அளவு செல்வாக்கைச் செலுத்தும் ஓர் சுயாதீனமான, புரட்சிகரச் சக்தியாக அவர்கள் எழுச்சி பெற்றனர் என்றும் பிரகடனம் செய்த முதலாமவர் அவரே.

சார்பு நாடுகளின் தேசிய முதலாளித்துவ ஜனநாயக இயக்கங்களுக்கும் ஏகாதிபத்திய விரோத, முதலாளித்துவ விரோத போராட்டத்துக்கும் சோஷலிஸம் புரட்சியின் கதிப்போக்குகளுக்கும் இடையேயான தொடர்பை லெனின் கண்டுபிடித்தார் என்பதிலேயே லெனினின் புதுமைப் புனைவு உள்ளடங்கியிருக்கிறது. இவற்றை, சோஷலிஸம் என்ற ஒரேயொரு குறிக்கோளையும் திசைவழியையும் இறுதியில் பெற்றிருக்கக்கூடிய உலகப் புரட்சிகரப் போக்கின் பாரிய தோற்றுவாய்ப் பகுதியாக அவர் கருதினார்.

தேசவிமோசன இயக்கங்களுக்கு சோஷலிஸத்தின் ஆதரவு பற்றிய கருத்தை லெனின் வகுத்துரைத்தார். சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியினதும் சோவியத் அரசினதும் அயல்துறைக் கொள்கைச் செயற்பாட்டின் அடிநாதமாக விளங்கும் இக் கருத்து, பின்தங்கிய நாடுகளுக்கு ''புரட்சியை ஏற்றுமதி செய்வது'' பற்றிய அதிசூரத்தனக் கருத்தமைப்புகளுக்கு ஒத்து வராதது. இந்த இடதுசாரி போக்கை லெனின் வன்மையாக எதிர்த்

துப் போராடினூர். எந்தவொரு புரட்சியும் சமுதாயத்தின் உள் வளர்ச்சியின் விதிகளது பின் விளைவே என்பதை அவர் மிகத் தெளிவாக உணர்ந்திருந்தார், திரும்பத்திரும்ப வலியுறுத்தினூர்.

உலகின் முதலாவது சோஷலிஸ அரசு ஒடுக்கப்பட்ட அனைத்து மக்களதும் சுய—நிர்ணய உரிமையை நிபந்தனையில்லாமல் அங்கீகரித்தமை ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் உள்ள கோடிக்கணக்கான மக்களை அதனுடன் அணிசேரச் செய்தது. அத்தகைய அங்கீகரிப்பு, சுதந்திரத்திற்கான அவர்களது போராட்டத்திற்கு வலிமைமிக்க ஆதரவையும் ஒருமைப்பாட்டின் வெளிப்பாட்டையும் பொருள்படுத்தியதோடு மாத்திரமன்றி, பல்தேசிய நாடொன்றில் பெரியதும் சிறியதுமான அனைத்து இனங்களதும் பயனுக்காக தேசியஇனப் பிரச்னையை ஜனநாயக ரீதியில் எவ்வாறு தீர்ப்பது என்பதற்கு ஓர் உதாரணமாகவும் விளங்கியது. சோவியத் யூனியனில் தேசிய இனப் பிரச்னைக்குத் தீர்வு காண்பது உலகம் முழுவதிலும் பிரதிபலிப்புக்களை ஏற்படுத்தும் என்று லெனின் முன்னுணர்ந்து கூறினூர். சோவியத்துக்களது தேசத்தின் கொள்கை கிழக்குலகம் முழுவதற்கும் ஓர் முன்னுதாரணமாக இருக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினூர்.

## ஏகாதிபத்திய சகாப்தத்தின் புரட்சி

மார்க்ஸிய முறைமையிலே எமது யுகத்தின் விரைவாக மாறிவரும் நிலைமைகளுக்குப் பொருந்தச் செய்கின்ற திறமையில் லெனினின் மேதாவிலாசம் வெளிப்பாடு பெற்றது. அவர் ஒருபோதும் வழக்கொழிந்த முறைகளை பின்பற்றியதில்லை, ஆனூல் அவற்றை நசுக்கினூர், முதலாளித்துவத்தின் சமதையற்ற வளர்ச்சி அதிகரிப்பது காரணமாக அனைத்து வர்க்க, அரசியல் மற்றும் தேசிய முரண்பாடுகள் உக்கிரமடைவதையும், கலோனியல் மற்றும் அரைக் காலனிகள் உண்மையிலேயே மனிதகுலம் முழுவதன் எழுச்சியையும் பகுப்பாய்வு செய்த அவர் ஏகாதிபத்திய சகாப்தத்தில், குறிப்பாக, உலகின் முதலாவது சோஷலிஸ் ராஜ்யம் உருவாக்கப்பட்டதன் பின்னர் சோஷலிஸ மற்றும் பூர்ஷுவா புரட்சிகள், ''மரபார்ந்த'' தூய்மையான சமூகப் புரட்சிகள் ஓர் விதியாக இருப்பதைவிட விதிவிலக்காகவே இருக்கின்றன என்ற முடிவுக்கு வந்தார்.

இதிலிருந்து முன்சென்ற லெனின், ஏகாதிபத்திய சகாப்தத்தின் புரட்சி பற்றிய தத்துவத்தை வகுத்துரைத்தார். முதலாளித்துவமற்ற வளர்ச்சி பற்றிய லெனினின் கருத்தமைப்பு கலோனியல் மற்றும் சார்பு நாடுகளில் புரட்சிகரப் போக்கிற்கு அவர் மேற்கொண்ட ஆக்க பூர்வமான அணுகுமுறையின் பெறுபேருகும். அது விஞ்ஞான சோஷலிஸத்தின் பிதாமகர்களால் தத்துவார்த்த ரீதியில் முன்வைக்கப்பட்டது. அத்தகைய பரிமாணத்தை சாத்தியமாக்கும் தலையாய நிபந்தனையையும் அவர்கள் நிர்ணயித்தனர். அந்த நிபந்தனை பொருளாதார ரீதியில் வளர்ச்சியுற்ற நாடுகளின் வாகைசூடிய பாட்டாளியிடமிருந்து உதவி பெறுவதே அந்த நிபந்தனையாகும். அக்டோபர் புரட்சி முன்னைய காலனிகள் முதலாளித்துவத்தினூடாகச் செல்லாமல் நிலப்பிரபுத்துவத்திலிருந்து சோஷலிஸத்திற்கு மாறிச்செல்வதற்கான நிலைமைகளை உருவாக்கியது.

1960-ம் ஆண்டுகளின் தொடக்கத்தில் சோஷலிஸத்தினது வலிமையும் செல்வாக்கும் வளர்ச்சியடைந்தமை, அப்போது கலோனியல் நுகத்தடியைத் தூக்கியெறிந்த மக்களுக்கு புதிய வகையினதுக்கு—சோஷலிஸத் திசையமைவுக்கு இட்டுச் சென்றன.



இந்த வளர்ச்சிப் பாதை எமது காலத்தின் பாரிய சமூக அரசியல் காரணியாக மாறியிருக்கிறது. பெரும் எண்ணிக்கையிலான நாடுகள் இப்பாதையில் இப்போது பயணிக்கின்றன. விஞ்ஞான சோஷலிஸத்தை தேசவிமோசன மற்றும் கலோனியல் விரோத இயக்கத்துடன் இரண்டறக் கலக்கும் ஓர் நம்பகமான மார்க்கத்தை, முதலாளித்துவமற்ற வளர்ச்சியை பிரதிபலிக்கிறது என்ற லெனினின் ஹேஷ்யம் முழுமையாக நியாயபபடுத்தப் படுகிறது.

''நொவாயா இ நோவெய்ஸாயா ஸ்தோரியா''
சஞ்சிகையிலிருந்து

★

# சோஷலிஸக் கருத்துக்களின் செல்வாக்கு

**உலகின் இன்றைய தத்துவார்த்த நிலவரம் பொதுச் சிந்தனையின் மீது சோஷலிஸம் கொண்டுள்ள பெரும் தாக்கத்தின் மூலம் பெருமளவுக்குச் சிறப்பாக்கிக் காட்டப்படுகிறது. மனிதகுலத்தின் வளர்ச்சிமீது சோஷலிஸம் முனைப்பான செல்வாக்கைச் செலுத்துகிறது, அது சமாதானத்தின் காரணி, மக்களது பந்தோபஸ்துக்கு உத்தரவாதம் அளிப்பதாக விளங்குகிறது.**

ஆசிய, ஆபிரிக்க மக்கள் மீது சோஷலிஸம் கொண்டுள்ள செல்வாக்கு உண்மையிலேயே மகத்தானது. இப்போது புதிதாக விடுதலை பெற்ற நாடுகளில் முதலாளித்துவ வளர்ச்சி பற்றிய கருத்தமைப்பு பெரும் நெருக்கடிக்கு உட்பட்டிருக்கின்றது. எனவே அந்நாடுகளின் மக்கள், சோஷலிஸத்தின் குறிக்கோள்களது நடைமுறைச் சாத்தியப்பாட்டை நிரூபித்துள்ள நாடுகளின்பால் அதிகரித்த அளவுக்குத் திரும்புகின்றனர். ஆசிய, ஆபிரிக்க நாடுகளது அரசாங்கங்களின் ஏறக்குறைய மூன்றில் இரண்டு பங்கு அரசாங்கங்கள் தமது வளர்ச்சியின் இறுதிக் குறிக்கோளாக சோஷலிஸத்திற்கு ஆதரவாய் பேசியிருக்கின்றன என்பதைக் கூறுவது போதுமானது. விஞ்ஞான சோஷலிஸம் உள்ளிட்ட சோஷலிஸத்தின் போதனை மற்றும் நடைமுறை பற்றிய பல்வேறு விளக்கங்கள் இருந்து வருகின்றன என்பது உண்மையே. ஆயினும், வரலாற்று ரீதியில் கட்டுப்படுத்தப்பட்ட இந்த இயல்நிகழ்வு ஏதோவொரு வகையில் இந்நாடுகளது ராஜ்யக் கொள்கைகளில் செல்வாக்கூட்டுகின்றன என்பது மிகவும் முக்கியமானது.

## விஞ்ஞான சோஷலிஸமும் புரட்சிகர ஜனநாயகமும்



தேச விமோசனப் போராட்டத்தினது வளர்ச்சியின் தற்போதைய கட்டம், விஞ்ஞான சோஷலிஸத்தின் மார்க்கத்தில் புரட்சிகர ஜனநாயகத்தின் தத்துவார்த்தவியல் பரிமாணத்தின் மூலம் பிரத்தியேகப்படுத்திக் காட்டப்படுகிறது. இதற்குப் பல்வேறு காரணங்கள் உள்ளன. இவற்றில் ஒன்று ''தேசிய சோஷலிஸங்களை'' மதிப்பிழக்கச் செய்வதாகும். ஏனெனில், அவை பொதுவாகவே சார்புநிலை முதலாளித்துவ வளர்ச்சிக்கான மூடுதிரை மாத்திரமே. அவை நவ-காலனியாதிக்கத்தோடு சமரசம் செய்துகொள்வதையும் பொருளாதார, அரசியல் சுதந்திரத்துக்கான போராட்டத்தைப் பலஹீனப்படுத்துவதையும் பொருள்படுத்துகின்றன. மார்க்ஸிய—லெனினியக் கருத்துக்கள் புதிதாக விடுதலை பெற்றுள்ள நாடுகளின் முற்போக்கான பொதுமக்களின் அணிகளுக்குள் ஊடுருவல் செய்வது மற்றுமொரு காரணி. அகநிலைக் காரணியின் வளர்ந்துவரும் பாத்திரம், சோஷலிஸப் பாதைகளூடாக சமுதாயத்தை உருவாக்கும் அரசியல் தலைமையின் வடிவங்கள் மற்றும் முறைகளது முழுநிறைவாக்கம் மூன்றாவது அம்சமாகும்.

அல்ஜீரியத் தேச விமோசன முன்னணி, கினியா மற்றும் கேப் வெர்தே தீவுகளின் சுதந்திரத்துக்கான ஆபிரிக்கக் கட்சி, தன்சானிய புரட்சிக் கட்சி மற்றும் பிற தேசிய ஜனநாயக ஸ்தாபனங்களின் வேலைத் திட்டத் தாக்கீதுகளில் மார்க்ஸிய—லெனினியப் போதனையின் தாக்கத்தை இனங்காண முடியும். புரட்சிகர ஜனநாயகத்தின் இடதுசாரி பிரிவைப் பொறுத்த வரையில், உழைக்கும் மக்களின் முன்னணிப் படைக் கட்சிகளைப் பொறுத்த வரையில் இந்தப் போதனையை ஓர் ஒருங்கிணைந்த முழுமையாக உணரும் திசையில் ஓர் போக்கு வெளிப்பாடு பெற்றிருக்கிறது. அங்கோலா, மொஸாம்பிக், எதியோப்பியா மற்றும் பிற நாடுகளில் ஆட்சியிலுள்ள புரட்சிகர ஜனநாயகக் கட்சிகள் தம்முடைய உலகக் கண்ணோட்டத்திற்கும் விஞ்ஞான சோஷலிஸ தத்துவவியலுக்கும் இடையிலான பிரிக்கவொண்ணாத தொடர்பைப் பகிரங்கமாகவே சுட்டிக்காட்டுவது மாத்திரமன்றி புதிதாக விடுதலை பெற்ற நாடுகளின் திட்டவட்டமான நிலைமைகளுக்கு ஏற்ப பிரயோகிக்கும் வண்ணம் மார்க்ஸிய—லெனினியத் தத்துவத்தின் மூலாதாரமான கோட்பாடுகளின் அடிப்படையில் கட்சி வேலைத்திட்டங்களை வரைகின்றன.

விஞ்ஞான சோஷலிஸக் கருத்துக்கள் விடுதலை பெற்ற நாடுகளின் மதிப்பைப் பெற்று வருகின்றன என்பது, சமூக ரீதியில் செயலூக்கமுள்ள மக்கள் பகுதியினர் மார்க்ஸிய—லெனினிய நூல்களில் காட்டிவரும் பேரார்வத்தின் மூலம் ஊர்ஜிதம் செய்யப்படுகிறது சோஷலிஸத் திசையமைவு நாடுகளில் அதன் திட்டமிட்ட பரப்பலும் விஞ்ஞான சோஷலிஸத்தைப் பிரச்சாரம் செய்வதனை நோக்கமாகக் கொண்ட நடவடிக்கைகளுக்கு அதிகக் கவனத்தைச் செலுத்துவதும் ஆட்சியிலுள்ள புரட்சிகர ஜனநாயகக் கட்சிகளில் மார்க்ஸிய-லெனினியத் தத்துவமும் நடைமுறையும் வகித்துவருகின்ற பாத்திரத்திற்குச் சான்று பகர்கின்றன.

மார்க்ஸிய — லெனினியம் அதிகாரபூர்வ சித்தாந்தவியலாக ஏற்றுக்கொள்ளப்படும்போது, அதைப் பிரச்சாரப்படுத்துவதற்கான பணி ராஜ்ய மட்டத்தில் நடத்தப்படுகிறது. அரசியல் மற்றும் சித்தாந்தவியல் அமைப்புக்களின் தொகுப்பு இந்நாடுகளில் உருவாக்கப்பட்டிருக்கிறது. விஞ்ஞான சோஷலிஸத்தின் உணர்வில் சமூக விஞ்ஞானங்கள் போதிக்கப்படுகின்ற கட்சிப் பாடசாலைகளும் உள்ளன. மார்க்ஸிய—லெனினியக் கருத்துக்களைப் பரப்புவது கட்சி உறுப்பினர்களுக்கும் படை வீரர்களுக்கும் அரசியல் கல்வி புகட்டும் அமைப்பின் அடிநாதமாக விளங்குகிறது.

## கம்யூனிஸ்ட்டுகளதும் புரட்சிகர ஜனநாயகத்தினதும் கூட்டணி

அரசியல் அனுபவம் காட்டுவதைப் போன்று கம்யூனிஸ்ட்டுகளும் புரட்சிகர ஜனநாயகவாதிகளும் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான, சமாதானம், ஜனநாயகம் மற்றும் சமூக முன்னேற்றத்திற்கான போராட்டத்தின் மூலம் ஐக்கியப்பட்டிருக்கின்றனர். சமூக வளர்ச்சியில் வர்க்கப் போராட்டமும் வர்க்கங்களும் வகிக்கின்ற பாத்திரம், தேசவிமோசனப் புரட்சிகளின் பாதைகள் மற்றும் கட்டங்கள், இக் கட்டங்கள் யாவற்றிலும் பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படையான கம்யூனிஸ்ட் கட்சி வகிக்கும் பங்கு போன்ற பல வேறு அரசியல், சித்தாந்தப் பிரச்னைகளில் அவை மாறுபாடுகளைக் கொண்டிருக்கவும் செய்கின்றன.

எவ்வளவு முரண்பாடுகள் இருந்தபோதிலும் கூட, புரட்சிகர ஜனநாயகம் தேசவிமோசனப் புரட்சிகளை ஆழமாக்குவதற்கும் வியாபிப்பதற்கும் சோஷலிஸத்திற்குப் புரட்சிகரமாக மாறிச்செல்வதற்கும் ஆன நிலைமைகளை உருவாக்குகிறது. ''முதலாளித்துவத்திற்கு முந்திய உறவுகளிலிருந்து சோஷலிஸத்திற்கு மாறிச் செல்வதற்குக் தேவைப்படுகின்ற இடைநிலைப் பாதைகள், முறைகள், மார்க்கங்கள் மற்றும் கருவிகள் எவை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்,'' என்பது குறித்து லெனின் தெரிவித்த கருத்துக்கள் இங்கு குறிப்பிடத்தக்கவை. எனவே, ஒருவர் புரட்சிகர ஜனநாயகத்தை விரிவான வரலாற்று அடிப்படையில் நோக்கினால் அவர் அத்தகைய மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான மார்க்கங்கள் குறித்து தற்போது நடைபெற்றுவரும் தேடலைத் தெளிவாகக் காண முடியும்.

புரட்சிகர ஜனநாயகக் கட்சிகளுடன் கம்யூனிஸ்ட்டுகளின் விரிவான ஒத்துழைப்பு, அவற்றுக்கிடையே நெருங்கிய உறவு முறைகளை ஸ்தாபிப்பது ஆகியவற்றின் முக்கியத்துவம் இத்தகையதுதான். முதலாளித்துவமற்ற வளர்ச்சிப் பாதையானது சோஷலிஸத்துக்காக முயல்கின்ற அனைத்து அரசியல் சக்திகளதும் ஒற்றுமைக்கு இடையறாது அறைகூவல் விடுக்கிறது. இது ஒன்று மாத்திரமே உழைக்கும் மக்களின் உணர்வுபூர்வ



மான செயல்பாட்டை உறுதி செய்ய முடியும். இது இல்லாமல், தேசிய ஜனநாயகப் புரட்சிகளின் இறுதி வெற்றியையும் சோஷலிசச் சமுதாயத்தை நிர்மாணிப்பதற்கான நிலைமைகளை உருவாக்குவதையும் நினைத்துப் பார்க்கவும் முடியாது.

புரட்சிகர ஜனநாயகத்திற்கும் உலகளாவிய மட்டத்தில் கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கும் இடையிலான சர்வாம்சப் பிணைப்புக்களின் வளர்ச்சியே தேசிய விமோசன இயக்கத்தில் வலுவான சோஷலிஸப் போக்குகளது வலிமைமிக்க காரணியும் குறிப்பிடத்தக்க வெளிப்பாடும் ஆகும். 1980-ம் ஆண்டுகளில் இந்த அரசியல் பிணைப்புக்களும் தொடர்புகளும் கணிசமான அளவுக்கு வியாபித்தன. அதேசமயம், அவற்றின் அரசியல் மற்றும் சித்தாந்தவியல் உள்ளடக்கம் செழுமையடைந்தது. புரட்சிகர ஜனநாயகக் கட்சிகள், சமூக—பொருளாதார, அரசியல், கட்சி மற்றும் இராஜ்ய நிர்மாணம், வெகுஜன ஸ்தாபனங்களுக்கு வழிகாட்டுதல், அரசியல்—கல்வி மற்றும் சித்தாந்தப் பணி ஆகியவற்றில் ஆளும் கம்யூனிஸ்ட் கட்சிகளது பன்முகப்பட்ட நடவடிக்கையை ஆராய்வதற்காக சோவியத் யூனியனுக்கும் ஏனைய சோஷலிஸ நாடுகளுக்கும் தமது தூதுக் குழுக்களை முறையாக அனுப்பத் தொடங்கியிருக்கின்றன. புரட்சிகர ஜனநாயகக் கட்சிகளுக்கும் முதலாளித்துவ நாடுகளிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கும் இடையே உறவுகள் செயலூக்கமுடன் வளர்ந்து வருகின்றன. அக்கட்சிகள் சர்வதேச ஏகாதிபத்திய—விரோத அரங்குகளையும் இயக்கங்களையும் நடத்துவதில் புரட்சிகர ஜனநாயகவாதிகளுடன் நெருக்கமாக ஒத்துழைத்து வருகின்றன.

சோவியத்
பத்திரிகையிலிருந்து

★

### சமாதானம், படைகுறைப்புக்கான வாய்ப்புகள்

# அபிவிருத்திக்காகப் படைக்குறைப்பு

''அபிவிருத்திக்காகப் படைக்குறைப்பு'' என்ற அடிப்படைக் கோட்பாட்டை நடைமுறைப் படுத்துவது, மனிதகுலத்தை அணிதிரட்டவும் அதன் உலகளாவிய மனோபாவத்தை உருவாக்குவதற்கு உதவவும் முடியும்.

—மிகையீல் கொர்பச்சேவ்

மனிதகுலம் வெகுவிரைவில் இருபத்தோராம் நூற்றாண்டிற்குள் பிரவேசிக்கும். முன்னுள்ள நூற்றாண்டு விஞ்ஞானத்தின் பொற்காலமாக மாறும் அல்லது நியூக்லியர் உறைபனிக் காலகட்டமாக மாறும். இந்த இரு வாய்ப்புகளுக்குமான பொருளாயத முன் நிபந்தனைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. நியூக்லியர்—விண்வெளி யுகத்தின் எதார்த்தங்கள் தெரிவொன்றை மேற்கொள்வதற்கான அவசியத்தை ஏற்படுத்துகின்றன: அது படைக்குறைப்பும் அபிவிருத்தியும், வன்முறையற்ற நியூக்லியர்—சூன்ய உலகும் ஆகும். இத்தெரிவு, படைக்குறைப்புக்கும் அபிவிருத்திக்கும் இடையிலான இடைச்சார்புக் கருத்தமைப்பின் அடிப்படையில் சர்வாம்சம் தழுவிய திட்டத்தை உலகிற்கு வழங்கியிருக்கும் சோவியத் யூனியனால் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

முதலாவது. துரிதமான அபிவிருத்தி வீதங்கள் இல்லாமல் சமூக, பொருளாதார ஸ்திர நிலையை உறுதிசெய்வதும் சமாதானத்தைப் பேணிக்காப்பதும் இன்று சாத்தியமில்லை. அபிவிருத்திப் பிரச்னைகள் சர்வதேசப் பந்தோபஸ்துப் பிரச்னைகளுடன் தனியொரு முடிச்சில் பிணைக்கப்பட்டுள்ளன. அதை அவிழ்ப்பதற்கு அபிவிருத்திக்கான நோக்கங்களுக்கு மாறிச் சென்றாக வேண்டும்.

நியூக்லியர் மற்றும் பிற ஆயுதக் குறைப்புக்கள், கட்டுப்பாடுகளின் விளைவால் விடுவிக்கப்படக் கூடிய செல்வாதாரங்களே இதன் பொருள். ஏனெனில், படைக்குறைப்புக்கும் அபிவிருத்திக்கும் இடையிலான இடைத்தொடர்புக் கருத்தமைப்பின் சாராம்சம் இதில்தான் உள்ளது.

சோவியத் யூனியன், ஆயுதப் போட்டிக்குக் கடிவாளமிடுவதற்கு மேற்கொள்ளும் பல்வேறு நடவடிக்கைகள் காரணமாகத் தான் சேமிக்கக்கூடிய சாதனங்களின் ஒரு பகுதியை வளர்முக நாடுகளுக்கு மாற்றும் தனது தயார்நிலைமை மீண்டும் ஊர்ஜிதம் செய்கிறது.

அபிவிருத்திக்காக மாற்றப்படவுள்ள அத்தகைய சேமிப்புகளின் அடிப்படை, கூட்டாக விவாதிப்பதற்குரிய பிரச்னையாகும். இவ்விவாதத்தில் பங்கு கொள்வதற்கு சோவியத் யூனியன் தயார்.

இச்செல்வாதாரங்களை வளர்முக நாடுகள் மத்தியில் பங்கீடு செய்வதை, எமது கருத்துப்படி அனைத்து நாடுகளுக்கும் திறந்துவிடப்படக் கூடிய ''அபிவிருத்திக்காகப் படைக்குறைப்பு'' என்ற சர்வதேச நிதியத்தின் மூலம் செயல்படுத்த முடியும். படைக்குறைப்பு நடவடிக்கைகள் மற்றும் இராணுவச் செலவுகளில் குறைப்புக்களைச் செய்வதன் மூலம் நாடுகளால் சேமிக்கப்பட்ட செல்வாதாரங்கள் இந்நிதியத்துக்கு மாற்றப்படும். அத்தகைய நிதியத்தை ஐ. நா.வின் கட்டமைப்புக்கள் உருவாக்க முடியும்.

அத்தகைய நிதியத்துக்குப் பங்களிக்க சோவியத் யூனியன் தயாராக இருக்கிறது.

இரண்டாவது. இராணுவ பட்ஜெட்டுக்களைக் குறைக்கும் பிரச்னை, சர்வாம்ச அணுகுமுறையைக் கோருகிறது. அதை அரசியல் என்றும் பொருளாதாரம் என்றும் தொழில்நுட்பம் என்றும் பகுதி பகுதியாகப் பிரிக்க முடியாது. ஆயுதங்களின் விலைகளின் கட்டமைவுகளிலும் விலை உருவாக்கப் பொறியமைவுகளிலும் காணப்படும் அடிப்படை வித்தியாசங்களோடு இராணுவ வரவு-செலவுகளை ஒப்பிடுவதற்கு எடுக்கப்படும் முஸ்தீபுகள் ஸ்தூலமான பலாபலன்களைத் தரவில்லை. உதாரணமாக, சோவியத் யூனியன்

தனது பந்தோபஸ்து வரவு— செலவு 202 பில்லியன் ரூபிள் கள் என தெரிவித்துள்ளது. இதில் ஆயுதப் படைகளது ஆளணியின் பராமரிப்பு, பொருளாயத மற்றும் தொழில்நுட்பவியல் விநியோகம், இராணுவ அபிவிருத்தி, ஓய்வூதியத் திட்டம் போன்ற இன்னோரன்ன பிற வகையினங்கள் குறித்த சோவியத் பாதுகாப்பு அமைச்சின் செலவுகளும் அடங்குகின்றன.

சோவியத் அரசாங்க வரவு—செலவுத் திட்டத்தில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பணிக்கு நிதியீடு செய்வதும் ஆயுத மற்றும் பிற இராணுவத் தளவாடத்தைக் கொள்வனவு செய்வதும் உள்ளடங்குகின்றன,

நாம் வகுத்துரைத்துள்ள தீவிரமான விலைச் சீர்திருத்த உருவாக்கம் பூரணப்படுத்தப்பட்டவுடன் பொதுவான இராணுவச் செலவுகளை எதார்த்தபூர்வமாக ஒப்பிடுவது சாத்தியமாகும்.

சோஷலிஸ நாடுகள் இராணுவ வரவு—செலவுகள் வியாபிதமடைவதற்கு முற்றுப்புள்ளி வைக்க யோசனை தெரிவிக்கின்றன. அவை நியாயமான அளவுக்குப் போதுமான மட்டத்தில் அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு விரும்புகின்றன. இத்திசையில் நடைமுறை நடவடிக்கைகளுக்கு மாறிச்செல்ல விழைகையில், வார்ஸா ஒப்பந்த உறுப்பினர் நாடுகள், ஒன்று—இரண்டு ஆண்டுகளுக்கு இரண்டு கூட்டணிகளதும் இராணுவச் செலவில் அதிகரிப்புகளுக்கு ஓர் உச்ச வரம்பைப் பிரகடனம் செய்வதற்கான யோசனையை நேட்டோ உறுப்பினர் நாடுகளுக்கு விடுத்தன.

மூன்றாவது. படைக் குறைப்பு நிலைமைகளில் உலகின் புதிய பொருளாதார முன் மாதிரியின் வளர்ச்சியில்கூட நாம் இறங்க முடியும், இது வளர்ச்சியுற்ற நாடுகளில் திட்டமிடலின் ஒருங்கிணைப்பை உள்ளடக்க முடியும்.

சம்பாஷணை நடத்துவது. பொருளாதார விஷயத்திற்கும் அதிகபட்சமானது. அது, ஆயுதப் போட்டியின் எதிர்மறையான சமூக—பொருளாதாரப் பின்விளைவுகளைப் பூரணமாக ஒழித்துக்கட்டுவதையும் பொருள்படுத்துகிறது, படைக் குறைப்புக்கும் அபிவிருத்திக்கும் இடையேயான தொடர்பை உறுதிப்படுத்தும் ஓர் நடைமுறை மார்க்கமாகவும் விளங்குகிறது,

நான்காவது. கட்டுப்பாடற்ற ஆயுதப் போட்டியுடன் இணைந்துவரும் இராணுவ, அரசியல் மோதல், சமாதான மாற்று வழிகள் மூலம் எதிர்க்கப்பட வேண்டும், நியூக்லியர் பாசறைகளைப் பெருக்குவதில் போட்டியிடுவதற்குப் பதிலாக அணுவை அமைதிபூர்வமாகவும் பாதுகாப்பாகவும் பயன்படுத்துவதில் ஒத்துழைத்திட வேண்டும். ''நட்சத்திரப் போர்''களுக்குப் பதிலாக புறவெளியை சமாதானபூர்வமாகக் ஆராய்வதிலும் உலக விண்வெளி ஸ்தாபனத்தை உருவாக்குவதிலும் கூட்டு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இரசாயன ஆயுதங்களை உற்பத்தி செய்வதற்குப்



பதிலாக சமாதானத் திசைவழியைக் கொண்ட இரசாயனத் தொழில்துறையின் வளர்ச்சியில் முயற்சிகளைக் குவிக்க வேண்டும்.

ஐந்தாவது. வளர்முக நாடுகளிலுள்ள பெரும் ஒதுக்கங்கள் யாவும், அவை இராணுவச் செலவின் பளுவிலிருந்து விடுவிக்கப்பட்டவுடன் வெளிப்படுத்தப்படும். சம்பிரதாய ஆயுதங்களின் விற்பனைகளையும் விநியோகங்களையும் கட்டுப்படுத்தும் பிரச்னை குறித்து இருதரப்பு மற்றும் பலதரப்பு அடிப்படையில் பேச்சுகளைத் துவங்குவதை சோவியத் யூனியன் ஆதரிக்கிறது. அமெரிக்காவுடன் பரஸ்பர அடிப்படையில் இது சம்பந்தமான பிராந்திய முன்முயற்சிகளுக்கு ஸ்தூலமாக பதிலளிப்பதற்கு நாம் தயார். சம்பந்தப்பட்ட பிராந்தியங்களிலுள்ள எல்லா நாடுகளதும் சட்டபூர்வமான நலன்களும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்பதே இங்குள்ள நிபந்தனை.

ஆறாவது. சர்வதேச ஸ்தாபனங்கள், யாவற்றுக்கும் மேலாக ஐக்கிய நாடுகள் சபை ''அபிவிருத்திக்காக படைக்குறைப்பு'' என்ற உபாயத்தை நடைமுறைப்படுத்துவதில் ஓர் மையமான பாத்திரத்தை வகிக்க வேண்டும்.

உசிதமானவிடத்து புதிய சர்வதேச ஒத்துழைப்புக்கும் படைக்குறைப்புக்கும் அபிவிருத்திக்கும் அத்தகைய ஸ்தாபனங்களின் பங்களிப்புகள் முனைப்பானவையாக இருக்க வேண்டும்,

''பிராவ்தா''விலிருந்து

★

பியோதர் விளாதிமிர்ஸ்கி
வரலாற்று ஆசிரியர்

# சர்வாம்சப் பந்தோபஸ்து அனைவருக்கும் சமமானது

இயற்கைச் சக்திகள் மீது பெரும் ஆற்றலை கொண்டுள்ள மனிதகுலம் நியூக்லியர் மற்றும் விண்வெளி யுகத்தில் உலகளாவிய அழிவு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருப்பது ஓர் துக்ககரமான முரண்நிலையாகும். இந்த முரண்நிலை விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பவியல் புரட்சியின் யுகத்தில் நாகரிகத்தினது வளர்ச்சியின் இயக்கவியல்களைத் தளையிடுகிறது,

மனித மேதாவிலாசத்தின் சாதனைகளை உலகம் இறுதியில் எவ்வாறு பயன்படுத்தும்? அவை மனிதகுலத்தின் நன்மைக்காகப் பயன்படுத்தப்படுமா?

நியாயமான தேர்வு அபிவிருத்திக்கும் பெரும் பந்தோபஸ்துக்கும் ஆதரவாக இருப்பதாய் தோன்றக்கூடும் இந்த அணுகுமுறை சோஷலிஸ, முதலாளித்துவ அமைப்புகளுக்கு இடையிலான அடிப்படை வேறுபாட்டில் குறிப்பிடத்தக்க தெளிவோடு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. 1970-ம் ஆண்டுகளின் பிற்பகுதியிலும் 1980ம்-ம் ஆண்டுகளின் ஆரம்பத்திலும் ஏகாதிபத்தியம் சர்வதேச அரங்கில் தமது யுத்த ஆயத்தங்களைத் தீவிரமாக்கியது. சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி சோஷலிஸதிற்கும் சமாதானத்துக்கும் இடையிலான பிரிக்க



முடியாத பிணைப்பை, நியூக்லியர் சர்வநாச அழிவிலிருந்து மனிதகுலத்தைப் பாதுகாக்க வேண்டிய சக்திகளின் முன்னோடி என்ற வகையில் சோவியத் யூனியன் வரலாற்று சிறப்புமிக்க பணியை நிர்ணயித்துக் காட்டியிருக்கிறது.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 27-வது காங்கிரஸ் ஓர் புதிய அரசியல் கருத்தமைப்பை முன்வைத்தது. தத்துவமும் நடைமுறையும் அரசியலும் ஒழுக்க நெறிகளும் தேசிய மற்றும் சர்வதேச நலன்களும் பிரிக்கவொண்ணுதவையாக இருக்கக்கூடிய ஓர் நீதியான மற்றும் பாதுகாப்பான உலகிற்கு அது அறைகூவல் விடுத்தது.

## ஓர் புதிய கட்டம்

சர்வதேசப் பந்தோபஸ்துக்கான மார்க்கங்கள் முன்னரும் கூட கண்டறிப்பட்டிருக்கின்றன. கூட்டுப் பந்தோபஸ்துக் கருத்தமைப்பு நன்கு பிரசித்தமானது. ஓர் சர்வாம்சம் தழுவிய சர்வதேசப் பந்தோபஸ்து அமைப்பு, பந்தோபஸ்து பற்றிய கருத்துக்களைத் தழுவி, உறுதிப்படுத்துவதோடு மாத்திரமன்றி நியூக்லியர் விண்வெளி யுகத்தினுல் திணிக்கப்பட்ட நிபந்தனைகளையும் தக்க முறையில் கவனத்திற்கு எடுத்து அவற்றுடன் சேர்க்கிறது. சர்வதேச நலன்களின் மேலாண்மையினுல் குணும்சப்படுத்தப்படும் உலக அரசியலின் ஓர் புதிய உயர்மட்ட தத்துவவியல் அது.

முதலாவதாக, பல்வேறு பிராந்தியங்களிலும் இருந்துவருகின்ற அல்லது இருக்கக்கூடிய யுத்தக் கொதிதளங்களை ஒழித்துக்கட்டுவதற்கு அப்பாலும் கூட்டுப் பந்தோபஸ்து செல்ல வேண்டியிருக்கும் என்று கருதப்படவில்லை. கூட்டுப் பந்தோபஸ்துக் கோட்பாடுகளையும் அது செயல்படுவதற்கான பொறியமைவையும் கொண்டுள்ள ஐக்கிய நாடுகளின் சாசனம், சமாதானத்தை மீறுகின்ற அல்லது ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளின் அச்சுறுத்தலுக்கு எதிராக தனிப்பட்ட நடவடிக்கைகளுடன் வரம்புபட்டுவிடுகிறது. தற்போது முக்கியமான பிரச்னை உலகின் எந்தப் பகுதியிலும் உலக அரசியலின் எந்த அரங்கிலும் படைப்பலத்தை பிரயோகிக்கின்ற அல்லது பயன்படுத்துவதாக அச்சுறுத்தல் விடுக்கின்ற நிலைக்கு முடிவுகட்ட வேண்டும்.

இரண்டாவதாக, கூட்டுப் பந்தோபஸ்து, ஆக்கிரமிப்புக்குப் பலியான நாடுகளின் ஓர் குழுவினுல் ஸ்தாபிக்கப்பட்டது. இது கடந்தகால மற்றும் புதிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராகத் திசைபடுத்தப்பட்டிருக்கிறது. இன்று பந்தோபஸ்தானது எந்தவொரு நாடுகளின் குழுவையும் தனிமைப்படுத்தவில்லை. ஆனுல், அது சமத்துவமான அடிப்படையில் அனைத்து நாடுகளது சுதந்திரத்தையும் சுயாதீனத்தையும் பாதுகாக்கின்ற நோக்கமுடையது. எனவே, போரில்லாமல் இருப்பதற்கான உத்தரவாதத்திற்கும் நியூக்லியர் துறையில் படைக்குறைப்பு

நடவடிக்கைகளுக்கும் நிலைமைகளை வகை செய்வதன் மீது அது குவிககப்பட்டிருக்கிறது.

மூன்றாவதாக, கூட்டுப் பந்தோபஸ்து இராணுவ மோதலின் தவிர்க்க முடியாமையிலிருந்து முன்சென்றது. எனவே, ஆக்கிரமிப்புக்குக் கடிவாளமிடும் அவசியத்தைத் தீவிரமாக்கியது. புதிய பந்தோபஸ்துக் கருத்தமைப்பு நியூக்லியர் யுத்தத்தையும் சம்பிரதாய யுத்தத்தையும் நிராகரிப்பதை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது,

## இராணுவ அம்சங்கள்

சர்வாம்சம் தழுவிய சர்வதேசப் பந்தோபஸ்து பற்றிய கருத்தம்சம், நியூக்லியர் மற்றும் விண்வெளி யுகம் அனைத்து தேசங்களுக்கும் இன்றியமையாததாக ஆக்கியுள்ள சமாதான சகவாழ்வுக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. இக்கொள்கையை சர்வதேச உறவுகளின் அதியுயர் கோட்பாடு என்ற நிலைக்கு உயர்த்துவது, பிணக்குகளைத் தீர்ப்பதற்கு ஓர் சாதனமாக யுத்தத்தைப் பயன்படுத்துவதனைக் கைதுறப்பதற்கு மிகையான முக்கியத்துவத்தைப் பிரதிபலிக்கிறது. இப்பிணக்குகளில் சோஷலிஸத்துக்கும் முதலாளித்துத்திற்கும் இடையிலான வரலாற்று ரீதியான பிணக்கும் அடங்கும். இது சமாதானபூர்வமான போட்டி, சமாதானபூர்வமான பகைமை வடிவத்திலிருந்து மாத்திரமே முன்செல்ல முடியும்.

சர்வாம்சம் தழுவிய பந்தோபஸ்துக் கருத்தமைப்பு சமாதானத்தை சர்வதேச உறவுகளின் உலகளாவிய நியதியாக ஆக்கும் கருத்துடன் நெருக்கமாக இணைந்திருக்கிறது. இதன் பொருள் யாதெனில் இராணுவ வலிமையினால் அல்லாமல் சீரிய அண்டையயல் உறவுகள் மற்றும் ஒத்துழைப்பினால் ஆதிக்கஞ் செலுத்தப்படும் ஓர் சர்வதேச நியதியின் ஸ்தாபிதத்தைப் பொருள்படுத்துகிறது,

இராணுவப் பந்தோபஸ்துக்கும் ஓர் புதிய உள்ளடக்கம் கொடுக்கப்படுகிறது. நியூக்லியர் வல்லரசுகள் ஒருவருக்கொருவர் எதிராகவும் அல்லது மூன்றாம் நாடுகளுக்கு எதிராகவும் யுத்தம் நடத்துவதைக் கைவிடுவதையும் புறவெளியில் ஆயுதப் போட்டியைத் தடுப்பதையும் நியூக்லியர் ஆயுதங்களின் அனைத்துப் பரிசோதனைகளுக்கும் முடிவு கட்டுவதையும் இந்த நூற்றாண்டின் முடிவிற்குள் அவற்றை முழுமையாக ஒழித்துக் கட்டுவதையும் இரசாயன ஆயுதங்களைத் தடை செய்வதையும் அழித்தொழிப்பதையும் ஏனைய வெகுஜனப் பேரழிவு சாதனங்களை விருத்திப்பதிலிருந்து விலகியிருப்பதையும் கோட்பாடுகளாகக் கொண்டிருக்க வேண்டும்.

சோவியத் யூனியனுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே, வார்ஸா ஒப்பந்தத்திற்கும் நேட்டோவுக்கும் இடையே சுமாரான கேந்திரச் சமநிலை பற்றிய பிரச்னைக்கு, இராணுவப் பந்தோபஸ்தின் முனைப்பான பிரச்னைக்கு ஓர் புதிய அணுகுமுறையும் எடுக்கப்பட்டிருக்கிறது. இராணுவ அரசியல் எதார்த்தங்களில் ஸ்தூலமான மதிப்பீடு ஒன்றின் படி அத்தகைய ஓர் சமநிலை இராணுவ அரசியல் மற்றும் சமாதானத்தைப் பராமரிப்பதற்குப் பணிபுரிகிறது.



## அரசியல் துறை

அரசியல் பந்தோபஸ்துக்கும் கூட அதிக வளமுள்ள உள்ளடக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. சர்வதேச விவகாரங்களில் ஒவ்வொரு தேசமும் தனது சொந்த வளர்ச்சி வழிகளையும் வடிவங்களையும் தெரிவு செய்வதற்குள்ள உரிமைக்கு நிபந்தனையற்ற மதிப்பளிப்பதே அதன் துவக்கநிலையாகும்.

இருந்துவரும் மோதல் மற்றும் நெருக்கடி நிலைமைகளை ஒழித்துக்கட்டுவதும் பிராந்திய மற்றும் உலக மட்டத்தில் புதியன தோன்றுவதைத் தடுப்பதும் தான் இதன் பொருளாகும். இது எத் தரப்பினதும் சட்டபூர்வமான நலன்களுக்கு அநீதி இழைக்காமல் தீர்வினைக் காண்பதற்கான ஓர் அரசியல் அடிப்படையை அவசியப்படுத்துகிறது. மேலும் போதிய அளவிலான பேச்சுக்களின் பொறியமைவும் தேவைப்படுகிறது. இது குறிப்பிட்ட எந்த நிலைமையிலும் ஆக்கபூர்வமான சம்பாஷணைக்கு முன்செல்வதைச் சாத்தியமாக்க வேண்டும்.

அதேசமயம், படைபலப் பிரயோகமின்மை, உள்விவகாரங்களில் தலையிடாதிருத்தல், பிணக்குகளுக்கு அமைதிபூர்வத் தீர்வு காணுதல், சுயாதிபத்தியத்திற்கு மரியாதை செலுத்துதல் ஆகியன போன்ற சர்வதேச அரங்கில் நாடுகளின் நாகரிகமுற்ற நடத்தை நெறிக் கோட்பாடுகளைக் கடைப்பிடிப்பதை உத்தரவாதம் செய்யும் சர்வதேச சட்ட மற்றும் ஒழுங்கின் ஒரு பொருத்தமான அமைப்போடு சர்வாம்சம் தழுவிய பந்தோபஸ்து அமைப்பைப் பிரதியீடு செய்வது முக்கியமானது. தடுப்பு நடவடிக்கைகளுக்கான அவசியமும் இருக்கிறது.

இவ்விதம், சர்வாம்சம் தழுவிய பந்தோபஸ்து அமைப்பை ஸ்தாபிக்கும் கருத்தமைப்பு அரசியல் துறையில் ஓர் ஸ்தூலமான பொருளாயத உள்ளடக்கத்தைக் கொண்டிருக்கிறது. நாடுகளின் கூட்டு முயற்சிகளுக்கு அவசியமான அடிப்படையை வழங்குகிறது,

## பொருளாதாரத் துறை

மேலும், யோசனையாகத் தெரிவிக்கப்பட்டுள்ள சர்வாம்சம் தழுவிய சர்வதேசப் பந்தோபஸ்து அமைப்பு பொருளாதாரத்துறையில் சர்வதேச ஒத்துழைப்பின் சர்வவியாபகமாக அங்கீகரிக்கப்பட்ட கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும்.

உதாரணமாக, அனைத்து நாடுகளுக்கும் சமதையான பொருளாதாரப் பந்தோபஸ்தை உத்தரவாதம் செய்வதும் உலகப் பொருளாதார உறவுகளின் துரிதமான மற்றும் உத்தரவாதமளிக்கப்பட்ட வளர்ச்சியை உறுதி செய்வதுமான ஓர்

புதிய உலகப் பொருளாதார நியதியை அமைப்பதன் மூலம் முக்கியமான முன்னேற்றம் காண முடியும். பொருளாதாரப் பந்தோபஸ்தானது சர்வதேச உறவுகளிலிருந்து எல்லா பாரபட்சத்தையும் விலக்குவது, பொருளாதாரத் தடைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் கொள்கையைக் கைவிடுவது ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டிருப்பது அவசியம். கடன் பிரச்னையை நீதியான அடிப்படையில் தீர்ப்பதற்கான மார்க்கங்களுக்குக் கூட்டுத் தேடல் மேற்கொள்வதும் முக்கியமான கோட்பாடாக இருக்க வேண்டும்.

வெகுஜனப் பேரழிவு ஆயுதங்களின் வளர்ச்சிக்காகப் பொருளாயத மற்றும் அறிவுத்துறை செல்வாதாரங்களை விரயமாக்குவற்கு முற்றுப்புள்ளிவைப்பது, வளர்முக நாடுகளுக்கு உதவி வழங்குவதற்காக செல்வாதாரங்களை விடுவிப்பதற்கு மெய்யான வாய்ப்புக்களைத் திறந்துவைக்கும். இச் செல்வாதாரங்களை உலக சமாஜத்தின் நன்மைக்காகவும், முதலாவதாக, வளர்முக நாடுகளின் நன்மைக்காகப் பயன்படுத்துவதற்கான கோட்பாடுகளை வகுப்பது சர்வாம்சம் தழுவிய பந்தோபஸ்தின் அடித்தளங்களில் ஒன்றாக மாற வேண்டும்.

இறுதியாக, பொருளாதாரப் பந்தோபஸ்தின் நோக்கம் நாகரிகத்தினது உயிர் வாழ்வின் அடித்தளங்களைப் பாதிக்கின்ற உலகளாவியப் பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதற்கான ஓர் சர்வதேசச் சொத்தாக இக்கோளின் செல்வாதாரங்களை அறிவுபூர்வமாகப் பயன்படுத்துவதற்கு வழிசமைப்பதாகும்.

''மெஸ்துனரோத்நயா ஸிஸின்''
சஞ்சிகையிலிருந்து

★

# வரலாறும் அனுபவமும்

விக்தர் டெனிலோவ்
(டி.எஸ்ஸி வரலாறு)

# கூட்டுறவுமயமாக்கத்தின் ஊற்றுக்கண்களும் அதன் படிப்பினைகளும்

**சோவியத் பண்ணைத் தொழிலைக் கூட்டுறவுமயமாக்குவது, சோஷலிஸத்தின் நிர்மாணத்தில் ஆகவும் சிக்கலான, சிரமம் வாய்ந்த கட்டமாய் மிகவும் நியாயமாகவே கருதப்பட்டது: அது, இன்னமும் வாதப் பிரதிவாதங்களை ஏற்படுத்தி வரும் ஒரு-பரிமாண பொருளாதார, சமூகப் பின்விளைவுகள் அல்ல.**

## புரட்சிக்கு முந்திய கிராமப்புறம்: அதன் சிறப்பம்சங்கள் எவை?

சோவியத் யூனியனில் கூட்டுறவுமயமாக்கத்தின் வரலாற்றை மீளாய்வு செய்யும்போது ஒரு பிரச்னையைத் தவிர்த்துவிட முடியாது. 1917-ம் ஆண்டின் மகத்தான அக்டோபர் சோஷலிஸப் புரட்சி தொடக்கிவைத்த விவசாயச் சீர்திருத்தத்தின் வரலாற்றுப் பொருள் யாது?

நிலப்பிரபுத்துவத் தோட்டங்களை ஒழித்துக் கட்டுவதும், சொந்த முறையில் பயன்படுத்துவது என்ற கடமைப் பொறுப்போடு ஏறக்குறைய எல்லாப் பண்ணை நிலங்களையும் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்குவதுமே அதன் நேரடியான பலாபலனாகும். இதன் விளைவால் இது வரம்புபட்ட உற்பத்தி உள்ளாற்றல்களுடன் சிறிய அளவிலான பண்ணை

விவசாய அமைப்பை ஸ்தாபித்தது.

1922—1925-ம் ஆண்டுகளில் விவசாய முன்னேற்றமானது, தானிய மற்றும் கால்நடை உற்பத்திப் பொருட்களின் உற்பத்தி சுமார் மூன்றில் ஒரு பங்கினால் உயர்ந்தது என்றாலும் கூட விவசாயத்தின் உள்ளாற்றல் முழுமையான அளவுக்குப் பயன்படுத்தப்படவில்லை என்று கூறுவதற்கு ஆதாரங்கள் இல்லை. இங்குள்ள விஷயம் புனருத்தாரணக் காலகட்டத்தில் வளர்ச்சியின் வீச்சு மிகக் குறைந்த நிலைமையிலிருந்தே மதிப்பிடப்பட்டன என்பதாகும். இந்த நிலைக்கு உள்நாட்டுப்போர் முடிவடைந்ததன் பின்னரான முதலாவது ஆண்டான 1921-ம் ஆண்டின் மட்டமே எடுத்துக் கொள்ளப்பட்டது.

1925-ம் ஆண்டின் சோவியத் ஒன்றியத்தின் பண்ணைத் தொழில் ஒட்டுமொத்தத்தில் யுத்தத்திற்கு முந்திய (1913) குறியிலக்குகளை மாத்திரமே எட்டியது என்பது இதற்குச் சான்று பகர்கிறது. இவ்விதம் அவ்வாண்டில் மொத்தத் தானிய உற்பத்தி 724.6 மில்லியன் சென்ட்னர்கள் தொகைப்பட்டது. 1926ல் அது 763.3 மில்லியனாக உயர்ந்தது. 1927ல் அது 723 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. 1928ல் 733.2 மில்லியன் தொன்னுக்கு உயர்ந்து 1929 ல் 714.4 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது.

1920—ம் ஆண்டுகளின் போது கிராமப்புறத்தின் சித்திரமானது, அங்கு இடம் பெற்று வந்த சமூகப் போக்குகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாவிட்டால் பூரணமாகாது, நிலத்தை சமஅளவில் பங்கீடு செய்தமை வர்க்கங்கள் மத்தியில் சமாதானத்திற்கு இட்டுச் செல்லவில்லை என்பதை அங்கீகரித்ததாக வேண்டும்.

1927-ம் ஆண்டில் கிராமப்புறத்தில் சுமார் 25 மில்லியன் சிறிய பண்ணைகள் இருந்தன. உதாரணமாக, ருஷ்ய சமஷ்டியின் பிரதேசத்தில் 28.3 சதவீத விவசாயிகளிடம் உழுவதற்கான மிருகங்கள் இருக்கவில்லை. 31.5 சதவீத விவசாயிகளிடம் உழவுக் கருவிகள் இருக்கவில்லை. 18.8 சதவீதமானோரிடம் பசுக்கள் இருக்கவில்லை. உக்ரைனில் 38.3 சதவீதமானோரிடம் உழவு மிருகங்கள் இருக்கவில்லை.

## கூட்டுறவுமயமாக்கத்தின் தொடக்கம்

கிராமப்புறத்தில் சோஷலிஸ மறுசீரமைப்பின் முக்கியமான கோட்பாடுகள் லெனினின் கூட்டுறவுத் திட்டத்தில் முன்வைக்கப்பட்டன. கூட்டுறவுமயமாக்கம் ''விடாமுயற்சியுடனும் பொறுமையுடனும் படிப்படியான நடவடிக்கைகளை முன்வைப்பது மூலமும் உழைக்கும் விவசாயிகளுக்கு எழுச்சியூட்டுவது மூலமும் மேற்கொள்ளப்பட வேண்டும்'' என்று லெனின் சொன்னார்.

1927-ம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற 12-வது கட்சிக் காங்கிரஸ் கூட்டுறவுமயமாக்கம் பற்றிய தீர்மானத்தை நிறைவேற்றியது. இது குலாக்குகள் மீது பெரும் தாக்குதலைத் தொடுத்தது. இக்காங்கிரஸ் கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாற்றில் லெனினின் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது ஓர் முக்கியமான நிலைக்களனாக இடம்பெற்றுள்ளது.



கூட்டுப் பண்ணைகளை உருவாக்குவதற்கான அறைகூவல் ஏழை விவசாயிகளின் வளர்ச்சியடைந்த பகுதியினரால் அங்கீகரிக்கப்பட்டது. வறுமைத் தளையிலிருந்து தனியாக உடைத்துச் செல்லக்கூடிய மெய்யான சந்தர்ப்பம் தமக்கு இருக்கவில்லை என்பதை கடந்த பத்து ஆண்டுகள் அவர்களுக்கு நம்பகமாக எடுத்துக் காட்டியுள்ளன. தம்முடைய மிக மோசமான நிலையிலிருந்து மீள்வதற்கு கூட்டுப் பண்ணையே ஓரேயொரு மார்க்கம் என்று கண்ட மிக வறிய விவசாயிகள் கூட்டுறவுமயமாக்கத்தின் பாதையில் வீறுடன் முன்சென்றனர்.

1927-ம் ஆண்டு ஜூன் மாதம் 14,800 கூட்டுப் பண்ணைகள் இருந்தன. இவை 1929 ஜூன் மாதம் 57,000 க்கு உயர்ந்தன. சமூகமயமாக்கப்பட்ட விவசாயப் பற்று நிலங்களின் விகிதாசாரம் 0.8 சதவீதத்திலிருந்து 3.9 சதவீதத்திற்கு அதிகரித்தது.

அவ்வேளையில் கூட்டுப் பண்ணையின் நிர்மாணத்திலும் கருத்தாழமுள்ள குறைபாடுகள் வெளிப்பட்டன. கூட்டுறவுமயமாக்கத்தின் வீதங்கள், பண்ணைகளுக்கு நிதியிடவும் அவற்றுக்கு பண்ணைப் பொருட்களை விநியோகம் செய்யவும் தேவையான நிபுணர்களுக்குப் பயிற்சி அளிக்கவும் நாட்டின் மெய்யான வாய்ப்புகளை விஞ்சத் தொடங்கின.

கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டியின் அரசியல் குழுவினது கூட்டுறவுமயமாக்கத்திற்கான கமிஷன் கூட்டுறவுமயமாக்கத்தின் போக்கைச் சரி நேர்ப்படுத்துவதற்கென வரையப்பட்ட சிபாரிசுகளை விடுத்தது. அவை 1930-ம் ஆண்டு ஜனவரி மாதம் மத்தியக் கமிட்டியினால் அங்கீகரிக்கப்பட்ட 'கூட்டுறவுமயமாக்கத்தின் வீதங்கள் மற்றும் கூட்டுப் பண்ணை இயக்கத்திற்கு அரசினால் வழங்கப்படும் உதவி நடவடிக்கைகள் பற்றிய'' தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தன. கூட்டுறவுமயமாக்கக் கால உச்சவரம்பை இத் தீர்மானம் கணிசமான அளவுக்கு ஒத்திவைத்தது. ஆயினும் ஸ்டாலின் அறிமுகஞ் செய்த திருத்தங்கள் காரணமாக அவை தீவிரமாகக் குறைக்கப்பட்டன.

## கூட்டுறவு பண்ணை அமைப்பின் முன்னேற்றம்

கூட்டுறவுமயமாக்கம் இரண்டாவது ஐந்தாண்டு காலகட்டத்தில் (1933—1937) பூரணப்படுத்தப்பட்டது. நாட்டில் தோன்றிய நெருக்கடி நிலைமையை வெற்றிகொள்வதற்கு வழிகளைக் காண்பதை வாழ்க்கை இன்றியமையாக்ததாகியது. வருமானங்களைப் பங்கீடு செய்வதில் சம அளவுக் கோட்பாடுகள் கைவிடப்பட்டன. உழைப்பு ஒழுங்கமைப்புக்கான கூட்டுத்துவ வடிவங்கள் கூட்டுப் பண்ணைகளில் துரிதமாக வலிமை பெற்றன. கடுமையான செயல்பாடுகள் அதிகரித்த அளவுக்கு இயந்திரமயமாக்கப்பட்டன. உழைப்பு ஒழுங்கு வலுவுள்ளதாகியது. விவசாயத்தில் 1933-ம் ஆண்டு 148,000 டிராக்டர்கள் இருந்தன. பாஸிஸ ஜேர்மனிக்கு எதிராக சோவியத் மக்கள் நடத்திய மகத்தான தேசபக்தப்

போரின்போது (1941) இந்த டிராக்டர்களின் எண்ணிக்கை 531,000மாக அதிகரித்தன.

1937—ம் ஆண்டளவில் நாட்டின் 93 சதவீதமான விவசாயிகளை ஐக்கியப்படுத்தும் 243,700 கூட்டுறவுப் பண்ணைகள் இருந்தன. சோஷலிஸ அமைப்பு உண்மையில் சோவியத் ஒன்றியத்திலே பண்ணைத் தொழிலில் ஒரே வடிவமாக மாறியிருக்கிறது.

கிராமப்புறத்தில் சோஷலிஷத்தை வலுப்படுத்துவதில் கூட்டுறவுமயமாக்கத்தின் முக்கியத்துவத்தை இப்போது நாம் மதிப்பீடு செய்கையில் அதை அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்த ஓர் உருமாற்றமாக இருந்தது என கூறமுடியும். கூட்டுறவுமயமாக்கம் நாட்டு மக்களின் வாழ்க்கை முறை முழுவதிலும் தீவிர மாற்றத்தைப் பொருள்படுத்தியது, அதற்கு ஓர் சோஷலிஸ அடிப்படையைக் கொடுத்தது. அது விவசாயத் துறையை நவீனமாக்குவதற்கும் வளர்ச்சியுற்ற பண்ணைத் தொழில் நுட்பங்களின் பாதையில் மறுகட்டமைப்பு செய்வதற்கும் ஆன சமூக அடித்தளத்தை உருவாக்கியது. அது உழைப்பு உற்பத்தியின் கணிசமான அதிகரிப்பைக் கொண்டு வந்தது, சோஷலிஸ நிர்மாணத்திற்காக ஏனைய துறைகளுக்கு தேவைப்பட்ட கணிசமான ஆள் வலுவை விடுவித்தது. பல இலட்சம் பேர்களான விவசாயிகள் பண்ணைக் கூட்டுறவாளர்களின் ஓர் வர்க்கமாக மாறினர். கூட்டுறவுமயமாக்க இயக்கம் வர்க்கத் தரப்படுத்தலின் இறுதி ஊற்றுக்கண்களை அகற்றியது. கிராமபுறத்தில் குலாக்குகளின் சுரண்டலுக்கு முடிவுகட்டியது.

தற்போது, கூட்டுறவுப் பண்ணைகள் சோவியத் பண்ணைத் தொழிலின் அடித்தளங்களில் ஒன்றாக விளங்குகிறது. சமீபத்தில் விவசாயத் தொழில் தொகுப்பின் அனைத்துத் துறைகளதும் ஆற்றல்களை உயர்த்துவதற்காக மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருக்கின்றன. அவற்றின் சாராம்சம் கிராமப்புறத்தில் சமூகப் பொருளாதார நிலைமையை மாற்றுவதிலும் பெரும் உள்ளியல்பாக்கத்தையும் உத்தரவாதமளிக்கப்பட்ட உற்பத்தியையும் ஊக்குவிக்கின்ற நிலைமைகளை உருவாக்குவதிலும் அடங்கியுள்ளது. தற்போது பொருளியல் நிர்வாக முறைகள், செலவுக் கணக்கியல், சுய—நிதியீடு, அரசு மற்றும் கூட்டுப் பண்ணைகளின் விரிவான சுதந்திரம் ஆகியவற்றின் மீது இப்போது அதிகம் வலியுறுத்தல் மேற்கொள்ளப்படுகிறது. உண்மையில், நவீன நிலைமைகளுக்கு இசைவாக லெனினின் ஒத்துழைப்புக் கருத்துக்களை அது ஆக்கபூர்வமாகப் பிரயோகிக்கிறது.

''சோவியத்ஸ்காயா ருஷ்யா''
செய்தித்தாளிலிருந்து

★



# சோவியத் யூனியனில் மறுசீரமைப்பு: இதுவரை சாதிக்கப்பட்டிருப்பது என்ன?

**சோவியத் சமுதாயம், 1986-ம் ஆண்டில் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 27-வது காங்கிரசில் பிரகடனம் செய்யப்பட்ட மறுசீரமைப்பு மற்றும் நாட்டின் சமூகப் பொருளாதார வளர்ச்சியை விரிவுபடுத்துதல் போக்கில் உள்ளது. இதுவரை என்ன சாதிக்கப்பட்டிருக்கிறது?**

இக்கேள்விக்கு பதிலளிப்பது சுலபமான வேலையல்ல. சோவியத் யூனியனில் மேற்கொள்ளப் பட்டுவரும் உருமாற்றங்கள் பெரும் பரிமாணத்தைக் கொண்டவை. தலையாய மாற்றங்களுக்கான போக்கை வகுத்ததன் பின்னர் ஒப்பீட்டளவில் மிகக் குறுகிய காலமே முடிவடைந்திருக்கிறது என்பதே இதற்குக் காரணமாகும். சுருக்கமாகச் சொன்னால், நாட்டில் தற்போது மறுசீரமைப்பு மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. நாடு படிப்படியாக உருமாற்றப்பட்டு வருகிறது. வளர்ச்சி வீதங்களின் பிரமாண்டமான விரைவுபடுத்தலைப் பேணிக்காக்கக் கூடிய கணிசமான சீர்திருத்தங்கள் நாட்டின் பொருளாதாரத்தில் நடைமுறைப் படுத் தப்பட்டு வருகின்றன. அது 2000-வது

ஆண்டளவில் தேசிய வருமானத்தையும் தொழில்துறை உற்பத்தியையும் இரண்டு மடங்காக அதிகரிக்கும், உழைப்பு உற்பத்தியை 130—150 சதவீதமாக அதிகரிக்கும், இது, மக்களின் நபர்வீத மெய்வருமானங்களை 50 முதல் 80 சதவீதம் வரை உயர்த்துவதையும் மக்களுக்கான பண்டங்களின் உற்பத்தியையும் சேவைகளையும் இரட்டிப்பாக்குவதையும் சாத்தியமாக்கும்.

மேலைய அவதானிகள் குறிப்பிட்டிருப்பதைப் போன்று சோவியத் யூனியனில் மறுசீரமைப்புப் போக்கு இப்போது சிலகாலமாக உணரப்பட்டு வருகிறது. சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டியின் ஏப்ரல் (1985) முழுநிறைவுக் கூட்டத்திற்குப் பின்னர் அது ஓர் தரரீதியான புதிய பரிமாணத்தைப் பெற்றிருக்கிறது. அது முனைப்பாகி படிப்படியாக வியாபித்து சமுதாயத்தின் அனைத்துத் துறைகளையும் தழுவுகிறது. சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 27-வது காங்கிரசும் அதைத் தொடர்ந்து நடைபெற்ற கட்சி மத்தியக் கமிட்டியின் முழுநிறைவுக் கூட்டங்களும் அதற்கு ஓர் புதிய உந்து சக்தியைக் கொடுத்தன.

## சிக்கலான நடவடிக்கைகள்

உற்பத்தியின் பொருளாதார, தொழில்நுட்பவியல் அடித்தளங்களை உருமாற்றுதல், பிரஜைகளின் நலவாழ்வை மேம்படுத்தல், சோவியத் மக்களின் உழைப்புச் செயல்பாட்டின் தரத்தை அதிகரித்தல், அவற்றின் தார்மீக அடித்தளங்களை வலுப்படுத்துதல், விஞ்ஞான முன்னேற்றத்தை சோஷலிஸத்தின் அனுகூலங்களுடன் இணைத்தல், தேசியப் பொருளாதார முகாமைத்துவ அமைப்பை மறுகட்டமைப்பு செய்தல், வெளிப்படைப் பண்பு, ஆளணியைத் தரமுயர்த்துதல்— ஆகிய பிரச்னைகள் சோவியத் சமுதாயம் இன்று முகங்கொடுக்கும் பிரச்னைகளில் சிலவே. இம்மார்க்கங்களில் பெரும் பணி ஆற்றப்பட்டிருக்கிறது என்றாலும் இன்னும் பெரும் பணி ஆற்றப்பட வேண்டியிருக்கிறது. இதை விளக்குவதற்கு பொருளாதார நிர்வாக அமைப்பின் மறுகட்டமைவுப் பிரச்னையை ஆராய்வோம்.

இன்று மறுசீரமைப்பின் முதலாவது கட்டம் பூரணப்படுத்தப்பட்டிருக்கிறது. முன்னுள்ள இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் ஆகவும் சிக்கலான, தீர்க்கமான ஆண்டுகளாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இன்று வரையில் சுமார் 40 தேசியப் பொருளாதாரத் துறைகள் நிர்வாகத்தின் மற்றும் உற்பத்தி ஒழுங்கமைப்பின் புதிய அமைப்புக்கு மாற்றப்பட்டிருக்கின்றன. அவை நாட்டின் தொழில்துறை மற்றும் விவசாய உற்பத்தியில் மூன்றில் ஒரு பங்கு மாத்திரமே. மேலும், உற்பத்தியில் அரைவாசி சிறிய மற்றும் மிகச் சிறிய தொழிலகங்களினால் உற்பத்தி செய்யப்படுகிறது. இது சுய—நிதியீட்டிற்கு மாறிச் செல்வது உசிதமானதல்ல, ஏனெனில் இது மூலதன நிதியீடு மேலும் சிதறிப் போவதற்கு இட்டுச் செல்லும், இப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு சோவியத் பொருளியலாளர்கள் இப்போது பாடுபட்டு வருகின்றனர்.



பொருளாதார நிர்வாக அமைப்பை மறுசீரமைப்பதில் தலையாய திசைவழிகளில் ஒன்று சொத்து உறவுகளாகும், சோஷலிஸ அரசினால் பிரதிநிதித்துவம் செய்யப்படும் மக்களே, நாட்டின் செல்வம் முழுவதினதும் சொந்தக்காரர்களாக விளங்குகின்றனர் என்பது நன்கறிந்த விஷயம். இவ்வாறு இருப்பதால், இச் சொத்தைக் கட்டுப்படுத்துவதற்கும் பங்கிடுவதற்குமான திட்டவட்டமான வழிகள் பெரும் ஆர்வத்திற்குரிய விஷயம். நாம் இங்கு எதைப் பொருள்படுத்துகிறோம்? தற்போது சமூகச் சொத்தானது, செயலூக்கமாகவே எவரொருவரின் சொத்தும் அல்ல. எனவேதான் சோஷலிஸத் தொழிலகங்களில் பணிபுரியும் மக்களை தமது தொழிகலங்களது உற்பத்திச் சாதனங்கள் மற்றும் கருவிகளின் முழு உரிமை படைத்த எஜமானர்க்ளாக ஆக்கும் கடமையை நாம் கொண்டிருக்கிறோம், சுய—நிதியீட்டு அமைப்பு அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர், தாம் கொள்வனவு செய்ய வேண்டியுள்ள ஆலையும் சாதனமும் எவை என்பதை தொழிலகங்களே தீர்மானிக்கும். இது குறிப்பிடத்தக்க அளவுக்கு முக்கியமானது, ஏனெனில், அவை இச்சாதனங்களையும் ஆலையையும் தமது சொந்த நிதி மார்க்கங்களில் இருந்தே கொள்வனவு செய்யும்.

தேசியப் பொருளாதாரத்தின் மறுசீரமைப்பில் மற்றுமொரு திசைவழி அதன் ஸ்தாபன அமைப்பையும் ஜனநாயக மத்தியத்துவக் கோட்பாடுகளின் அடிப்படையிலான செயல்பாட்டையும் புத்தாக்கத்திற்கு உட்படுத்துவதும் சிவப்பு நாடாவை ஒழித்துக் கட்டுவதும் ஆகும். மத்திய உறுப்புக்கள் கேந்திரமான வளர்ச்சிக் கடமைகளைக் கையாளும், ஏனைய எல்லாப் பொருளாதாரக் கடமைகளும் தொழிலகங்களிடம் ஒப்படைக்கப்படும்.

## மக்களின் நன்மைக்காக

சோவியத் சமுதாயத்தைப் பொறுத்த வரையில் பொருளாதார முழுநிறைவாக்கமும் வளர்ச்சியும் அதனோடு முடிவடைந்துவிடுவதில்லை. முதலாவதாக, நாட்டின் சமூகப் பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்துவது மக்களது நலவாழ்வை முன்னேற்றும் நோக்கமுடையது.

உற்பத்தி வசதிகளை மறுசாதனப்படுத்துவதும் விஞ்ஞானத் தொழில்நுட்ப முன்னேற்றமும் முதலாளித்துவச் சமுதாயத்தில் நடப்பதைப் போன்று வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு இட்டுச் செல்லாது. இதன் மூலம் வேலை இழக்கும் தொழிலாளர்களும் ஏனைய ஆளணிகளும் வேறு தொழிலகங்களில் வேலை பெறுவர், இன்று முதன்மையான முக்கியத்துவம் வாய்ந்த சேவைகள் துறையின் வளர்ச்சியில் ஈடுபடுத்தப்படுவர்.

21—ம் நூற்றாண்டின் துவக்கத்தில் உழைப்பின் நிலைமைகள் மற்றும் குணாம்சத்திலான மாற்றங்கள் தொழில்துறையில் ஆற்றப்படும் உடலுழைப்பு மற்

றும் குறைந்த தேர்ச்சியுள்ள உழைப்பின் தொகையில் கடுமையான குறைவோடு பிணைந்திருக்கும். இது ரபோத்துக்கள், மின் கணிதப் பொறிகள் மற்றும் ''சிறிய அளவிலான'' இயந்திரமயமாக்கச் சாதனங்கள் பயன்படுத்தப்படுகின்ற உற்பத்திப் பிரிவுகளுக்கு இலட்சோப லட்சம் மக்கள் இடமாற்றப்படுவதைச் சாத்தியமாக்கும். இதைத் தொடர்ந்து உழைப்பின் சால்பு உயர்த்தப்பட்டு கூடுதல் பொருள் பொதிந்ததாக மாறும், அதேசமயத்தில் இத்தொழிலாளர்களின் சம்பளங்களும் கணிசமான அளவுக்கு அதிகமானதாக இருக்கும்.

## சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியும் பொருளாதாரமும்

முன் வைக்கப்பட்டுள்ள விரைவுபடுத்தல் கடமை, கட்சியின் கவனத்தில் மையமான துறையாக விளங்கும் பொருளாதாரத்தின் தலையாய மார்க்கங்களை அவசியப்படுத்துகிறது. கம்யூனிஸ்ட் கட்சி தனது பொருளாதாரப் போர்த்தந்திரவியலை வகுத்துரைத்ததன் பின்னர், இயல்பாகவே, இந்த வேலைத்திட்டத்தின் நடைமுறைப்படுத்தலை ஒழுங்கமைக்கிறது, இவ்வாறு, யாரின் உதவியோடு ஒழுங்கமைக்கிறது? அது தனது ஸ்தாபனங்கள் வாயிலாக. அதாவது, குடியரசு, பிராந்திய, மாவட்ட, நகர மற்றும் பட்டனக் கட்சிக் குழுக்களின் மூலமாகவும் தொழிலகங்களிலும் ஏனைய நிறுவனங்களிலும் உள்ள கட்சி ஸ்தாபனங்கள் மூலமாகவும் இதை மேற்கொள்கிறது. கட்சி அரசு அல்லது பொருளாதார உறுப்புக்களைக் கட்டுப்படுத்துவதில்லை. ஆனால், அவற்றின் நடவடிக்கைகளுக்கு வழிகாட்டுகிறது. அவற்றை மேற்பார்வை செய்கிறது. முதலாவதாக, செயலூக்கமுள்ள தலைமையை உறுதி செய்யும் ஆற்றலுள்ள ஆளணியின் சில பகுதியினரைத் தெரிவு செய்வதன் மூலமும் சிபாரிசு செய்வதன் மூலமும் இப்பணி மேற்கொள்ளப்படுகிறது இத்திசையிலும்கூட சில காலத்திற்கு முன்னர் அதிகம் பணி ஆற்றப்பட்டிருக்கிறது. இந்த உண்மையைச் சித்தரிக்கும் ஓர் உதாரணத்தை நாம் பார்ப்போம்,

மாஸ்கோவில். உலகம் முழுவதிலும் பிரசித்தி பெற்ற கிராஸ்னி புரெலடேரி என்ற ஓர் உற்பத்தி இணையம் இருக்கிறது. இது இயந்திரக் கருவிகளை உற்பத்தி செய்வதில் பேர் போனது, ஒரு சந்தர்ப்பத்தில் அதற்குப் பல கட்டளைகள் கிடைத்தன. நீண்ட காலமாக நிலைநிறுத்தப்பட்ட பொருட்களின் உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் இக் கோரிக்கையை நிறைவு செய்வது சுலபமாக இருந்தது ஆனால். இந்த ஆலையிலுள்ள கம்யூனிஸ்ட்டுகள் ஓர் வித்தியாசமான முடிவை மேற்கொண்டனர். அவர்களது முன்முயற்சியின் பேரில், இத்த ஆலையின் உற்பத்திப் பொருட்கள் பயன்படுத்தப்படுகின்ற 80 தொழிலகங்களை அவர்கள் பரிசோதித்தனர். இந்த ஆலைகளிலுள்ள இயந்திரக்கருவி இருப்பு உற்பத்தி இயல்புக்குப் பொருந்துவதாய் இருக்கவில்லை.

எனவே. கிராஸ்னி புரெலட்டேரியுள்ள கம்யூனிட்டுகள் இத்த இணையத்தின் இயந்திரவியல் சேவைகளையும் பிரிவுகளையும் மறுபுனைவு செய்யவும் மறுசீரமைக்கவும் ஆரம்பித்தனர். இதைத் தொடர்ந்து, பல்வேறு உற்பத்தி நோக்கங்களுக்குப் பொருந்தக்கூடியதாக இயந்திரக் கருவிகள் விருத்திக்கப்பட்டன. இந்த ஆலையின் உற்பத்தி செய்யப்பட்ட வளர்ச்சியுற்ற சாதனத்தின் விகிதாசாரம் ஏறக்குறைய நான்கு மடங்காகியது. இன்று இந்த ஆலை ரபோத் இயந்திரங்களை உற்பத்தி செய்கிறது. இவ்வாறு கிராஸ்னி புரெலட்டேரின் இணையத்தின் கம்யூனிஸ்ட்டுகள் கட்சியினால் வகுத்துரைக்கப்பட்ட வேலைத்திட்டத்தைத் தமது சொந்தத் தொழிலகங்களில் மாத்திரமன்றி இந்த இணையம் தனது இயந்திரக் கருவிகளை அனுப்புகின்ற தொழிலகங்களிலும்கூட நிறைவேற்றுவதில் செலூக்கமுடன் பங்கெடுக்கின்றனர்.

இவ்விதம் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் சமூகப் பொருளாதாரப் போர்த்தந்திரம் நிறைவேற்றப்பட்டு வருகின்றது. மகத்தான அக்டோபர் சோஷலிஸப் புரட்சியின் 70—வது ஆண்டு விழாவைக் குறிக்கும் கூட்டத்தில் 1987 நவம்பர் 2—ம் திகதி உரையாற்றிய எம். எஸ், கொர்பச்சேவ் பின்வருமாறு கூறினார்: ''இன்னமும் அனைத்தும் ஓர் துவக்க நிலையில் இருக்கின்றன. இன்று நாம் பெரோஸ்ட்ரோய்க்காவின் புதிய கட்டத்தில், எம்முடைய எல்லாக் கொள்கைகளும் எம்முடைய தீர்மானங்களும் நடைமுறைச் செயல் வடிவத்தை எடுத்து எதார்த்தமாக மாற்றப்படுகின்ற ஒரு கட்டத்தில் பிரவேசிக்கிறோம். இது எம்முடைய மக்கள் அனைவரையும் பொறுத்தவரையில் — தொழிலாளி வர்க்கம், விவசாயிகள், அறிவுத் துறையினர் மற்றும் எம்முடைய பணியாளர்கள் அனைவரதும் பெரும் முயற்சிக்கு அறை கூவல் விடுக்கிறது. இக்போது முதல் எமது கருத்துக்களும் திட்டங்களும் வேலையின் மனோபாவங்களும் துறைகளும் நடைமுறைப் பிரயோகப் பரீட்சையில் தேற வேண்டியிருக்கும்.''

சோவியத்
பத்திரிகையிலிருந்து

★

# சோவியத் யூனியன் வேலையில்லாப் பிரச்னைக்கு முகங்கொடுக்கிறதா?

சோவியத் யூனியன் சமூகப் பொருளாதார வளர்ச்சியைத் தீவிரமாக மறுகட்டமைப்பு செய்கின்ற, விரைவுபடுத்துகின்ற போக்கை நடைமுறைப்படுத்தி வருகிறது, இது வேலை வாய்ப்பை எவ்வாறு பாதிக்கும்?

நொவஸ்தி செய்தி நிறுவனத்தின் நோக்கர் விளாதிமீர் குரேவிச் இக்கேள்விக்குப் பதிலளிக்கிறார்.

## பற்றாக்குறையா அல்லது உபரியா?

**சோ**வியத் யூனியனில் வேலை வாய்ப்புப் பிரச்னைக்கு 1930—ம் ஆண்டுகளின் ஆரம்பத்தில், தொழில்மயமாக்கக் காலகட்டத்தில் தீர்வு காணப்பட்டது. நாம் பிற்காலத்தில் அது தன்னியல்பாகவே தீர்க்கப்பட்டது என்று நினைப்பதில் பழக்கப்பட்டுப் போய்விட்டோம். ஆனால், அந்த வெற்றி இன்றைய கடமைகளின் கோணங்களிலிருந்து பார்க்கும்போது ஓர் பின்னடைவைக் கொண்டு வந்தது. அது விரிவான பொருளாதார வளர்ச்சியின் குணவியல்பாகும். பொருளாதாரத்தை உள்ளியல்பான வளர்ச்சி மார்க்கங்களுக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் வேலை வாய்ப்புப் பிரச்னை குறித்து மாறுபட்ட கண்ணோட்டம் ஏற்கப்பட்டு வருகிறது.

இங்கு, நான் சோவியத் யூனியனில் உழைப்புச் செல்வாதாரங்கள் பற்றி விளக்கிக் கூற விரும்புகிறேன். அடுத்துவரும் 15 ஆண்டுகளின்போது (1981—1995) நாட்டின் உழைக்கும் மக்கள் தொகையின் அதிகரிப்பு, ஒரு ஐந்தாண்டுத் திட்ட கால கட்டத்தின் போது (1976—1980) இருந்ததைவிட குறைவாக இருக்கும். இந்த சாதகமற்ற போக்கு இன்று நாம் ஏற்கனவே முகங்கொடுக்கும் பல சிரமங்களை மேலும் உக்கிரமடையச் செய்யும். சோவியத் யூனியனின் பெரும்பாலான பிராந்தியங்களில் உள்ள புதியத் தொழிலகங்களின் எல்லா வேலைத்தளங்களிலும் சுமார் 20 சதவீதமானவற்றுக்கு ஆள்வலு வகைசெய்யப்பட்டிருக்கவில்லை. சில புள்ளி விபரங்களின்படி ஆள்வலுத் தேவையானது, ஓர் தொழிலை தெரிந்தெடுப்பதற்குத் திரும்புகின்ற, பாடசாலையிலிருந்து வெளியேறுபவர்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் ஆறு தடவைகள் விஞ்சி நிற்கின்றது. கட்டிட மற்றும் விவசாயத் தொழிலாளர்களின் பற்றாக்குறைக்கு நாம் முகங்கொடுத்திருக்கிறோம்.

ஆனால், எல்லா தர்க்கவியல்களுக்கும் மாறுபட்ட விதத்தில், முற்றிலும் வித்தியாசமான கருத்துக்களைப் புள்ளிவிபரவியலாளர்கள் தெரிவிக்கின்றனர். சோவியத் யூனியனில், ஆகக் குறைந்தது, இங்கு கோரப்படுகின்ற விதத்தில் தொழிலாளர் பற்றாக்குறை கிடையாது என்று அவர்கள் கூறுகின்றனர். சோவியத் பொருளியலாளர்கள் பலர் பற்றாக்குறை நிலவுவது பற்றி வாதிடுகின்றனர், உழைப்பு இயக்கவியலை ஓர் ஸ்தூலமான காரணி என மதிப்பிடுகின்றனர். அவர்களின் கண்ணோட்டத்தின்படி உழைப்புச் செல்வாதாரங்களின் வளர்ச்சி தாமதமாவது பயன்தரத்தக்கது, வேலையிலிருந்து நீங்கிய தொழிலாளர்களின் வேலைவாய்ப்பு பிரச்னையின் முனைப்பான தன்மையை இது குறைக்கிறது.

மேலும் சிலர், பெருமளவு தொழிலாளர்கள் உபரியாக இருக்கின்றனர் என்ற பிரச்னையை எழுப்புகின்றனர். இது பொதுவாகவே, ''வேலையிலிருந்து நீங்கிய'' தொழிலாளர்களைப் பொருள்படுத்தவில்லை. இன்றைய உற்பத்தி மற்றும் சேவைகளின் அளவுகளை, தொழில்நுட்பத்தில் மேற்கொள்ளப்படும் அடிப்படையான மாற்றங்கள் இல்லாமல் முற்றிலும் சிறப்பான ஒழுங்கமைப்பின் மூலம் உறுதி செய்வதற்கு மிகச் சிறிய அளவிலான ஆளணி போதுமானதென அவர்கள் வலியுறுத்துகின்றனர்.

நாம் இயந்திரவியலாளர்களில் உபரியைப் பெற்றிருக்கிறோம். இத்தொழிலில் ஈடுபட்டுள்ள நிபுணர்களில் அரைவாசிக்கும் அதிகமானவர்கள் உயர் கல்வி பெற்றவர்கள். தாம் தேர்ச்சி பெற்றுள்ள துறைகள் அல்லது தேர்ச்சிகள் அவசியப்படாத துறைகளில் அவர்கள் பதவி வகிக்கின்றனர். இது அறிவுபூர்வமற்ற வேலைவாய்ப்பாகும். இன்று சமநிலையின்மைகளின் ஊற்றுக் கண்களில் ஒன்றையாவது நிவர்த்திப்பதற்கு முடிவுகள் எடுக்க வேண்டும் என பரிந்துரைக்கப் பட்டிருக்கிறது. இது உயர் கல்விப் பள்ளியாகும். முதலாவதாக, இயந்திரவியல் மற்றும் தொழில்நுட்பவியல் தனித் தேர்ச்சிகளுக்கான

மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதைக் குறைப்பது. இரண்டாவது, தொழிலகங்களுக்குத் தேவைப்படும் நிபுணர்களின் அடிப்படையில் நிபுணர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கான திட்டங்களை மாற்றியமைப்பது. மூன்றாவது, தொழிலாளர்கள் தேவையென கோருபவர்கள் நிர்வாக மற்றும் பொருளாதாரப் பொறுப்பை நிச்சயம் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஓர் தொழிலகத்துக்கு இளம் நிபுணர் ஒருவர் உண்மையிலேயே அவசியமானால் அத்தொழிலகம் அவரைப் பயிற்சிக்காக தனது சொந்த நிதியிலிருந்து 3,000 ரூபிள்களை ஒதுக்க வேண்டும்.

அதேசமயத்தில், சோவியத் யூனியனின் பல இடங்களில் தேர்ச்சி பெற்ற ஆள்வலுவுக்கான பெரும் தேவைகள் உள்ளன, ஏனைய இடங்களில் வேலைகளின் மெய்யான பற்றாக்குறை நிலவுகிறது. இது தனித்துவத் துறைகளிலும் பிராந்தியங்கள் முழுவதிலும் நிலவும் நிலைமை. நாட்டில் தொழிலாளர்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள பிராந்தியங்கள் சைபீரியாவும் சோவியத் தொலைகிழக்குமாகும். எல்லாத் துறைகளிலும் உற்பத்தி அல்லாத துறையே மிக மோசமான அளவுக்குத் தொழிலாளர் பற்றாக் குறையினால் பாதிக்கப்பட்டுள்ளது.

## முழுமையான வேலைவாய்ப்பிலிருந்து அறிவுபூர்வமான வேலைவாய்ப்புக்கு

சோவியத் யூனியனில் வேலைவாய்ப்புப் பிரச்னைகள் விடுவிக்கப்படுகின்ற தொழிலாளரின் அளவுக்கும் சாத்தியமாகக் கூடிய வேலை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கும் குறைக்கப்படவில்லை. எண்ணற்ற விகிதாசாரங்கள் எமக்குப்பொருந்தும். இதற்கு உழைப்புச் செல்வாதாரங்களை மறுவிநியோகம் செய்வதில் உள்ள குறைபாடுகள் மற்றும் சமநிலையின்மையில் அமைப்பு இல்லாமல் இது தவிர்க்க முடியாததாகிவிடும். இக் கடமையை ஒவ்வொரு நகரத்திலும் செயல்பட்டுவரும் வேலைவாய்ப்புப் பணியகங்கள் நிறைவேற்றி வருகின்றன. இந்த போக்கில், அத்தகைய பணியகங்களின் சேவைகளை 20 சதவீதத்தினர்மாத்திரமே பயன்படுத்துகின்றனர். தகவலைத் திரட்டுவது மற்றும் அவற்றை சரிநேர்ப்படுத்துவது ஆகிய துறைகள் இன்னமும் பழைய மாதிரியே செயல்படுகின்றன. ரிகா, திபிலிஸி போன்ற சில நகரங்கள் தன்னியக்கமான தகவல் முறைகளைப் பயன்படுத்துவதற்கு ஆரம்பித்திருப்பது உண்மையே. மின்கணிதப் பொறிகள் ஒருவரின் விருப்பத்திற்குரிய தொழில், வருமானம், பயண நேரம் போன்றவற்றை வெளிப்படுத்துகின்றன. ஆயினும் மின் கணிதப் பொறிகள் வெறும் உதவியை மாத்திரமே வழங்க முடியும்.

ஆனால், இதன் சாராம்சம் பொருளாதார நிர்வாகத்தின் சோஷலிஸ அமைப்பில், அதன் திட்டமிடல் கோட்பாட்டில் மாத்திரமே தங்கியிருக்க முடியும். புதிய தொழிலகம் ஆரம்பிக்கும்போது, பழைய தொழிலகம் நவீனமாக்கப்படும்போது விடுவிக்கப்படுகின்ற அல்லது சேர்த்துக் கொள்ளப்படவுள்ள



தொழிலாளர்களின் மிகத் துல்லிதமான எண்ணிக்கையை நாம் தெரிவிக்க முடியும். இதை மாவட்ட மட்டத்திலிருந்து அகில ஒன்றிய மட்டம் வரையில் மேற்கொள்ளலாம். ஆனால், இந்த அத்தியாவசியமான வாய்ப்பு நடைமுறையில் செயற்படுத்தப் படவுள்ளது, திறமையானவர்களுக்கு மறுபயிற்சி அளிப்பது, வேலைவாய்ப்பைப் பெறுவதற்கான காலகட்டத்திற்கான கொடுப்பனவுகள், மறுபயிற்சியை மேற்கொள்வதற்கான காலகட்டத்தின்போது குறைந்த சம்பளங்களுக்கு நட்டஈடு போன்றவற்றிற்கான அவசியமும் உள்ளது. அத்தகைய ஓர் கடமை உழைப்புச் செல்வாதாரங்களை மறுபங்கீடு செய்வது, மற்றும் மறுபயிற்சி அளிப்பது ஆகியவற்றுக்கான அரச அமைப்பின் மூலம் மாத்திரமே மேற்கொள்ளப்பட முடியும், செயலூக்கமுள்ள வேலைவாய்ப்பை உறுதி செய்வதற்கான அமைப்பின் மூலமே உறுதி செய்ய முடியும். இது சாதாரணமாகவே ''தத்துவார்த்த ரீதியிலான ஆய்வு'' அல்ல. இந்தவிதமான அமைப்பை உருவாக்கும் தீர்மானம் 1987 கோடை காலத்தில் அங்கீகரிக்கப்பட்டது.

''ஏபிஎன்''

## சோஷலிஸமும் இன்றைய உலகும்

# புறவெளியைக் கண்டறிவதற்கான வாய்ப்புகள்

**உலகில் புதிய யுகத்துக்கு, மனிதகுலத்தின் வரலாற்றில் ஓர் புதிய கட்டத்துக்கு யூரி ககாரினின் விண்வெளிப் பயணம் கட்டியங் கூறியது.**

**விண்வெளியியலின் வளர்ச்சியினது பெறுபேறுகள் மற்றும் வாய்ப்புக்கள் குறித்து பேரவையாளர் போரிஸ் ரௌசன்பார்க்கும் சோவியத் விண்வெளி வீரரான கொன்ஸ்தாந்தைன் பியோக்திஸ்தோவும் விளக்கிக் கூறுகின்றனர்.**

பி. ரௌசன்பார்க்: புறவெளியில் தன்னியக்கக் கருவிகள் செயல்படுகின்றன என்பதை இன்றைய மனிதன் உண்மையிலேயே அவதானிப்பதை நிறுத்தியுள்ள இன்றைய தறுவாயில், மனிதனின் வாழ்வில் விண்வெளித் தொழில்நுட்பம் உறுதியான அடியைப் பதித்திருக்கிறது. தொலைத் தொடர்பு செய்மதிகள் கண்டங்களை இணைக்கின்றன, பரந்த தூரங்களுக்குத் தொலைக்காட்சிப் படங்களை அனுப்புகின்றன. காலநிலைச் செய்மதிகள் இல்லாமல் நவீன காலநிலைச் சேவைகளையும் தேசிய பொருளாதாரத்தில் அனைத்துத் துறைகளது செயல்பாட்டையும் கற்பிதம் செய்து பார்ப்பதும் அசாத்தியம். இன்று நாம் விண்வெளி மூலம் கடற் போக்குவரத்துக் கருவிகளைப் பயன்படுத்துகிறோம், கடலில் நிராதரவாகவுள்ள மக்களிடமிருந்து சமிக்கைகளையும் நாம் விண்வெளியிலிருந்து பெறுகிறோம். உண்மையில் கடந்த தசாப்தத்தில் விண்வெளியியல், தேசியப் பொருளாதாரத்தின் ஓர் கிளையாக நிலைநிறுத்தப்பட்டிருந்தது. இது அதனது வளர்ச்சியின் இயல்பை நிர்ணயிக்கிறது. அடுத்த சில ஆண்டுகளில் விண்வெளித் தொழில்நுட்பம் விரிவான பிரயோகத்தைக் காணும், குறிப்பாக, இயற்கைச் செல்வாதாரங்களைக் கண்டறிவதில் இன்னும் விரிவான பிரயோகத்தைக் காணும், தாவர வாழ்வை அவதானிக்கும், சுற்றுச் சூழல் அசுத்தமடையும் போக்குகளை அவதானிக்கும் என்பதில் சந்தேகமில்லை. இதற்குக் கவனமான திட்டமிடலும் ஆழத்தோய்ந்த பொருளாதாரச் சாத்தியத்தன்மை ஆய்வுகளும் அவசியம் என்பதில் ஐயமில்லை.

கே. ஃபியோதிஸ்தோவ்: விண்வெளியியலின் வளர்ச்சி மக்களின் வாழ்க்கை முறையை மாற்றி வருகிறது என்று கூறினால் அது மிகையல்ல. ஆயிரக்கணக்கான நிபுணர்கள் தமது இல்லங்களைவிட்டு வெளியேறாமல் தமது ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புக்களை எந்த முகவரிக்கும் அனுப்பக்கூடியதாக இருக்கும். இது புதிய கருத்து, அறிவார்ந்தத் துறையின் குணம்சமும் நிறையும் ஆகும். விண்வெளித் தொழில்நுட்பத்தின் மூலம் கிடைக்கும் பயன் அளப்பரியது. ஆனால் இன்னமும் விண்வெளி தொழில்நுட்பத்திலிருந்து அதிகம் பயன்படுத்தப்படாமல் இருக்கிறது,

பி. ரௌசன்பார்க்: முன்னுள்ள தசாப்தங்களில் தன்னியக்கக் கருவிகள் அதிகமாகக் காணப்படும், புவியிலுள்ள நாம் இதற்குத் தயாராக இருக்க வேண்டும் என்பது எம்மைப் பொறுத்தரையில் முக்கியமானது. நான் ஏன் அவ்வாறு நினைக்கிறேன்? முதலாவதாக, நவீன தொழில்நுட்பமானது அதிகபட்ச அளவில் தன்னியக்கத்தையும் ரபோத்மயமாக்கத்தையும் மின்னியந்திரவியல் மயமாக்கத்தையும் பொதுவான போக்காகக் கொண்டிருக்கிறது. இந்தப் போக்கு தொடரும் என்பதோடு மாத்திரமன்றி முன்னுள்ள வருங்காலத்தில் அதிகரிக்கும் என்பதும் உண்மை. இரண்டாவதாக, விண்வெளியிலுள்ள தன்னியக்கக் கருவிகள் மானிடர்கள் மீது எண்ணற்ற அனுகூலங்களைக் கொண்டிருக்கின்றன. இவ்விதம் அவசியப்படும் கால கட்டம் வரையில் செயல்படுகின்றன. அவற்றின் நிகழ்ச்சித் திட்டம் முடிவடைந்ததும் அவற்றைப் பூமிக்குக் கொண்டுவர வேண்டிய அவசியமில்லை. பல்லாயிரக் கணக்கான தன்னியக்கக் கருவிகளால் இன்று மேற்கொள்ளப்படும் இப்பணியின் அளவு விண்வெளியாளர்களால் மேற்கொள்ளப்படும் பணியின் அளவைவிட கணிசமான அளவுக்கு அதிகமானது. இந்த இடைவெளி தொடர்ந்தும் அதிகரிக்கும்.

**கே. பியோதிஸ்தோவ்:** வருங்காலம் தன்னியக்கக் கருவிகளுக்கே உரியது என்று நானும் நம்புகிறேன், தொழில்நுட்பவியல் போக்குகளில் உறுப்புரீதியான பகுதிகள் என்ற வகையில் நிறையற்றத் தன்மையைப் பயன்படுத்துவது, உற்பத்தியின் தன்னியக்கமாக்கப்பட்ட நிலைமையை உருவாக்குவது ஆகியவற்றில் நாம் இப்போது பக்குவப்பட்டிருக்கிறோம். இது தொடக்கம் மாத்திரமே. ஆகவும் சாதகமுள்ள கடுமையான உற்பத்தி வகையினங்களைப் புவியின் வரம்புக்கு அப்பால் மாற்றக்கூடிய தருணம் எமக்குச் சாத்தியமாகும் என்பதில் ஐயமில்லை. இதற்கு நாம் இன்றே கருத்தாழமுள்ள கவனத்தைச் செலுத்த வேண்டும்.

மனிதனால் செலுத்தப்படும் விண்களங்கள் பற்றி சில வார்த்தைகள். 1961—ம் ஆண்டில் ஆரம்பமான விண்வெளியியல் தொழில் மேலும் வளர்ச்சியுற்று நவீனமாக்கப்படும். மனிதன் புறவெளியில் தன்னியக்கக் கருவிகளின் மீது தனது சொந்த அனுகூலங்களைக் கொண்டிருக்கிறான். ஓர் விண்வெளி ஆய்வுக் கூடம் எத்தகைய தன்னியக்க கடமையின் அளவைக் கொண்டிருந்தாலும் அதற்கு மனிதனின் பங்கேற்பு அவசியமாகிறது. திருத்தம், பழுதுபார்ப்பு மற்றும் விண்வெளிக் கலத்தின் சாதனங்களை அகற்றுவது ஆகியன விண்வெளி வீரர்களாலேயே மேற்கொள்ளப்படும் என்பதே உண்மை.

**பி. ரௌசன்பார்க்:** விண்வெளித் தொழில்நுட்பவியலுக்கான செலவு மிகவும் கூடியது. எனவே அதைப் பல ஆண்டுகளுக்கு சுற்றில் வைத்திருப்பது பரிந்துரைக்கப்பட்டது. தன்னியக்கப் பயணங்களில் செயல்படும் தன்னியக்கக் கருவிகள் தமது செயல்பாடுகளுக்கு இசைவாக, பழுது பார்ப்புகளுக்கும் திருத்தங்களுக்குமாக புவிக்குக் கொண்டுவரப்படுகின்றன.

இவ்விஷயத்தில், புறவெளியில் இயங்கிவரும் சோவியத் யூனியனின் ''மிர்'' என்ற கலம் பல்வேறு கூறுகளைக் கொண்டிருக்கிறது. இதைப் பற்றி நாம் ஏற்கனவே குறிப்பிட்டோம். குறிப்பிடப்பட்ட தொகுப்பின் பயணப் பரிசோதனைகளில் பெறப்பட்ட அனுபவத்தின் முக்கியத்துவத்தை நாம் மிகையாக மதிப்பிடுவது சிரமம்.

**கே. பியாதிஸ்தோவ்:** விண்வெளியியலின் வளர்ச்சி பற்றி நாம் விவாதிக்கும்போது, புவிக்கு அண்மிய புறவெளியில் வருங்காலத்தில் குடியிருப்புக்களை அமைப்பது பற்றிய பிரச்னைகளின்பால் திரும்புகிறோம். சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்னர் மனிதகுலம் புறவெளியில் குடியிருக்கும் என்பதில் நான் நம்பிக்கை கொண்டிருந்தேன் என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். சில கணிப்பீடுகள் மற்றும் பிரதிபலிப்புக்களின் பின்னர் இக்கருத்தை நான் விட்டுவிட்டேன்.

**பி. ரௌசன்பார்க்:** இச் சந்தர்ப்பத்தில் நான் உலகப் பிரச்னைகளைக் குறிப்பிட விரும்புகிறேன். விண்வெளித் தொழில்நுட்பவியல் அவற்றுக்குத் தீர்வு காண்பதற்கு பொருத்தமானதென நிரூபிக்கிறது. புவியமைவியல், விசை, மற்றும் செல்வாதாரம், உணவு ஆகியன உலகப் பிரச்னைகளாகும், ஏனெனில், அவை மனிதகுலம் முழுவதற்கும் உரியவை; அவற்றைத் தேசிய எல்லைகளின் வரம்புக்குள் தீர்க்க முடியாது. அவற்றின் சாராம்சத்தைப் பொறுத்த வரையில் அது எமது கோளின் மக்கள் அனைவரையும் தழுவியிருக்கிறது, அவற்றின் தீர்வுக்குச் சர்வதேச ஒத்துழைப்பும் உலகளாவிய அணுகுமுறைகளும் அவசியம். விண்வெளியிலிருந்து புவியைக் கண்டறிவது இவ்விஷயத்தில் விசேட வாய்ப்புக்களைக் கொண்டிருக்கிறது. இதற்கேற்பவே நாம் செயல்பட வேண்டும் என்பதை நான் வலியுறுத்துகிறேன். புறவெளியில் சர்வதேச ஒத்துழைப்பு வளர்ந்தோங்கி வருகிறது. இதுவரையில் பெறப்பட்டுள்ள விலைமதிக்கவொண்ணாத அனுபவம் எமக்கு நம்பிக்கையைத் தருகிறது.

கடைசியாக, மிகப் பெரிய உலகப் பிரச்னை சமாதானத்தைப் பேணிக்காப்பதாகும். விண்வெளி வாகனங்கள் இன்று மிகவும் பொறுப்புவாய்ந்த பாத்திரத்தை நிறைவேற்றியுள்ளன. ஏனெனில், ஆயுதங்கள் மீதான கட்டுப்பாடு அவற்றின் உதவியுடனேயே மேற்கொள்ளப்படுகிறது.



**கே. பியோக்திஸ்தோவ்:** விண்வெளியை இராணுவமயமாக்குவதைத் தடுக்கும் மற்றுமொரு கடமையும் இருக்கிறது. ரீகனின் கேந்திரப் பந்தோபஸ்து முன்முயற்சி ஆகவும் பெருமையடிக்கப்பட்ட குறிக்கோளை அடையமுடியாது. இது அமெரிக்கா மீதும் வேறெந்த நாடுகளின் பிரதேசத்தின் மீதும் விண்வெளிக் ''குடையை'' உருவாக்குவதைப் போன்றதாகும். இது பல்வேறு நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகள், தனித்தனியாக மேற்கொண்ட ஆய்வுகளின் மூலம் நிர்ணயிக்கப்படுகின்றது.

**பி. ரௌசன்பார்க்:** எமது யுகத்தைப் பின்னோக்கிப் பார்க்கும் வருங்காலத் தலைமுறையினர் அதை விண்வெளி யுகம் என்று குறிப்பிடுவர். இதில் நம்பிக்கை வைப்போம்.

கம்யூனிஸ்ட்
சஞ்சிகையிலிருந்து

★

## இளைஞர் உலகம்

# இளைஞர் பற்றி லெனின்

1898ம் ஆண்டு லெனினது தலைமையின் கீழ் உருவாக்கப்பட்ட புரட்சிகரமான கட்சி, அதன் ஆரம்பகாலத்திலிருந்தே நாட்டின் அனைத்து ஜனநாயக, புரட்சிகர கக்திகளை அணிதிரட்டவும் ருஷ்யாவில் ஜாரிஸத்தைத் தூக்கிவீசவும் சோஷலிஸப் புரட்சிக்கு ஆயத்தம் செய்யவுமான கடமையை வரித்துக் கொண்டது. லெனினும் கட்சியும் இளைஞர்கள் மத்தியில் பணியை மேற்கொள்வதற்கு விசேட கவனம் செலுத்தினர்; அதை ஓர் செயலூக்கமுள்ள அரசியல் சக்தியாகவும் புரட்சியின் முக்கியமான சேமப்படையாகவும் நோக்கினர்.

புரட்சிகரப் போராட்டத்தில் இளைஞரின் பாத்திரம் பற்றிய லெனினின் கூற்றுக்களைக் கீழே தருகிறோம்.



தொழிலாளி வர்க்கம் தனது விடுதலைக்கான போராட்டத்தை ஏற்கனவே தொடங்கியிருக்கிறது. இம் மாபெரும் போராட்டம் அதன் மீது பெரும் கடமைப் பொறுப்புக்களைச் சுமத்துகிறது என்பதையும் அனைத்து மக்களையும் கொடுங்கோன்மையிலிருந்து விடுவிக்காமல் அது தன்னைத் தானே விடுதலை செய்ய முடியாது என்பதையும் நினைவிற் கொள்ள வேண்டும். மாணவ இளைஞருக்கெதிராக அரசாங்கம் துருப்புக்களை அனுப்பும் சமயத்தில், அசட்டையாகப் பார்க்கக் கூடிய ஒரு தொழிலாளி சோஷலிஸட் என்ற பெயருக்கே அருகதையில்லாதவர். மாணவர்கள் தொழிலாளர்களுக்கு உதவியாக வருகின்றனர்—தொழிலாளர்களும் மாணவர்களுக்கு உதவ முன்வர வேண்டும்.

''இராணுவத்திற்குள் 183 மாணவர்களைச் சேர்ப்பது பற்றி'' (1901)

★

நாம் வருங்காலத்தின் கட்சியைச் சேர்ந்தவர்கள், மேலும் வருங்காலம் இளைஞர்களுக்கேயுரியது. நாம் புதுமைப் புனைவாளர்களின் கட்சியைச் சேர்ந்தவர்கள், மேலும் புதுமைப்புனைவாளர்களை எப்போதுமே பேரார்வத்துடன் பின்பற்றுபவர்கள் இளைஞர்களே. பழைய சீரழிவுக்கு எதிராகப் பரித்தியாகப் போராட்டத்தை நடத்திவரும் கட்சியைச் சேர்ந்தவர்கள் நாம். மேலும் பரித்தியாகப் போராட்டத்தை எப்போதுமே இளைஞர்களே முதலில் எடுக்கின்றனர்.

''மென்ஷிவிஸத்தின் நெருக்கடி'' (1906)

★

புரட்சிக்கு முன்னர், எமது புரட்சிகரக் கோஷங்களை முதலில் ஆய்வு வட்டங்களுக்குள்ளும் பின்னர் உழைக்கும் வெகுஜனங்கள் மத்தியிலும் பின்னர் தெருக்களுக்கும், பின்னர் படையரண்களுக்குள்ளும் கொண்டு சென்று பல ஆண்டுகளாக, தஸாப்தங்களாக நாம் பணியாற்ற முடிந்துள்ளது. இப்போதும் கூட, முதலாகவும் முதன்மையாகவும் இத்தருணத்தின் கடமையை, அதாவது வலுவான பாட்டாளி வர்க்க ஸ்தாபனத்தை நிர்மாணித்து, அதன் புரட்சிகரக் கோட்பாட்டுச் சொற்களுக்காக வெகுஜனங்கள் மத்தியில் எல்லா இடங்களிலும் அரசியல் கிளர்ச்சியை மேற்கொள்ளும் கடமையை ஒழுங்கமைக்கக் கூடியவர்களாக நாம் இருக்க வேண்டும் ஸ்தூலமான இயக்கத்தின் அடிப்படையில் தமது சொந்த மாணவர்கள் மத்தியில் இந்தக் கிளர்ச்சியை ஒழுங்கமைக்கும் கடமையை எமது பல்கலைக் கழகக் குழுக்கள் கையாள வேண்டும்.

''மாணவர் இயக்கமும் அரசியல் நிலைமையும்'' (1908)

★

நாம் போராடுவதற்குக் கற்றுக் கொள்வதற்கு, துரிதமாகக் கற்றுக் கொள்வதற்குத் துவங்கி இருக்கிறோம்—எம் முன்னோர்களில மிகச் சிறந்தவர்கள் போராடியதைப் போன்று தனிநபர்களாக அல்ல, எமது உணர்வுக்கு விரோதமானவர்களான முதலாளித்துவச் சொற்பெருக்காளர்களின் கோஷங்களுக்காக அல்ல, ஆனால் எமது கோஷங்களுக்காக, எமது வர்க்கத்தின் கோஷங்களுக்காக. எமது தந்தையர்களை விட சிறப்பாக நாம் போராடுகிறோம். எமது குழந்தைகள் எம்மைவிடச் சிறப்பாகப் போராடுவர்; அவர்கள் வாகைசூடுவர்.

''தொழிலாளி வர்க்கமும்
நவ மல்த்தூஷியன்
வாதமும்'' (1930)

●

இளைஞர் ஏடு, இன்னமும் போதிய அளவுக்குத் தத்துவார்த்தத் தெளிவும் முரணின்மையும் இல்லாமல் இருக்கிறது என்பது வாஸ்தவமே. மிகத் துல்லிதமாய், குமுறுகின்ற, கொந்தளிக்கின்ற, விசாரணையில் ஈடுபடுகின்ற இளைஞரின் ஏடு என்பதால், அவற்றை ஒருபோதும் பெற்றுக் கொள்ளாமலும் இருக்கலாம். பாட்டாளி வர்க்கத்துக்குத் தலைமை தாங்கவும் போதிக்கவுமான உரிமையைக் கோரும் வயதுவந்தவர்கள், அதை உண்மையிலேயே தவறாக இட்டுச் செல்வது ஒரு விஷயம்; அத்தகைய மக்களுக்கு எதிராக ஈவிரக்கமற்ற போராட்டத்தை நடத்த வேண்டும். ஆயினும், தாம் இன்னமும் கற்று வருவதாகவும், சோஷலிஸ்ட் கட்சிகளுக்கான கட்சி ஊழியர்களைப் பயிற்றுவிப்பதே தமது பிரதான கடமை என்றும் பகிரங்கமாகப் பிரகடனம் செய்கின்ற இளைஞர் ஸ்தாபனங்கள் மற்றொரு விஷயம். அத்தகைய மக்களுக்குச் சகல உதவிகளையும் வழங்க வேண்டும். நாம், அவர்களின தவறுகளையிட்டுப் பொறுமையாக இருக்க வேண்டும், அவர்களை எதிர்த்துப் போராடாமல், இணங்க வைப்பதன் மூலம் அவர்களைப் படிப்படியாகத் திருத்த முயல வேண்டும். நாம், தீர்க்கமாகவே இளைஞர் கழகங்களின் ஸ்தாபனச் சுதந்திரத்தை ஆதரிக்க வேண்டும்.; சந்தர்ப்பவாதிகள் அத்தகைய சுதந்திரத்தையிட்டு அஞ்சுவது மாத்திரம் இதற்குக் காரணமல்ல; இவ்விஷயத்தின் இயல்பும் காரணமாகும். அவர்களுக்குப் பரிபூரண சுதந்திரம் இல்லாவிட்டால், இளைஞர்கள் தம் மத்தியிலிருந்து சிறந்த சோஷலிஸ்ட்டுகளைப் பயிற்றுவிப்பதற்கோ அல்லது சோஷலிஸத்தை முன்னெடுத்துச் செல்வதற்காகத் தம்மைத் தாமே ஆயத்தம் செய்யவோ முடியாமல் இருக்கும்.

''இளைஞர் அகிலம்''
(1916)

★

வளர்ந்து வரும் இளம் தலைமுறையினர் எப்படிக் கம்யூனிஸத்தைக் கற்றறிய வேண்டும் என்கிற கேள்விக்கு இதுவே பதில.

இவர்கள் தமது படிப்பு, பயிற்சி, கல்வி இவற்றின் ஒவ்வொரு படியையும் சுரண்டலாளர்களது பழைய சமுதாயத்தை எதிர்த்துப் பாட்டாளிகளும் உழைப்பாளி மக்களும் நடத்தும் தொடர்ச்சியான போராட்டத்துடன் இணைத்துக் கொள்வதன் மூலமே கம்யூனிஸத்தைக் கற்றறிய முடியும்...



இந்த நோக்கம் ஈடேற முதலாளி வர்க்கத்துக்கு எதிரான கட்டுப்பாடு வாய்ந்த உக்கிரமான போராட்டத்தின்போது அரசியல் முதிர்ச்சி பெறத் தொடங்கிய இளம் மக்களின் தலைமுறை நமக்குத் தேவைப்படுகிறது. இந்தப் போராட்டத்தில் இத்தலைமுறை மெய்யான கம்யூனிஸ்ட்டுகளைப் பயிற்றுவிக்கிறது; அது தனது படிப்பு, கல்வி, பயிற்சி இவற்றின் ஒவ்வொரு படியையும் இந்தப் போராட்டத்துக்குக் கீழ்ப்படியச் செய்து இதனுடன் இணைத்துக் கொள்ள வேண்டும. நல்லுரைகளும் நன்னெறி விதிகளும் போதிப்பதல்ல கம்யூனிஸ்டு இளைஞர்களுக்கான கல்வி போதனை. இதல்ல கல்வியின் உள்ளடக்கம். நிலப்பிரபுக்கள், முதலாளிகளது ஒடுக்குமுறையில் தம் தாய், தந்தையர் வாழ்ந்த முறையைக் கண்டுணரும் போது, சுரண்டலாளர்களுக்கு எதிரான போராட்டத்தைத் தொடங்கியோர் பட்ட துன்பங்களைத் தாமே நேரில் அனுபவித்துள்ள போது, வென்று கொண்டதை இழக்காது பாதுகாப்பதற்காகப் புரிய வேண்டியிருந்த தியாகங்களையும் நிலப்பிரபுக்களும் முதலாளிகளும் எவ்வளவு கொடிய பகைவர்கள் என்பதையும் காணும் போது—இந்நிலைமைகளிலேயே இம் மக்கள் கம்யூனிஸ்டுகளாய்ப் போதனை பெறுகின்றனர்.

நாம் திடமாய் ஒன்றுபட்டிருக்கக் கற்றுக் கொண்டால் தான் மேற்கொண்டு நடைபெறும் போராட்டத்தில் வெற்றி பெறுவோம், பலம் மிக்கோராகி, மெய்யாகவே வெல்ல முடியாதவர்களாவோம். ஆகவே நீங்கள் இளம் தலைமுறை அனைத்தையும் ஒழுங்கமையச் செய்து ஒன்றுபடுத்த வேண்டும், இந்தப் போராட்டத்தில் கல்வி பயிற்சிக்கும் கட்டுப்பாட்டுக்குமான எடுத்துக் காட்டாய்த் திகழவேண்டும் என்பதுதான் கம்யூனிஸ்டாய்ச் செயல்படுதலின் அர்த்தம். அப்போதுதான் உங்களால் கம்யூனிஸ சமுதாயமெனும் மாளிகையைக் கட்டியெழுப்பத் தொடங்கவும் அதைக் கட்டி முடிக்கவும் முடியும்.

''இளைஞர் கழகங்களின்
பணிகள்'' (1920)

★

# மேற்குலகில் அரசியல் அதிதீவிரவாதமும் இளம் மக்களும்

தொழில்மயமான முதலாளித்துவ நாடுகள் அனைத்திலும் அரசியல் பயங்கரவாதம் முனைப்பாகி வருகின்றது. இளம் மக்கள் அதில் தீவிரமாக சம்பந்தப்பட்டு வருகின்றனர். இதற்குக் காரணம் அநேக இளம் மக்கள் சமூக-அரசியல் வாய்ப்புக்களை இழந்திருப்பதும் தமது நம்பிக்கைகளை இழந்து விரக்தியடைந்திருப்பதும் ஆகும்.

## பின்னணி என்ன?

**ப**யங்கரவாதமானது முதலாளித்துவ சமுதாயத்தின் நெருக்கடி ஆழமடைவதன் ஓர் சின்னமும் விளைவும் ஆகும்; சமுதாயத்தில் விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டவர்களின் அதிருப்தி வளர்ந்தோங்கி வருவதன் வெளிப்பாடு ஆகும். அவர்களின் நலன்கள் மற்றும் கண்ணோட்டங்களின் பால் அதிகாரிகள் காட்டும் பாரபட்சமானது அத்தகைய மாறுபட்ட வழிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்வதற்கு உரிமை உண்டு என்று அவர்களை எண்ணத் தூண்டுகிறது.

மக்கள் தனித்தொதுங்குவது, குறிப்பாக இளம் மக்கள் தனித்தொதுங்குவது, மெய்யாகவே மானிட உணர்வுகளைச் சாதிக்கத் தவறுவது, சமுதாயத்தின் பரந்த பகுதியினர் தார்மீகத் தன்மையை இழப்பது, உண்மையிலேயே ஜனநாயக வடிவங்களிலான ஒழுங்கமைப்பு இல்லாமல் இருப்பது ஆகியனவே அரசியல் அதிதீவிரவாதத்தை ஏற்படுத்துவதற்கான ஆகவும் பொதுவான காரணிகளாகும். இது சமூகப் போக்குகளை அன்றாட வாழ்வுடனும் தனிநபரின் அறிவுத்துறை தேவைகள் மற்றும் வேட்கைகளுடனும் இணைக்கிறது.

வன்முறை, அரசியல் குறிக்கோள்களை அடைவதற்குப் பணியாற்ற முடியும் என்ற கற்பனை, மேற்குலகிலே வளர்ந்தோங்கிவரும் அதிதீவிரவாதத்தில் சாதாரணமான காரணியல்ல. தம்முடைய நடவடிக்கைகள், செல்வந்தர்களுக்கும் வறியோர்களுக்கும் எதிராக ஏழை மக்கள் நடத்தும் "புனிதப் போரின்" ஓர் சின்னம் என்று இந்த இளம் மக்கள் நம்புகின்றனர். ஆனால், பூர்ஷ்வா சமுதாயத்தின் இன்றைய வளர்ச்சிக் கட்டத்தில் உழைக்கும் மக்களின் ஜனநாயக ஆதாயங்களைப் பாதுகாப்பதும் வலுப்படுத்துவதும் பெரும் முக்கியத்துவம் வாய்ந்தது என்ற உண்மையை அவர்கள் அறவே காணத் தவறுகின்றனர். இந்த உழைக்கும் மக்களின் ஆதாயங்களை அழித்தொழிப்பது மக்களைப் புரட்சியில் ஈடுபடத் தூண்டும் என்ற பிழையான நம்பிக்கையை பயங்கரவாதிகள் யோசனையாகத் தெரிவிக்கின்றனர்.

மேற்குலகில் பயங்கரவாதமானது இடதுசாரி சொல்லடுக்குகளாலும் துணிவு, தியாகம், மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகளைச் சுற்றிச் சூழவுள்ள இரகசிய சூழலினாலும் ஊக்குவிக்கப்படுகிறது. இவை யாவும் இளம் மக்களின் அரசியல் பக்குவமின்மையையே குறிப்பிடுகின்றன. இவர்கள் சமூக அநீதிக்கு எதிராகத் தீர்க்கமாகச் செயல்படுகின்றனர். ஆனால் சமுதாயத்தில் காணப்படும் உண்மை நிலையை உணர்ந்து கொள்ளாதவர்களாக இருக்கின்றனர், சமூக முன்னேற்றத்திற்காகப் போராடுவதன் மெய்யான வழிகளையும் மார்க்கங்களையும் காணாமல் இருக்கின்றனர்.

இவை யாவும், அவர்களின் அதிதீவிரமான நிலைக்குக் காரணமாகும். இது தொழிலாளி வர்க்கத்திற்கும் ஜனநாயக மற்றும் இளைஞர் இயக்கங்களுக்கும் கணிசமான பாதிப்பை ஏற்படுத்துகின்றது. இது பயங்கரவாதிகளை ஜனநாயக இலட்சியத்திற்குக் குறிப்பிடத்தக்க அளவு அபாயகரமானதாக ஆக்குகிறது,

## அதிதீவிர இடதுசாரி ஸ்தாபனங்கள்

சட்டபூர்வமான அதிதீவிர ஸ்தாபனங்கள், 60—ம் ஆண்டுகளில் இருந்ததைப் போல இளம் மக்கள் மீது இப்போது பெருமளவு செல்வாக்கை செலுத்தவில்லை. ஆனால், இன்னமும் இவை போதியளவு ஜீவனுள்ளவையாகவே இருக்கின்றன. உதாரணமாக பிரான்ஸில் பிரெஞ்சு அராஜக சம்மேளனம், புரட்சிகர அராஜகவாத ஸ்தாபனம், புரோவென்ஸ் அனார்க்கோ—கம்யூனிஸ்ட் சம்மேளனம் போன்ற இன்னோரன்ன பல ஸ்தாபனங்கள் தமது வழித்தோன்றல்களைக் கொண்டுள்ளன. அவற்றின் செயற்பாடுகள் கம்யூனிஸ—விரோதப் பிரச்சாரத்திற்குள் வரம்புபட்டிருப்பது ஓர் விதியாகும்.

ட்ரொட்ஸ்கீயவாதிகள் இன்று அதிதீவிர இடதுசாரி குழுக்களில் ஆகவும் செயலூக்கமுள்ளவர்களாக விளங்குகின்றனர்.

அவர்கள் கம்யூனிஸ்ட் கட்சிகளின் இளைஞர் ஸ்தாபனங்களில் ஊடுருவல் செய்யவும் அவற்றுக்குள் இருந்தே குழிபறிக்கவமான எந்தவொரு சந்தர்ப்பத்தையும் அனுகூலமாக எடுத்துக் கொள்கின்றனர். இடதுசாரி ஸ்தாபனங்கள் மற்றும் கட்சிகளுக்கு எதிராக ட்ரொட்ஸ்கீயவாதிகள் பயன்படுத்தும் உபாயம் இதுதான். சுரண்டலாளர் அமைப்பை ''மிகக் குறுகிய வழிகள்'' மூலம் ஒழித்துக்கட்ட விரும்புகின்ற இளம் யுவர்களையும் யுவதிகளையும் வென்றெடுப்பதற்கு அதிதீவிர இடதுசாரித் தலைவர்கள் புரட்சிகரச் சொல்லடுக்கைப் பயன்படுத்துகின்றனர்.

எதார்த்தத்தில், இளைஞர்களின் ஒரு பகுதியினர் மீது தமது கட்டுப்பாட்டை மீண்டும் பெற விழைகின்ற அதிதீவிர இடதுசாரி ஸ்தாபனங்களின் செயற்பாடு, கம்யூனிஸ்ட் கட்சிகளுடன் சித்தாந்தவியல் மோதலை ஏற்படுத்துகின்றது. இக் கட்சிகள் விரிவான ஏகபோக விரோதக் கூட்டணிகளை ஸ்தாபிப்பதற்கு வகுக்கும் திட்டங்களை விரோதமான வகையில் விளக்கிக் கூற வழி வகுக்கின்றது. ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடுவதற்குப் பதிலாக அவை புரட்சிகரச் சக்திகளுக்கு எதிராகச் செயல்படுகின்றன.

## ''புதிய வலதுசாரி''

கடந்த சில ஆண்டுகளாக அதிதீவிர வலதுசாரிக் குழுக்கள் தமது நடவடிக்கைகளை ஏறக்குறைய எல்லா மேலைநாடுகளிலும் கணிசமான அளவுக்கு உள்ளியல்பாக்குகின்றன. பாரம்பர்யமான அரசியல் நிறுவனங்களோடு அதிருப்தி கொண்டுள்ளவர்களும் தமது குறைபாடுகளுக்கும் சிரமங்களுக்கும் முக்கிய ஊற்றுக்கண்ணாக தமது நாடுகளிலுள்ள அயல் நாட்டுத் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதையும் காண்கின்ற இளம் மக்கள் பகுதியினர் அதிதீவிர வலதுசாரியினரின் இனவாதப் பிரச்சாரத்திற்குத் தம்மை ஆட்படுத்திக் கொள்கின்றனர். அத்தகைய இளம் மக்கள் நவ-பாஸிச சம்பிரதாயங்கள், பலாத்காரம் போன்றவற்றினால் ஈர்க்கப்படுகின்றனர்.

இவ்விதம் இளம் மக்கள் மீதான வலதுசாரி சக்திகளின் நிர்ப்பந்தம் அதிகரித்து வருகிறது என்பதில் சந்தேகமில்லை. ஆனால், தமது சொந்த நோக்கங்களுக்காக இளம் மக்களைப் பயன்படுத்துவதற்கு முற்போக்குச் சக்திகள் மேற்கொண்டு வரும் முயற்சிகள், முற்போக்குச் சக்திகளின் போராட்டத்திற்குள் ஈர்க்கப்பட்டுவரும் இளம் மக்களைத் தடுத்து நிறுத்த முடியாது என்ற முடிவிற்கு வர எம்மைத் துணியச் செய்வது சர்வதேச இளைஞர் இயக்கத்தில் நடைபெற்றுவரும் சம்பவங்களாகும். இளைஞர் ஸ்தாபனங்கள், மற்றும் இயக்கங்களின் அரசியல் திசையமைவுகள், அவற்றுடைய போராட்டத்தின் உள்ளடக்கம், வடிவங்கள் மற்றும் குறிக்கோள்கள் ஆகியவற்றில் மிகவும் பன்முகப்பட்ட தன்மை காணப்பட்ட போதிலும் கூட இளம் தலைமுறையினரின் முற்போக்குப் பகுதியினரது பங்கு அதிகரித்து வருகிறது.

முற்போக்கு இளைஞர்கள் சமாதானத்திற்கும் படைக்குறைப்புக்குமான தமது நடவடிக்கைகளை ஜனநாயகத்திற்கான ஏகாதிபத்திய விரோதப் போராட்டத்தோடும் அடிப்படை உரிமைகளைப் பெறவும் சமூக மற்றும் தார்மீக விடுதலையைச் சாதிக்கவுமான இளம் தலைமுறையினரின் போராட்டத்தோடும் நெருக்கமாக இணைக்கின்றனர். இதுவே சமகால இளம் மக்களின் ஆகவும் குணவியல்பான போக்காக இருக்கிறது. இந்தப் போக்கிற்கு எதிராக முதலாளித்துவ நாடுகளிலுள்ள ஆளும் வட்டாரங்கள் பெரும் முயற்சிகளைச் செய்த போதிலும்கூட, இப்போக்கே வளர்ந்து வருகிறது.

சோவியத்
பத்திரிகையிலிருந்து

யூரி சம்பத்யான்
தத்துவவியலாளர்

# இன்றைய தேசிய-ஜனநாயகப் புரட்சிகள்

தேசிய-ஜனநாயகப் புரட்சிகளின் வளர்ச்சி, புதிய பொருளாதார, சமூகக் கட்டமைவுகளுக்கு எழுச்சியைத் தருகிறது; பலகட்டமைவுக் குணவியலைபக் கொண்டுள்ள பொருளாதாரங்களுடைய சோஷலிஸத் திசையமைவு நாடுகளில் ஓர் புதிய பொருளாதார ஆதாரத்தை உருவாக்குவதை மேலும் முன்னெடுத்துச் செல்கிறது. தம்முடைய அரசியல் சுதந்திரத்தை வென்றெடுத்திருப்பவையும் தம்முடைய சமூக வளர்ச்சிப் பாதையைத் தேர்ந்தெடுப்பதற்காகப் போராடுகின்றவையுமான புதிதாக விடுதலை பெற்ற நாடுகளில் இந்த அம்சம் உள்ளியல்பாகக் காணப்படுகிறது.

சோஷலிஸத் திசையமைவு நாடுகளின் அரசாங்கங்கள் பொதுத் துறை, கூட்டுறவுத் துறை, ஓரளவுக்குத் தனியார்த் துறை ஆகிய தலையாய பொருளாதாரக் கட்டமைவுகள் மீதே சார்ந்திருக்கின்றன. அவற்றைப் பற்றி என்ன கூற முடியும்?

## முன்னணியில் பொதுத் துறை

அரசு ஏனைய எல்லா கட்டமைவுகள் மீதும் செல்வாக்கு செலுத்தும் பொருட்டுக் கொண்டுள்ள பொருளாதார, அரசியல் நெம்பு கோல்களின் ஒட்டு மொத்தத்திலேயே பொதுத் துறையின் முன்னணிப் பாத்திரம் உறுதி செய்யப்படுகிறது. தேசிய—ஜனநாயகப் புரட்சிப் போக்கில் இத்துறையை உருவாக்குவதும் வலுப்படுத்துவதும் அந்நிய மற்றும் பெரும் உள்ளூர் மூலதனத்தின் சொத்துக்களைத் தேசியமயமாக்குவது, புதிய தொழிலகங்களை நிர்மாணிப்பது, உள்நாட்டுத் திரட்சிகளைப் யோகிப்பது வாயிலாகவும் சோஷலிஸ நாடுகளின் நிதி மற்றும் பொருளாயத உதவியின் வாயிலாகவும் வரம்புக்குட்பட வீதத்தில், முதலாளித்துவ நாடுகளின் நிதிச் செல்வாதாரங்களைக் கவர்வது வாயிலாகவும் பாதுகாக்கப்படுகின்றன.

இவ்விதம், அங்கோலாவின் பொதுத் துறை நாட்டின் பொருளாதாரத்தில், குறிப்பாக உற்பத்தித் துறையிலும் கனரகத் தொழிலும் ஆதிக்க நிலைகளை வகிக்கிறது. அரசுக்குச் சொந்தமான தொழிலகங்கள் உலோக மற்றும் உருக்கு, கப்பல் கட்டுவதற்கான பொருத்துக்கள், ஒட்டுப் பலகை, புடவை மற்றும் சீனி போன்றவற்றை எல்லாம் உற்பத்தி செய்கின்றன. முற்போக்கான உருமாற்றங்களுக்காக பொருளாதாரத் தளத்தை வலுப்படுத்துவதற்கு கடன் நிறுவனங்களைத் தேசியமயமாக்குவதும் அங்கோலா தேசிய வங்கியை ஸ்தாபிப்பதும் நாட்டின் புதிய நாணயக் கூறான குவான்ஸாவை அறிமுகஞ் செய்வதும் முனைப்பானவையாக இருந்தன. அரசு அந்நியக் கம்பெனிகளுடனான ஒத்துழைப்பைக் கைவிட்டுவிடவில்லை; ஆனால் அவற்றின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துகிறது, தனியார்—முதலாளித்துவ உறவுகளின் வளர்ச்சியைத் தடுக்கும் பொருட்டு அவற்றின் மீது கண்டிப்பான கட்டுப்பாடுகளைச் செலுத்துகிறது.



சோஷலிஸத் திசையமைவு நாடுகளில் அரசியல் அதிகாரத்தைப் புரட்சிகர ஜனநாயகமே கொண்டிருப்பதால், பொதுத் துறையானது ஓர் ஆதிக்கத் துறையாகப் படிப்படியாய் வளர்ந்து வருகிறது. அரசுக்குச் சொந்தமான தொழிலகங்கள், எப்போதுமே பொருளாதார ரீதியில் இலாபகரமானவையாக இயங்குவதில்லை. பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான ஆள்வலு, நிபுணத்துவ ஆளணி, நிதி மற்றும் பொருளாயத செல்வாதாரங்கள் போன்றவற்றில் பற்றாக்குறைகள் நிலவுகின்றன. இதன் காரணமாக, பொதுத் துறையானது புரட்சிகர—ஜனநாயகக் கொள்கைக்கான பிரதான பொருளாதார அடித்தளத்தை வகை செய்கிறது.

## கூட்டுறவுத் துறையின் உருவாக்கம்

தேசிய—ஜனநாயகப் புரட்சியின் மற்றுமொரு பொருளாதார அடித்தளத்தை கூட்டுறவுத் துறை அல்லது கட்டமைவு வகை செய்கிறது. அதில் உள்ளடங்கியுள்ள தொழிலகங்கள் அனைத்து மக்களுக்குமன்றி, தனித்தனியான உழைப்புக் கூட்டுக்களுக்கே உரியவை. சோஷலிஸ திசையமைவு நாடுகளில் பண்ணை நிலங்கள் யாவும் அரசுக்கோ அல்லது ஓர் குறிப்பிட்ட கூட்டுறவு ஸ்தாபனத்தின் உறுப்பினர்களுக்கோ உரியது. தேசிய—ஜனநாயகப் புரட்சியின் போக்கில் கூட்டுறவுச் சங்கங்களை ஸ்தாபிப்பதில்

சம்பந்தப்பட்டுள்ள ஸ்தூல மான வடிவங்கள், முறைகள், கட்டங்கள், வீதங்கள் ஆகிய வற்றில் பன்முகத்தன்மை இருந்துவந்த போதிலும் கூட. விடுதலை பெற்ற நாடுகளில் இப்போக்கு மாறிச் செல்லும் காலகட்டத்திற்குப் பொதுவானது, அரசியல் அதிகாரம் புரட்சிகர ஜனநாயகத்தின் கைகளில் இருப்பதால், இந் நாடுகளிலுள்ள உற்பத்தியாளர் கூட்டுறவுகள், சோஷலிஸ வகையான கூட்டுறவுகளுக்கு மாறிச் செல்லும் ஓர் கட்டத்தைப் பிரதிபலிக்கின்றன.

## வெற்றிகளும் சிரமங்களும்

சோஷலிஸத் திசையமைவு நாடுகளின் பொருளாதாரங் களது அடிப்படையைக் கொண் டுள்ள அரசு மற்றும் கூட்டுற வுத் துறைகளோடு, உள்ளூர்த் தேசிய முதலாளித்துவத்தின தும் அந்நிய ஏகபோகங்களதும் சொத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு துறையும் உள் ளது, வளர்ச்சி நோக்கங்களுக் காகத் தனியார் மூலதனத்தை குறிப்பாகத் தொழில் துறை யைப் பயன்படுத்தும் ஓர் சோஷ லிஸத் திசையமைவு நாடு, தவிர்க்க முடியாத மாறுபட்ட பின் விளைவுகளையும் அதன் செயற்பாட்டுச் சிக்கல்களையும் தொடர்ச்சியாகக் குறைக் கிறது,

தேசிய ஜனநாயகப் புரட்சி யின் போக்கில், பொருளாதார உருமாற்றங்கள் நாட்டின் பொருளாதார ஆதாரத் தளத்தை மேலும் வலுப் படுத்துகின்றன; அதனது தொழில்துறை மற்றும் விவ சாய உற்பத்தியின் வளர்ச் சிக்கு உதவுகின்றன.

ஆயினும் கூட, 1980ம் ஆண்டு களின் நடுப்பகுதியில் சோஷ லிஸத் திசையமைவு நாடுகள் பல பொருளாதார வளர்ச்சி வீதங்களில் ஓர் வித வீழ்ச்சி யைப் பதிவு செய்தன; சில பொருளாதார மந்த நிலைகளா லும் பாதிக்கப்பட்டன. மொஸாம்பிக்கிலும் செய் செலஸ் குடியரசிலும் 8.2 சத வீத உற்பத்தி வீழ்ச்சி காணப் பட்டது. பெனின் பூஜ்ய வளர்ச் சியையும் தன்சானியா, மட காஸ்கர் ஆகியன முறையே 0.5, 1.4 சதவீத வளர்ச்சியை யும் பதிவு செய்தன. சோஷ லிஸத் திசையமைவு நாடுகள் யாவும் ஒரே மாதிரியான கடமைகளுக்கு முகங் கொடுக் கின்றன.

★

அரசியல் கல்வி

# சோஷலிஸத்துக்கு மாறிச்செல்வதற்கான மார்க்கங்கள்

''விஞ்ஞான சோஷலிஸம்'' பற்றிய அரசியல் கல்விக் கட்டுரைகளின் வரிசையில் இது இரண்டாவது. சோஷலிஸத்துக்கு மாறிச் செல்வது தவிர்க்க முடியாதது என்பதையும் இந்த மாற்றம் இடம்பெறும் மார்க்கங்கள் பற்றியும் இக்கட்டுரை விளக்குகிறது.

சோஷலிஸ சமுதாயம் என் றால் என்ன? முதலாவதாக, சோஷலிஸம் என்பது சமூக—பொருளாதார உருவாக்கம் என்பதை குறிப்பிடாக வேண் டும்; இது சுரண்டல் வர்க்கங் களை ஒழித்துக் கட்டுவது, தேசியப் பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளிலும் உற்பத் திச் சாதனங்களிலும் கருவிகளி லும் சோஷலிஸ சமூகச் சொத் துடைமையை ஸ்தாபிப்பது ஆகியனவற்றின் காரணமாக முதலாளித்துவத்தை தள்ளி வைக்கிறது.

## சோஷலிஸம்

சோஷலிஸத்தின் வளர்ச்சி, அதனது பரிபக்குவத்தின் பல் வேறு பரிமாணங்களைப் பிரதி பலிக்கும் தலையாய கட்டங்க ளின் ஊடாகச் செல்கிறது. முதலாவது, தொடக்கக் கட்

டத்தில், சோஷலிஸமானது அத்தகைய சமுதாயத்தின் அடித்தளங்களை நிர்மாணிப்பதற்கும் பரிபக்குவமடைந்த காலகட்டத்துக்குள் அது பிரவேசம் செய்வதற்கும் இடைப்பட்ட காலத்தை உள்ளடக்குகிறது. இரண்டாவது, வளர்ச்சியுற்ற சோஷலிஸ சமுதாயமாகும்.

சோஷலிஸத்தினுடைய பொருளாதார அமைப்பினது அடிப்படையை, உற்பத்தியின் சாதனங்கள், கருவிகளில் சோஷலிஸச் சொத்துடைமை வகை செய்கிறது. சோஷலிஸத்தின் பிரதான சிறப்பம்சங்களில் ஒன்று. தேசியப் பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளதும் சமூக வாழ்வின் ஏனைய எல்லா அம்சங்களதும் விகிதாசாரமான வளர்ச்சியை உறுதி செய்யும் திட்டமிட்ட உற்பத்தி ஒழுங்கமைப்பும் அனைத்து சமூக வாழ்வும் ஆகும். சோஷலிஸத்தின் பொருளாதாரம் சமுதாயத்தின் வளர்ந்தோங்கிவரும் பொருளாயத, கலாசாரத் தேவைகளைத் திருப்தி செய்வதை மார்க்கமாகக் கொண்டிருக்கிறது; அது மக்களது நலவாழ்வின் துரிதமான முன்னேற்றத்தை உறுதி செய்கிறது தனிநபரின் சர்வாம்சம் தழுவிய வளர்ச்சிக்குச் சாதகமுள்ள சூழ்நிலைகளை உருவாக்குகிறது.

சோஷலிஸம் உழைக்கும் மக்களின் சமுதாயத்தை உருவாக்குகிறது: இதில, உடல் வலுவுள்ள ஒவ்வொரு நபரும் தனது திறமைக்கு ஏற்ப உணர்வுபூர்வமாக உழைக்கும் கடமையைக் கொண்டிருக்கிறர்: அவரது உழைப்பின் தரத்துக்கு ஏற்ப ஊதியம் பெறும் உரிமையைப் பெற்றிருக்கிறர். சோஷலிஸத்தின் முக்கியமான கோட்பாடு, ''ஒவ்வொருவரிடமிருந்தும் அவரின் திறமைக்கேற்பவும் ஒவ்வொருவருக்கும் அவரின் உழைப்புக்கேற்பவும்'' என்பதாகும். இக்கோட்பாடு பின்வருமாறு விளக்கப்படுகிறது. ''உழைக்காதவன், உண்ணுமல் இருப்பாணுக''. இதன் பொருள்பற்றி பேசுகையில் லெனின் எழுதியதாவது: ''இந்த சாதாரண, தொடக்க நிலையான, வெளிப்படையான உண்மை, சோஷலிஸத்தின் அடியாதாரமாக விளங்குகிறது, அதனது வலிமையின் வற்ருத ஊற்றுக்கண்ணுக விளங்குகிறது, அதனது இறுதி வெற்றிக்கு அழிக்கவொண்ணுத வாக்குறுதியாக விளங்குகிறது.''

ஆகவும் பயன்தரவல்லதும் உயர்தரமானதுமான உழைப்பை ஊக்குவிப்பதற்கு பொருளாயத, தார்மீக முன்முயற்சிகளின் பல்வேறு வடிவங்களைப் பயன்படுத்துவது சோஷலிஸத்தின் கீழ் ஸ்தூலமான தேவையாகும்: செய்யப்பட்ட வேலையின் அளவுக்கும் தரத்துக்கும் ஏற்ப பங்கீடு செய்யும் கோட்பாட்டை முரணின்றி நடைமுறைப் படுத்துவதன் மூலம் மாத்திரமே, தமது திறமைக்கு ஏற்ப பொது நன்மைக்காகச் சுயவிருப்பத்துடன் உழைக்கும் பழக்கத்தைத தனிநபர்களில் வித்தூன்றச் செய்வதும் வருங்காலத்தில் ஒருவரின் தேவைகளுக்கு ஏற்ப பங்கீடு செய்வதற்கு மாறிச் செல்வதும் சாத்தியமாகும் இது கண்டிப்பான கணக்கியல் மற்றும், சோஷலிஸத்தில் கீழ் உழைப்பு மற்றும் நுகர்வு நடவடிக்கை மீது கட்டுப்பாடு செலுத்துவது, சரியான ஒழுங்கமைப்பையும் கண்டிப்பான ஒழுங்கையும் உறுதிசெய்வதற்கு ஆற்றப்பட்டுள்ள பணி ஆகியவற்றின் முக்கியத்துவத்தை முன்நிர்ணயம் செய்கிறது.



சோஷலிஸம் என்பதன் பொருள், நகரத்திற்கும் கிராமத்திற்கும் இடையே, மூளை உழைப்பிலும் உடல் உழைப்பிலும் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கிடையே காணப்படும் வேறுபாடுகளை ஒழித்துக்கட்டுவது ஆகும்; அவற்றுக்கு இடையே காணப்படும் அடிப்படை வேறுபாடுகளைப் படிப்படியாக வெற்றிகொள்வதை அது உறுதி செய்கிறது; சர்வதேச நட்புறவு ஸ்தாபிக்கப்பட்டு, ஊக்குவிக்கப்படுகிறது. தனிநபர் ஒரு புதிய பிரக்ஞையைப் பெறுகிருர்; அவர் ஓர் பிரஜையாக, ஒரு தேசபக்தராக, ஓர் சர்வதேசியவாதியாக மாறுகிருர். சோஷலிஸத்தின் கீழ் தனிநபர்களுக்கும் கூட்டுக்கும் சமுதாயத்துக்கும் இடையிலான உறவுகள் மென்மேலும் இசைவிணக்கமுள்ளவையாகின்றன; அதேசமயம், சமுதாயத்தின் உறுப்பினர்களுக்கு இடையிலான உறவுகள ஒத்துழைப்பையும் பரஸ்பர உதவியையும் மென்மேலும் கூடுதலாக உள்ளடக்குகின்றன.

சோஷலிஸம் மெய்யான ஜனநாயகத்தின் சமுதாயம் ஒன்றை அறிமுகஞ் செய்கிறது; சோஷலிஸ ராஜ்யத்துவத்தின் சமூக அடித்தளம் வியாபிதமடைவதுடன் பாட்டாளி வர்க்க ஜனநாயகமும் அனைத்து மக்களதும் ஜனநாயகமாக வளர்ச்சியடைகிறது சோவியத் யூனியனில், ஜனநாயகத்தின் அரசியல் யாப்பு ரீதியான அடித்தளங்கள் 1977ம் ஆண்டின் அரசியல் யாப்பில் முறையாக வகுத்துரைக்கப்பட்டிருக்கின்றன.

## சோஷலிஸப் புரட்சி

முதலாளித்துவத்திலிருந்து சோஷலிஸத்துக்கு மாறிச்செல்வது சோஷலிஸப் புரட்சியினூடாக மேற்கொள்ளப்படுகிறது; இது, தூக்கிவீசப்பட்ட வர்க்கங்களது எதிர்ப்பின் செறிவுக்கு ஏற்ப, அமைதிபூர்வமான முறையிலோ அல்லது அமைதிபூர்வ மற்ற முறையிலோ முன்செல்கிறது.

சுரண்டலின் வடிவங்களில் மாற்றங்களுக்கு இட்டுச்சென்ற ஏனைய சமூகப் புரட்சிகளது வகைகளுக்கு வேறுபட்ட விதமாக, சோஷலிஸப் புரட்சி சுரண்டல் அமைப்பு முழுவதையும் ஒழித்துக் கட்டுகிறது. கார்ல் மார்க்ஸ் அதையோர் திருப்புமுனையாக நோக்கினர்.

சோஷலிஸப் புரட்சியின் பொருளாகார அடித்தளம், உற்பத்தியின் சமூக இயல்புக்கும் முதலாளித்துவச் சொத்து அமைப்பு மற்றும் சொத்துடைமை உறவுகளுக்கும் இடையிலான மோதலாகும். அதைத் தவிர்த்து விடவும் அரைவாசி நடவடிக்கைகளைக் கொண்டு சோஷலிஸத்துக்கு மாறிச் செல்லவும் முதலாளித்துவவாதிகள் எடுக்கும் சகல பிரயத்தனங்களும் வெற்றியடைய முடியாது. முதலாளித்துவவாதிகளுக்குத் தற்காலிக தந்திரோபாய அனுகூலங்களைக் கொடுக்கும் இந்த நடவடிக்கைகள், முதலாளித்துவ உற்பத்திமுறையின் முக்கிய

முரண்பாட்டை — உழைப்புக்கும் மூலதனத்துக்கும் இடையிலான முரண்பாட்டை அதிகரிக்கச் செய்கின்றன. இம்முரண்பாட்டிலிருந்து மீள்வதற்கான மார்க்கம் புரட்சியே. இது முதலாளித்துவத்தின் இயல்பான, தர்க்கரீதியான பின்விளைவுகளிலிருந்து முகிழ்கிறது.

முதலாளித்துவத்தின் கீழ் முக்கியமான உற்பத்திச் சக்தியான தொழிலாளி வர்க்கம், உற்பத்தி உறவுகளின் அமைப்பிற்குள் அதன் நிலைப்பாடு காரணமாக, சோஷலிஸப் புரட்சியின் முக்கிய இயக்கச் சக்தியின் பாத்திரத்துக்குக் கொண்டுவரப்படுகிறது. இதில் தான் அதன் வரலாற்றுப் பணி உள்ளது. முதலாளித்துவத்தின் கீழ் வாழ்க்கை மற்றும் உழைப்பு நிலைமைகள், அதாவது முதலாளித்துவத்தை ஒழித்துக்கட்டவும் சோஷலிஸ சமுதாயத்தை நிர்மாணிக்கவுமான கடமையைச் சாதிப்பதில் தவிர்க்கமுடியாததான புரட்சிகரப் பண்புகளை பாட்டாளி வர்க்கத்துக்குக் கொடுக்கிறது.

ஏகபோக முதலாளித்துவத்தினால் செலுத்தப்படும் வளர்ந்தோங்கிவரும் அடக்குமுறையினால் ஏனைய வர்க்கங்களும் சமூகக் குழுக்களும் துன்புறுகின்றன. அவற்றின் நிலைப்பாடுகள், அவற்றைத் தொழிலாளி வர்க்கத்திற்குச் சமீபமாகக் கொண்டுவருகின்றன, சமுதாயத்தின் சமூகச் சீர்திருத்தத்துக்கான போராட்டத்தில் அதன் நேசசக்திகளாக மாறும் ஆற்றலைப் பெறுகின்றன. தொழிலாளி வர்க்கத்துக்கும் உழைக்கும் மக்களின் பாட்டாளி வர்க்கமல்லாத பகுதியினருக்கும் இடையிலான கூட்டணி, சோஷலிஸப் புரட்சியின் வெற்றிக்கு ஓர் தவிர்க்க முடியாத நிபந்தனை. இதில், தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகரக் கட்சிக்குப் பெரும் பாத்திரம் உள்ளது. இக்கட்சி, தொழிலாளர் இயக்கத்துள் சோஷலிஸப் பிரக்ஞையைப் புகுத்துகிறது, வெகுஜனங்களுக்குக் கல்வி புகட்டுகிறது, ஒழுங்கமைக்கிறது, வர்க்கப் போராட்டத்தின் போர்த்தந்திரத்தையும் மூலோபாயத்தையும் வளர்க்கிறது, புரட்சிகர இயக்கத்துக்கு அரசியல் தலைமையை வகை செய்கிறது.

தொழிலாளி வர்க்கமும் அதன் நேச அணிகளும் அரசியல் அதிகாரத்தை வென்றெடுப்பதே சோஷலிஸப் புரட்சியின் முதலாவது நடவடிக்கை. பாட்டாளி வர்க்கம் அமைதிபூர்வமான வழியிலோ அல்லது அமைதிபூர்வமற்ற வழியிலோ அதிகாரத்தை எடுத்துக் கொள்ள முடியும். தொழிலாளி வர்க்கம் தனது குறிக்கோளை அமைதிபூர்வ மார்க்கங்கள் மூலம் பயன்படுத்தி, மக்களின் பெரும் பகுதியினரை சோஷலிஸத்தின் பக்கம் வென்றெடுப்பதற்கு ஆளும் வர்க்கங்கள் எங்கெல்லாம் தடைவிதிக்கின்றனவோ, புரட்சிகர முன்னணிப் படையின் சட்டபூர்வமான செயல்பாட்டைப் பலவந்தமாக அடக்குகின்றனவோ அங்கெல்லாம் அதிகாரத்தை வென்றெடுப்பதற்காக ஆயுதங்களைப் பயன்படுத்துவது அவசியமாகிறது, நியாயப்படுத்தப்படுகிறது. ஆளும் வர்க்கங்கள், தமக்குச் சாதகமில்லாத சக்திகளின் பரஸ்பர உறவு காரணமாக, வெகுஜனங்களுக்கு எதிராய் எங்கெல்லாம் பகிரங்கமாகவே வன்முறையைப் பிரயோகிக்க முடியாமல், அல்லது பிரயோகிக்காமல் இருக்கின்றபோது, தொழிலாளி வர்க்கம் அமைதிபூர்வமாக அதிகாரத்தை எடுத்துக்கொள்ளும் வாய்ப்பு தோன்றுகிறது.



முதலாளித்துவத்திலிருந்து சோஷலிஸத்துக்கு மாறிச் செல்வது ஓர் உலகளாவியப்போக்கு; இது உலக அமைப்பு என்ற வகையில் ஏகாதிபத்தியத்தின் முரண்பாடுகளிலிருந்து வளர்கிறது. ஆனால் முதலாளித்துவத்தின் சமதையற்ற வளர்ச்சி காரணமாக இம்முரண்பாடுகள் வெவ்வேறு நாடுகளில் சமதையின்றி வளர்கின்றன. புரட்சியின் சமூக—அரசியல் சக்திகளைப் பொறுத்தவரையில், முரண்பாடுகளது முனைப்பான அம்சங்கள் போதியளவு பரிபக்குவம் அடைந்திருக்கும் பட்சத்தில், அவை ஏகாதிபத்தியத்தின் சங்கிலியில் பலஹீனமான கண்ணியாக மாறுகின்றன. இதன் காரணமாகவே, பல்வேறு நாடுகளில் பல்வேறு காலங்களில் சோஷலிஸம் வெற்றி பெறுகிறது. ஆரம்பத்தில், அது ஒரு நாட்டில், 20-ம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் ஏகாதிபத்திய அமைப்புக்குள் மிகவும் பலஹீனமான கண்ணியாகவிருந்த ருஷ்யாவில் வெற்றி பெற்றது.

மகத்தான அக்டோபர் சோஷலிஸப் புரட்சி (1917), வாகைசூடிய முதலாவது பாட்டாளி வர்க்கப் புரட்சியாகும். அது, முதலாளித்துவத்திலிருந்து சோஷலிஸத்துக்கு மாறிச் செல்லும் சகாப்தத்தைத் திறந்துவைத்தது; முதலாளித்துவம் அதன் பொது நெருக்கடியின் காலகட்டத்துள் பிரவேசித்தது; அதன் தோற்றுவாய்கள் மற்றும் அம்சங்கள் அனைத்தையும் அது பாதித்தது. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர், அநேக நாடுகள் முதலாளித்துவ அமைப்பிலிருந்து வீழ்ந்தன. பிற்காலத்தில், அமெரிக்கக் கண்டத்திலேயே முதலாவதான கியூபாப் புரட்சி வெற்றி பெற்றது.

## முதலாளித்துவமற்ற வளர்ச்சிப் பாதை

நிலப்பிரபுத்துவக் கட்டத்தில் உள்ள நாடுகளும் மக்களும் சோஷலிஸத்துக்கு மாறிச்செல்வது சாத்தியம். முதலாளித்துவத்தினூடாகச் செல்லாமல் அவை சோஷலிஸத்திற்கு மாறிச்செல்ல அனுமதிப்பது முதலாளித்துவமற்ற வளர்ச்சிப் பாதையாகும்.

மக்களின் புரட்சிகர விடுதலைப் போராட்டத்தில் பெரும் அனுபவம் பெறப்பட்டிருக்கிறது; இதைச் சாதிப்பதற்கு ஸ்தூலமான—வரலாற்று மார்க்கங்கள் பலவற்றைத் தனிமைப்படுத்திக் காட்டுவதற்கு இது அனுமதிக்கிறது. பாட்டாளி வர்க்கக் கட்சியின் தலைமையிலான பல்தேசிய மத்தியஸ்துவப்படுத்தப்பட்ட ராஜ்யத்துக்குள் முதலாளித்துவமற்ற வளர்ச்சிப் பாதையைக் கடந்த சோவியத் கிழக்கின் மக்களது புரட்சிகர நடைமுறையில், அவற்றில் ஒன்று (சோவியத்) உள்ளடக்கம் பெற்றது. மற்றையது (மக்கள் ஜனநாயகம்), மக்கள் மங்கோலியாவில் முதலில் பிரயோகிக்கப்பட்டது.

கலோனியல் அமைப்பின் சிதைவினுல் தோன்றிய நிலைமைகளில், முதலாளித்துவமற்ற பாதைகளினூடாக வளர்ச்சியுறும் ஒரு புதிய மார்க்கமாக சோஷலிஸத் திசையமைவு மாறியது. சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 27-வது காங்கிரஸில் வலியுறுத்தப்பட்டதைப் போன்று, ''புதிதாக விடுதலை பெற்ற பல நாடுகள் தேர்ந்தெடுத்துள்ள முதலாளித்துவமற்ற வளர்ச்சிப் பாதை, சோஷலிஸத் திசையமைவுப் பாதை, சமூக முன்னேற்றத்துக்கு விரிவான வாய்ப்புகளைத் திறந்துவைக்கிறது. இன்றைய நிலைமைகளில், உலகச் சக்திகளின் அணிசேர்க்கையுடன், முன்னைய அடிமைப்பட்டிருந்த மக்கள் முதலாளித்துவத்தை நிராகரிப்பதற்கும் உழைக்கும் மக்களின் நலன்களுக்காக சுரண்டலாளர்கள் இல்லாமல் தமது வருங்காலத்தை நிர்மாணிப்பதற்கும் பெரும் வாய்ப்புக்களைக் கொண்டிருக்கின்றனர் என்பதை இந்நாடுகளின் அனுபவம் ஊர்ஜிதம் செய்கிறது. இது, பெரும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இயல் நிகழ்வாகும்.''

சோஷலிஸத் திசையமைவானது, முதலாவதாக, முன்னணிப்படையான புரட்சிகர—ஜனநாயகக் கட்சிகள், ஸ்தாபனங்களினுல் பிரதிநிதித்துவம் செய்யப்படுகிறது. இப்பாதையின் சமூக-பொருளாதார அடிப்படை, பொருளாதாரத்தின் பொதுத் துறையினுலேயே வகைசெய்யப்படுகிறது; அதே சமயம் குட்டிபூர்ஷ்வா பெரு ஜனங்கள் மற்றும் மத்தியதர சமூகப் பகுதியினர், குறிப்பாக அறிவுத் துறையினர், அலுவலக ஊழியர்கள், உழைக்கும் விவசாயிகள், உழைக்கும் மக்களின் பாட்டாளி வர்க்க மற்ற பகுதியினர் ஆகியோரின் பரந்த அடிப்படையிலான முகாமின் புரட்சிகர ஜனநாயக அதிகாரமே அரசியல் அடிப்படையாக விளங்குகிறது.

விமோசனமடைந்த நாடுகளின் முதலாளித்துவமற்ற வளர்ச்சிப் பாதைக்கு, உலக சோஷலிஸ அமைப்பினுல் வழங்கப்பட்டுவரும் சர்வாம்ச ஆதரவே பெரும் முக்கியத்துவம் வாய்ந்தது.

இப்பாதையும் சோஷலிஸத் திசையமைவுப் பாதையும் ஏகாதிபத்திய விரோத, தேசிய-ஜனநாயகப் புரட்சியினது திட்டவட்டமான வளர்ச்சிப் போக்கு, முதலாளித்துவம் ஆதிக்கநிலையிலில்லாத பொருளாதார ரீதியில் வளர்ச்சி குன்றிய நாடுகளில் சோஷலிஸப் புரட்சியாக வளரக் கூடியதாய் நோக்கப்படுகிறது.

சோஷலிஸத் திசையமைவுக்கு மாறிச்செல்வது, தன்னியல்பாக இடம்பெறுவதில்லை; அது கடுமையான வர்க்கப் போராட்டத்தின் விளைவாகும்.

சோவியத் பத்திரிகையிலிருந்து

★

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாக
பதிவு செய்யப்பட்டது.

சோஷலிஸம்
தத்துவமும் நடைமுறையும்

இம்மாத சஞ்சிகையைப் பெற பின்வரும் முகவரிக்கு
எழுதுங்கள்:

**சோஷலிஸம் தத்துவமும் நடைமுறையும்**
சோவியத் தூதரக தகவல் பிரிவு,
27, சர் ஏர்னஸ்ட் டி சில்வா மாவத்த,
கொழும்பு-7.